
கல்கி

KALKI 1-11-81 ரூ. 1.20





தனித்தன்மை வாய்ந்த
இவரது தணியாத விருப்பம்
'ப்ளெயின்' ஷர்ட்டிங் மட்டும் அணிவதே
அதாவது மஃபத்லால் வழங்கும்
பாலியெஸ்டர் மற்றும் பாலியெஸ்டர்
ப்ளெண்டுகளின் ஷர்ட்டிங்.
அவருக்கென ஒரு தனி பாணி, தனி ரசனை.
பறைசாற்றமாட்டார், என்றும் பவ்வியமாக இருப்பார்.
தனக்கே உரிய தனித் தோற்றத்தை வலியுறுத்துவார்.
மஃபத்லால்
ஷர்ட்டிங்
MF-124-TAM

விண்வெளியில் 007

ஆவியார் துறையில் விமானத் தயாரிப்பு நிறுவனங்கள் நமக்குத் தெரியும். கோடானு கோடீஸ்வரன் ஹியூகோ டிராக்ஸ் மூன் ரேக்கர் என்ற பெயரில் விண் கலன்களை தயாரிக்கிறான்!

அண்மையில் அமெரிக்கா விண்ணுக்கு அனுப்பித் திரும்பச் செய்த கொலம்பியா விண்கலன் இந்த மூன் ரேக்கரிடம் பிச்சை வாங்க வேண்டும்! — கற்பனையில்தான்.

ஹியூகோ டிராக்ஸ் தனது ஒரு விண் கலத்தை பிரிட்டிஷ் அரசுக்குக்கடனாகத் தர(!) அது காணாமல் போக....(!)

கண்டுபிடிப்பது......?

வேறு யார்? **007**

ஜேம்ஸ் பாண்ட் முதலில் அமெரிக்காவுக்குப் பறந்து டிராக்ஸின் விண்கலங்கள் தொழிலகத்தை ஆராய்ந்து, பிறகு இதாலிக்கும் அப்புறம் ரியோடிஜெனிரோவுக்கும் போய்த்துப்புகள் துலக்கி...கடைசியில் டிராக்ஸின் ரகசியமான விண்வெளி நிலையத்துக்கே போகிறான்!

போராட்டமெல்லாம் பாண்டை இயற்கை எழில் சூழ்கிறது! ஆபத்துக்கள் சூழ்கின்றன! அழகிகளும் சூழ்ந்துகொள்கிறார்கள்!

ஆபத்துக்களை யெல்லாம் வெல்கிறான் பாண்ட்! அழகிகளை வெல்லாமலா இருப்பான்!


கடைசியில் டிராக்ஸேதான் வில்லன் என்றும் எல்லா பாண்ட் படங்களிலும் வருகிற வில்லன்கள் மாதிரி இவனும் உலகை அழிக்கத் திட்டமிட்டிருக்கிறான் என்றும் தெரிய வருகிறது!

தக்க சமயத்தில் நடவடிக்கை எடுத்து பாண்ட் உலகைக் காப்பாற்றுகிறான்!

விண்வெளி நிலையத்திலிருந்து விஷ வாயு அனுப்பி, உலகில் மனித குலத்தை அழித்து, விஞ்ஞான ரீதியாகத் தான் உருவாக்கிய குற்றம் குறையே இல்லாத மனிதர்களை மட்டும் உலவ விட்டு, புதிய உலகம் படைக்கலாம் என்ற டிராக்ஸின் ஆசையில் மண் விழுகிறது!!!!!!!!!!!!!!!!!!!!!!

படத் தயாரிப்பாளர் மடியில் பணம் கொட்டுகிறது. இதில் மட்டும் ஆச்சரியம் இல்லை. MOON RACKER படம் அப்படி.

-த.மு.ப.



சிதறல்கள்

'இன்று இந்தியாவில் உள்ள மிகச் சில உண்மையான காந்தியவாதிகளுள் ஒருவர்' என்று தமிழக கவர்னரா யிருந்த திரு பட்வாரி அவர்களால் புகழப்பட்டவர் திருமலை. சென்னை, மயிலாப்பூர், காந்திஜி அமைதி நிலையத்தின் செயலாளராக 1973ம் வருடத்திலிருந்து இருந்து வரும் இவருடைய சஷ்டியப்த பூர்த்தி அண்மையில் நடந்தது. 'உலக இதய ஒலி' என்று ஓர் இலக்கிய மாதப் பத்திரிகையையும் மகாத்மா காந்தியின் வாழ்க்கையையும், கருத்துக்களையும் மக்களிடையே பரப்பும் நோக்கத்துடன் 'தி ஜாய் ஆஃப் லிவிங்' என்று ஆங்கிலத்திலும், 'காந்தியடிகள் வாழ்வும், வாக்கும்' என்று தமிழிலும் இரண்டு மாதப் பத்திரிகைகளும் நடத்தி வருகிறார். காந்திஜியின் வாழ்க்கை வரலாறு அவரது கொள்கைகள் பற்றி யெல்லாம் அஞ்சல் வழிப்பாடமும், அதில் தேர்வும் நடத்தி, சான்றிதழ்கள் வழங்கி வருகிறார். இருபத்தாறு பாடங்கள் கொண்ட இந்த மூன்று மாத கால கோர்ஸுக்கான கட்டணம் ரூபாய் ஏழுதான். திருமலை மாணவராய் இருந்த காலத்தில் காங்கிரஸ் கூட்டங்களில் எல்லாம் கதர்த் துணி விற்று, காங்கிரஸ் கட்சிக்கு நிதி சேர்த்துத் தந்தவர்.

எஸ். சந்திரமௌலி

பத்திரிகைக்கு ஏதாவது சினிமா பற்றிச் செய்தியோ, சந்தேக விளக்கமோ, ஸ்டில்லோ தேவைப்பட்டால் உடனே ''பிலிம் நியூஸ் ஆனந்தனுக்கு ஃபோன் பண்ணுங்கள்'' என்று தான் ஆசிரியரின் உத்தரவு பிறக்கும்!

புகைப்படக் கலைஞராக சினிமாத் துறையில் புக எண்ணிய ஆனந்தன் திசை மாறி பிலிம் நியூஸ் என்ற பத்திரிகையில் பணியாற்றினார். பிறகு அப்பத்திரிகை நின்று போனாலும் பிலிம் நியூஸ் ஆனந்தன் என்ற பெயர் மட்டும் நிலைக்கப் பல பத்திரிகைகளுக்குச் சினிமாப் படங்களையும் செய்திகளையும் விநியோகித்துவரத் தொடங்கினார்! 'ல திரைப் படங்களுக்குப் பொது ஜனத் தொடர்பு அதிகாரி யாகப் பணியாற்றும் வாய்ப்புக்கள் கிடைத்தன.

1954ம் வருடத்திலிருந்து ஒவ்வொரு படத்துக்கும் ஸ்டில் சேகரித்து வந்ததோடு அந்தப் படத்தின் தொழில் நுணுக்க நிபுணர்களின் பெயர்ப் பட்டியலையும் திரு ஆனந்தன் சேகரிக்க ஆரம்பித்தார்.

இதுவரை தென்னிந்தியாவின் நாலு மொழிகளில் 6000 படங்களுக்கு மேல் வெளியாகியுள்ளன. அவற்றில் இவரிடம் 4500 படங்களுக்குரிய புகைப்படங்களும் இதர தகவல்களும் உள்ளன.

நவம்பர் மாதத்தில் ஐம்பதாண்டு திரையுலகக் கண்காட்சி ஒன்று நடத்த ஏற்பாடு செய்து வருகிறார்!


பிரெஞ்சு ஆராய்ச்சியாளர் ஒருவர் ''ஐம்பதாண்டு தமிழ் சினிமா'' என்ற ஆராய்ச்சி நூல் எழுதுவதற்குத் திரு ஆனந்தனின் உதவியைத்தான் நாடியிருக்கிறார்! **பி.எஸ்.எம்.**

மாக்கோலம், ரங்கோலிக் கோலங்கள் பார்த்திருக்கிறோம். குமாரி ஜெயந்தி ராமானுஜம், பண்டிகை தினங்களில் நவதானியங்களை வைத்துக் கோலம் போடுகிறார். ''இது தானிய லக்ஷ்மி வழிபாடு'' என்றார். இந்த நவதானியக் கோலத்தில் துவரை, உளுந்து, பச்சப்பயறு, வெந்தயம், நெல், கம்பு, கேழ்வரகு, மொச்சைக் கொட்டை, கோதுமை ஆகியன பயன்படுத்தியிருந்தார். தானியங்கள் நன்றாக வளர்ந்து நாட்டில் சுபிட்சம் நிலவ வேண்டும் என்று பிரார்த்தனையுடன் இதனைப் போட்டாராம். ஒரு சிக்கல், ஜன்னல்கதவுகளைத் திறந்து வைத்தால் குருவிகள் உள்ளே புகுந்து கோலத்தை நாசமாக்கிவிடும்! எறும்புகள் எடுத்து விடா வண்ணமும் பாதுகாப்புச் செய்ய வேண்டும். நல்ல வாசனை இருந்தால் பூச்சிகள்வராது. அதனால் அடிக்கடி சாம்பிராணி போட வேண்டும் அல்லது ஊதுவத்தி கொளுத்தி வைக்கவேண்டும்.

குமாரி ஜெயந்தியின் தந்தை ராமானுஜம், ஃபிலிம் சேம்பர் ஆஃப் காமர்ஸின் தலைவர்.

— ''சிக்கி''

✖ திருமலை



✖ ஆனந்தன்



✖ குமாரி ஜெயந்தி




காபரே டான்ஸுக்கும் கர்நாடக சங்கீதமா?



கடுகு பதில்கள்

✖ வி. நாராயணசாமி, சென்னை-34
கே. வயதான பெற்றோர்களைத் தம்முடன் வைத்து ஆதரிக்கத் தற்கால மக்கள் விரும்புவதில்லையே, ஏன்?

ப: இன்று உலகமே ரூபா-பைசாவைச் சுற்றித்தான் இயங்குகிறது. முன் காலத்தில் அனைவரும் விவசாயம் செய்வார்கள். வருவாய் எல்லாருக்கும் பொது. இன்று ஒரே வீட்டில் வெவ்வேறு வருவாய் ஒவ்வொருவருக்கும் அமைகிறது. இதன் காரணமாகத் தார தம்மியங்கள் ஏற்படுகின்றன. வருவாய் இல்லாத வயதான பெற்றோர் ஒரு செலவு இனம். ஆகவே பிள்ளைகள் ஒவ்வொருவரும் அவர்களை மற்றவர்களிடம் தள்ளிவிடத்தான் பார்ப்பார்கள். பெற்றோர்களைக் கறவை மாடுகளாகக் கருதாமல் சேவைக்குரியவர்களாக எண்ணுபவர்களைப் பாராட்டலாம்.



✖ நிரஞ்சனாசந்தானம், புதுவை
கே. இளையராஜா நல்ல தூக்கி விட்டாரே மறுபடியும்?

ப: முக்கியமாக 'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் மன்னன் புகுந்து விளையாடி இருக்கிறார். ஃப்ரேமுக்கு ஃப்ரேம் யோசித்து உழைத்து இசை சேர்த்து நகாசு வேலை பண்ணியிருக்கிறார். (இளையராஜாவுக்கு ஒரு குட்டி கேள்வி: நெற்றிக் கண் படத்தில் காபரே டான்ஸின்போது கர்நாடக சுத்தமாக ஸ்வரம் போட்ட பாடலை அமைத்தது முரணாக இல்லையா?)

✖ சி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்
கே. புதுக் கவிதையில் க்யூபிஸம் என்கிறார்களே, சற்று விளக்குவீர்களா?

ப: ஓவியத் துறையில்தான் க்யூபிஸம் உண்டு என்று அறிவேன். (பிக்காஸோதான் இதில் முதலில் பெயர் பெற்றவர்.) புதுக் கவிதையில் கியூபிஸமா?

✖ ராதாநாராயணன், கல்கத்தா-29
கே. வாரம் ஒருத்தரைப் பாராட்டக் கூடாதா?

ப: வாராவாரம் பாராட்ட வேண்டும் என்றால் அதற்கேற்ப ஆட்கள் அகப்படுவது ரொம்பச் சிரமம். ஆயினும் நல்ல எண்ணத்தோடு இப்படி ஒரு கேள்வியைக் கேட்ட உங்களைப் பாராட்டுகிறேன் இந்த வாரம்!

பரிசு பெறுபவர் :

ராதா நாராயணன்
22-ஏ, அனில்ராய் தெரு,
கல்கத்தா-29

✖ மாலினிராஜா, சென்னை-17
கே. சந்திரசேகர் தாடியை நீக்கிவிட்டால் வேறு பல நல்ல ரோல்களில் நடிக்க முடியுமல்லவா?

ப: அந்தத் தாடியின் பின்னணியில் சந்திரசேகரின் சிரிப்பு கவர்ச்சிகரமாக அமைகிறது. அவர் நடிக்கும் பாத்திரங்கள் மேல் அனுதாபத்தைத் தாடி சம்பாதித்துக் கொடுக்கிறது. இருந்தாலும் தாடி அவரது திரை உலக வளர்ச்சியைப்பாதிக்கும்என்று தோன்றுகிறது. (தலை முடியை வெட்டிக்கொள்ள மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்த விஜயனுக்கு ஆன கதி இவருக்கு ஆகக்கூடாது.)

புகைப்படம்: லண்டனில் மேடம் டுஸாண்ட்ஸ் எனப்படும் நிரந்தரக் கண்காட்சி உண்டு. உலகப் பிரசித்தி பெற்றவர்களின் மெழுகுச் சிலைகள் இடம்பெறும் இக்கண்காட்சிக்கு பிக்காஸோவின் சிலை உருவாகிறது.

✖ பி. எஸ். அரவிந்த், சென்னை-40
கே: சிரஸ் மேகங்களைப்பற்றிக் கூறும்போது 'க்யூமுலஸ்' என்ற வார்த்தையைப் போட்டிருக்கிறீர்களே. அது என்ன?

ப: அதுவும் ஒரு வகையான மேகங்களின் அமைப்பு.



வட்ட மேஜை



● எங்கள் இதயக் கனியாம் பொன்மனச் செம்மலைப் பற்றி யுகம் யுகமாக எழுதிக் கொண்டிருக்கலாமே. அவரைப் பற்றி அஞ்ஞானியும் புரிந்துகொள்ளும்படி எளிய நடையில் கட்டுரைகள் எழுதிய ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்.

சென்னை-1 ஆர். முரளி

● மக்களின் ரசனையை நன்கு புரிந்துவைத்துக்கொண்டு அதற்கேற்றவாறு படம் எடுத்து மக்களின் அமோக ஆதரவைப் பெற்றவர் திரு எம். ஜி. ஆர். அவரது அருமை பெருமைகளைத் தெள்ளத் தெளிவாக, தெள்ளமுத மெனச் சுவைக்கும் வகையில் கூறினார் வித்துவான் லட்சுமணன் அவர்கள். இக் கட்டுரை பத்துப் பகுதிகளுடன் முடிவடைந்தது வாசகர்கள் செய்த அபாக்கியமே.

சென்னை-32 நா. ராமச்சந்தர்

● 'நானும் எனது கட்சியும்' — அவர்களுடைய கையெழுத்தை ரசிக்க எங்களுக்குக் கிடைத்த வாய்ப்பு என்பதைத் தவிர வேறு என்ன சிறப்பு இருக்கிறது? நிரந்தரமில்லாத அரசியலில் நாளையே வேறு ஒரு கட்சியில் சேர்ந்தாலும் அதற்கும் ஒரு காரணத்தைத் தயாராக எழுதிக் கொடுக்கத் தயங்க மாட்டார்கள் இந்த அரசியல்வாதிகள்.

பெங்களூர்-5 அ. குமார்

● டாக்டர் சௌரிராஜனுடைய கருத்தினை நான் ஆமோதிக்கிறேன். ஆனால் அவர் தம்முடைய எ. எல். ஏ. பதவியை உதறிவிட்டு இக்கருத்தினை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். ஏனெனில் அவர் முன்பு சார்ந்திருந்த கட்சியின் கொள்கைகளைப் பாராட்டியும் அக் கட்சியின் தலைவர்களைப் புகழ்ந்தும்தான் அவர் இந்த எம். எல். ஏ. பதவியைப் பெற்றார்.

சென்னை-56 கே. எஸ். சாந்தகுமார்

● மறைந்த சதாத்தைப் பற்றித் தலையங்கத்தில் எழுதியதோடு இந்திரா காந்தியின் கருத்தையும் முதலில் வெளியிட்ட உங்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அம்மாபேட்டை. ச. பிரபாகரன்

● 'பட்டம் பதவி' படத்துக்கு சிந்துஜீவா எழுதிய விமர்சனம் கச்சிதமாக அமைந்திருந்தது. அவருக்கு ''விமர்சன திலகம்'' என்ற ''பட்டம்'' தாராளமாகக் கொடுக்கலாம்.

குலசேகரப்பட்டினம் வெ. இசக்கிமுத்து

● ''பட்டம் பதவி''யை ''அடச் சே'' என விமர்சனம் செய்திருக்கும் உமக்கு ரசனைத் தன்மை கொஞ்சமும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டிவிட்டீரே?

மேட்டுப்பாளையம் மு. கல்யாணசுந்தரம்

● நானும் பார்த்துக் கொண்டே வருகிறேன். உங்கள் விமரிசகருக்கு விஸ்வநாதன் இசையைப் பிடிக்கவில்லையென்றால் சும்மா இருக்கட்டும். அதற்காக அவர் பெயரைக் குறிப்பிட்டு, பாடல்களை நன்றாக இல்லை என எழுத வேண்டுமா என்ன?

பழவந்தாங்கல் ஆனைக்கூத்தன்

● ''அவராகப் பேசவில்லை'' என்ற கதையைப் படித்ததும் என் கண்ணில் நீர் நிறைந்தது. தாய்ப் பாசத்தை விளக்க இதைவிடச் சிறந்த கதை தேவையில்லை. ஸ்ரீமதி பாத்திமுத்துவுக்கு நன்றி. அவர் பணி சிறக்கட்டும்.

கோபிசெட்டிபாளையம்

எஸ். இராமகிருஷ்ணன்

● 'ரசிகமணி ரசித்த மணிகள்' என்ற கட்டுரையில் ''ராஜாஜி கொண்டுவந்த 'படிப்பு பாதி, தொழில் பாதி' என்ற திட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ளாமல் போனது நமது நாட்டுக்குப் பெரிய நஷ்டம்'' என்று சி.எஸ். சொன்னதாக வந்திருக்கிறது. ராஜாஜி அமைச்சரவையில் தாம் இருந்தவரை இத் திட்டத்தைப் பலமாக ஆதரித்த இதே சி. எஸ்.தான் அடுத்த அமைச்சரவையில் இடம் பெற்று இதே திட்டத்தைக் கைவிட வேண்டிய அவசியத்தையும் தாமே எடுத்துரைத்தார். இன்று அவரே மறுபடியும் சொல்கிறார், 'அதை ஏற்றுக் கொள்ளாதது நமது துரதிர்ஷ்டம்' என்று!

எல்லாம் வெறும் சந்தர்ப்ப வாதமாகப் போய்விட்டது!

மேட்டூர் அணை டி. எஸ். சுப்பராவ்

● 'சின்ன முள் பெரிய முள்' திரைப்பட விமர்சனத்தில் லாபம்' ஆங்கிலப் படத்தைப் பார்க்காதவர்களுக்கு என்று நனிஷியார் கூறியிருக்கிறார். WAIT UNTIL DARK என்ற ஆங்கிலப் படக் கதை எம். ஆர். கிருஷ்ண சாமி குழுவினரால் ''இருள்'' என்ற பெயரில் நாடகமாக மேடைகளில் நடிக்கப் பட்டது. பின்னர் சில பல மாற்றங்களுடன் பார்வையற்ற நாயகனாக ஜெய் வேட மேற்க, 'இதயம் பார்க்கிறது' என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்தது. ஆக மேற்படி ஆங்கில சினிமாவின் மூன்றாவது அவதாரம்தான் 'சின்ன முள் பெரிய முள்'!

சென்னை-24 ராமாபுரம் சந்துரு

உலகளாவிய பெருமை!

பாலாஜி பஞ்சரத்ன மாலா என ஏழுமலையானுக்கு ஐந்து எல். பி. ரிகார்டுகளைத் திட்டமிட்டபடி காணிக்கையாக்கினர் ஸ்ரீமதி எம். எஸ். ஏற்றுக்கொண்ட பணியை அதே காரியமாக இருந்து மிகச் சிறப்பாக நிறைவேற்றிய ஸ்ரீமதி எம். எஸ். அவர்களை ஆந்திரா அரசு ஆஸ்தான வித்வானாக அங்கீகரித்துக் கௌரவித்தது. இதுவும் பாலாஜியின் கருணையே என்றாலும் வேங்கடமுடையானுக்கு இது முழு மன நிறைவை அளிக்கவில்லை போலும்! உலகளந்த பெருமாள் தமது பரம பக்தைக்கு உலகளாவிய ஒரு பெருமையைக் கொடுக்க எண்ணிச்செயல்பட்டார். ஸ்ரீமதி எம். எஸ். அவர்களை சர்வதேச இசைக் கவுன்சிலின் கௌரவ அங்கத்தினராக்கினர்!

ஐ. நா. சபை கலாச்சாரப் பிரிவின் ஓர் அங்கமான சர்வதேச இசைக் கவுன்ஸில் ஆண்டுக்கு இரு முறை கூடுகிறது. அப்போது இதர அலுவல்களுக்கிடையே ஓர் உலகக் கண்ணோட்டத்தில் பார்த்து இசைத் துறைக்கு அளப்பரிய சேவை செய்துள்ள ஒரிருவரைத் தனது கௌரவ அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கிறது. இந்த சர்வதேச இசைக் கவுன்சிலை இசை உலகின் சிகரக் கேந்திரம் எனலாம்!

இத்தகைய உன்னத அமைப்பில் கௌரவ அங்கத்தினராவதென்பது இலேசுப்பட்ட காரியமில்லை. ஏற்கனவே உள்ள ஓர் அங்கத்தினர் பரிந்துரை செய்ய வேறு ஒருவர் ஆமோதிக்க, கூடியிருக்கும் அங்கத்தினர்களில் மூன்றில் இரு பங்கினராவது சாதகமாக வோட்டளித்தால்தான் இந்தக் கௌரவ அங்கத்தினர் பதவி கிடைக்கும். சர்வதேச இசைக் கவுன்சில் ஓர் இசைக் கலைஞருக்கு அளிக்கின்ற மிகப் பெரிய கௌரவம் அவரைக் கவுரவ அங்கத்தினராக்கிக் கொள்வதுதான்.

இந்தியாவில் இதுவரை ரவி சங்கரும் டாக்டர் நாராயண மேனனும் இவ்விதம் கௌரவிக்கப் பட்டிருக்கிறார்கள். தேர்ந்த இசை மேதையாகவும், கலைஞராகவும் இசை மூலம் உலக ஒருமைப்பாட்டுக்கு உதவுகிறவராகவும் உள்ளவர்களுக்கு இந்த அரிய பதவி கிட்டுகிறது.

ஸ்ரீமதி எம். எஸ். அவர்களோ இந்த நோக்கங்களுக்கும் அதிகமாக இசை மூலம் பக்தி வளர்ப்பவராகவும், எத்தனையோ அறப் பணிகளுக்கு உதவுகிறவராகவும் உலகம் உய்யவே உள்ளம் உருகிப் பாடிஇறைவனை உபாசிப்பவராகவும் விளங்குகிறார்.

(Magsaysay) மக்ஸாய்ஸாய் போன்ற மிக உயர்ந்த விருதுகளையும் பரிசுகளையும் ஏற்கெனவே பெற்றுள்ள எம்.எஸ். அவர்களுக்குக் கிட்டியுள்ள இந்தப் புதிய சர்வதேச அங்கீகாரம் தமிழ்நாட்டுக்கும், தூய கர்நாடக இசைக்கும் மேலும் பெருமை சேர்க்கிறது.

செய்தி வந்த அன்று ஸ்ரீமதி எம். எஸ். என்ன செய்தார்? வழக்கமான அடக்கத்துடன் அமைதியாக மயிலை சென்று இந்தப் பிறந்த நாள் பரிசுக்காகக் கபாலிக்கு நன்றி கூறித் திரும்பினார்.

○ ஸ்ரீ வேங்கடேச (பாலாஜி) பஞ்சரத்ன மாலா இசைத் தட்டுக்களின் மூன்றாவது பகுதியைப் பாரதப் பிரதமர் வெளியிட்டபோது, அவருடன் ஸ்ரீமதி எம்.எஸ்., ஸ்ரீமதி ராதா விசுவநாதன், ஸ்ரீ சதாசிவம்



"கை நீட்டிக் கெஞ்சுவோர் பக்கமெல்லாம் கரம் நீட்டித் தாவுகின்ற குழந்தை நீ" என்று கலைஞர் கருணாநிதி வர்ணித்தது போல, குழந்தை உள்ளத்துடன் காலமெல்லாம் கண்ணதாசன் வாழ்ந்த போதிலும் - அதனாலேயே சில வேண்டாத விளைவுகளை அவரும் தமிழகமும் அனுபவித்த போதிலும் - அறிவாற்றலில் மிகச் சிறந்து, மிக உயர்ந்த தத்துவ - இலக்கியப் படைப்புக்களை நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். "சேரமான் காதலி" எழுதி அதன்மூலம் நமக்கு சாகித்ய அகாதமி பரிசைத் தேடிக் கொண்டதுடன் கல்கி பத்திரிகைக்கும் பெருமை சேர்த்த கண்ணதாசனின் இலக்கிய ஆற்றலை இங்கே மேற்கோள்களுடன் விவரிக்கிறார் ஞானபீடப் பரிசுபெற்ற அகிலன். இதனையும், இன்று மிகப் பிரபலமாக இருக்கும் மு. மேத்தா, வைரமுத்து ஆகிய இரு இளம் கவிஞர்களின் கவிதை மலர்களையும் இவ்விதழ் கல்கியில் பிரசுரித்து, நமது இதயங்களை என்றென்றும் ஆண்டுகொண்டிருக்கப் போகிற கவியரசுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.


- ஆசிரியர்

காலனை வென்ற கண்ணதாசன்

அகிலன்

கவிஞர் கண்ணதாசன் தனிப்பட்ட மனிதர் என்ற முறையில் தீவிரமான முரண்பாடுகள் நிறைந்தவர். அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகளிலும் சரி, தனிப்பட்ட மனிதர்களைப் பற்றிய மதிப்பீட்டிலும் சரி, அவர் அடிக்கடி மாறியிருக்கிறார். அவ்வப்போது அவருக்கு எது உண்மை என்று தோன்றியதோ அதை அப்படியே அப்பட்டமாகச் சொல்லிவிடுவார்.

அப்படியிருந்தும்கூட அவரை ஏன் தமிழ் மக்கள் இந்த அளவுக்கு நேசிக்கிறார்கள்? அவரிடம் அன்பும் மரியாதையும் செலுத்துகிறார்கள்? அவரைப் போற்றிப் பாராட்டுகிறார்கள்?



அவருடைய அன்பு நெஞ்சில் கொஞ்சி விளையாடிய தமிழ்தான் அதற்குக் காரணம்.

அவருடைய உள்ளமாகிய கள்ளம் கபடமில்லாத மலரில் எந்த நேரமும் தமிழ்த் தேன் ஊற்றுப் பெருக்கெடுத்துப் பொங்கிப் பொசிந்து கொண்டிருந்ததுதான் காரணம்.

தமிழ்த் தாய் இந்தக் குழந்தையைத் தேர்ந்தெடுத்துத் தன்னைத் திரைப் பாடல்களாக, கவிதைகளாக, கட்டுரைகளாக, கதைகளாக, சொற்பொழிவுகளாக வெளிப்படுத்திக் கொண்டதுதான் காரணம்.

'படிக்காத மேதை' என்ற படத்தில் வரும் ஒரு பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றன.

"உள்ளதைச் சொல்வேன்,
சொன்னதைச் செய்வேன்,
வேறொன்றும் தெரியாது;
உள்ளத்தில் இருப்பதை
வார்த்தையில் மறைக்கும்
கபடம் தெரியாது."

கபடமில்லாத அவர் வெள்ளை உள்ளத்திலிருந்து இலக்கியநயம் நிறைந்த பாடல்கள் தமிழ்த் திரை உலகத்துக்குக் கிடைத்தன. ரசிகர்களின் நெஞ்சோடு நெஞ்சாக உறவாடியவர் கவிஞர்.

'மாலையிட்ட மங்கை' என்ற படத்துக்காக அவர் இயற்றிய இந்தப் பாடலை எப்போது கேட்டாலும் என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளும்.

"செந்தமிழ்த் தேன்மொழியாள்—
நிலாவெனச்
சிரிக்கும் மலர்க் கொடியாள்...

தத்துவ தரிசனம் - மு.மேத்தா.

(உரைநடைச் சிறப்பு)

உன்னுடைய கவிதையில்
உரைநடையின்
எளிமை
உன்னுடைய உரைநடையிலோ
கவிதையின்
இனிமை.

உன் கவிதை
ஓசையால் தன்னை
ஒப்பனை செய்துகொண்டது
உன் உரைநடையோ
நகைச்சுவையால்
தன்னை
அலங்கரித்துக் கொண்டது.

நீ
வார்த்தைப் புதர்களைச்
சுற்றிக் கிடந்த
வலைகளை அகற்றினாய்.

மூடிய பேழையின்
மூடியை நீ
திறந்தபோது—
அரிய தத்துவ
அழகிகள் கூடத்
தாழ்களை நீக்கி
எங்களுக்குத்
தரிசனம் தந்தனர்.

அதனால்தானே
ஆயிரமாயிரம்
பிரதிகள் விற்றது
அர்த்தமுள்ள
இந்துமதம்?
'மனவாசம்...'
உன்னுடைய
'வனவாசம்...'
இரண்டுமே எங்களுக்கு
மலர்வாசம்தான்!

நீ
'தென்றல்' தேரேறிக்
'கடிதா'ச் சிறகடித்து
'ராகமாலிகா'
ராகம் இசைத்துப்
புதிய தமிழுக்குப்
'புஷ்ப மாலிகா'
என்ற
பொன்னுடை
போர்த்தியவன்!

'செப்பு மொழிகள்'
அவ்வப்போது நீ
அரசியலுக்குக் கொடுத்த
அதிர்ச்சி வைத்தியம்.

'குட்டிக் கதைகள்'
நீ
கொட்டிக் கொடுத்த
கிண்டல் சுண்டல்கள்.

'கறுப்புப் பண'த்தின்
கதை வசனம்—
உலுத்தர் பலருக்கு
உதை வசனம்!

உன்னுடைய
எழுத்து வாள்
இதயத்தில்
பாய்ந்தபோது கூடத்
தமிழின் இனிமைக்காக
அதைத்
தடவிக் கொடுத்தார்கள்!

இலக்குவன்போல்
உன்னுடன்
இருந்தது உரைநடை...
சீதைபோல் உன்னைச்
சேர்ந்தது
கவிதை.

சுருக்கமாகச்
சொல்லலாம் இப்படி:
கவிதைக்கு
நீ
புருஷன்
உரைநடைக்கோ
அரசன்!

காற்றினில் பிறந்தவளோ? — புதிதாய்க்
கற்பனை வடித்தவளோ?''

சொற்கள் காதல் உணர்வாய்க் கொப்பளித்து, கவி நயத்தோடும், கற்பனை நயத்தோடும் இராகத்துக்கேற்ப — தாளம் தவறாமல் — ஆனந்த நடனம் புரிவதைப் பாருங்கள். தம் இதயத்திலிருப்பதை அடுத்தவர் இதயத்துக்கு இவ்வளவு அற்புதமாகப் பாய்ச்சும் ரசவாதவித்தை அவருக்கு எப்படித்தான் கைவரப் பெற்றதோ!

பெண்களைப் பற்றியும் காதலின்பத்தைப் பற்றியும் சிருங்காரச் சுவை சொட்டச் சொட்டப் பாடும் கவிஞர் திடீர் திடீரென்று முற்றும் துறந்த முனிவராகவும் மாறி விடுவார்! ஒரு ஞானிக்கே உரித்தான பற்றற்ற போக்கில் யாக்கை நிலையாமை பற்றி, ''சட்டி சுட்டதடா, கை விட்டதடா'' என்று தத்துவம் பேசத் தொடங்கி விடுவார்.





✖ இசைக்கேற்ப திரைப்படப்பாடல் உருவாகிறது

''வீடுவரை உறவு, வீதிவரை மனைவி,
காடுவரை பிள்ளை, கடைசிவரையாரோ?''

என்ற திரைப்படப் பாட்டில் நாம் ஒரு இருபதாம் நூற்றாண்டுத் துறவியான பட்டினத்தடிகளையே சந்திக்கிறோம்.

அவருடைய திரைப் பாடல்களில் கவிதை நயம் பின்னிப் பிணைந்திருப்பது போலவே அவருடைய உரைநடையிலும் நாம் கவிதை அழகைக் காணலாம். சலசலத்தோடும் சிற்றருவி போன்ற உரை நடை அவருடையது.

'அர்த்தமுள்ள இந்து மதம்' என்ற அவருடைய கட்டுரை நூல்களில் நாம் அவருடைய வாழ்க்கை அனுபவங்களையும், இந்து மதத்துக்கான காலத்துக்கேற்ற அவரது விளக்கங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது.

''ஏழை ஏழையாகவே இருப்பது அவன் தலையெழுத்து என்று இந்து மதம் சொல்கிறதா?... பணக்காரன் தேவைக்கு மேல் சொத்து வைத்திருப்பதை இந்து மதம் அனுமதிக்கிறதா? இல்லை!... பேராசைக்காரர்கள் மோட்சத்துக்குப் போவதில்லை என்று இந்து மதம் கூறுகிறது...''

என்றும்,

''தர்மம் என்றும், சத்தியம் என்றும், நேர்மை என்றும் சொல்லி வைத்த நமது மூதாதையர்கள் முட்டாள்களல்ல. கஷ்டத்திலும் நேர்மையாக இரு. நீ ஏமாற்றப் பட்டாலும் பிறரை ஏமாற்றாதே!...தெய்வ நம்பிக்கை உன்னைக் கைவிடாது!'' என்றும் கூறுகிறார்.

'கல்கி'யில் வெளிவந்து பிறகு சாகித்ய அகாடமியின் பரிசு பெற்ற அவருடைய 'சேரமான் காதலி' என்ற சரித்திர நாவல் கவிதை நடையும், ரசமான கதை யோட்டமும் பக்தி உணர்வும், தத்துவப் பின்னல்களும் கொண்ட அற்புதப் படைப்பு. அதில்

[illegible] மயக்கம்!

[illegible]

● உன் எழுத்து
ஒவ்வொன்றும்
உனக்கு நீயே கட்டிக்கொண்ட
தாஜ்மகால்!

ஒரே பேனாவை
ஒரு பக்கம்
தூரிகையாகவும்
மறு பக்கம்
வாளாகவும்
வார்த்துக் கொண்ட
வல்லவன் நீ!

உன் அனுபவம்
உன்
வாசகத்துக்கு
வாலிபம் தந்தது!
உன் கண்ணீர் கூட
திராட்சை ரசமாய்த் தெரிந்தது!

உன் பாட்டுக்குச்
சந்தந்தந்தவை
ஆர்மோனியங்கள் அல்ல...
பாமரரின் இதயத் துடிப்புகள்.

உன் இலக்கியம்
கருத்துலகத்திற்கல்ல...
மொழியுலகத்திற்கே
முதல் சீதனம்!

உன் மயக்கப் பாடல்கள்
உள்ளூர் மல்லிகைக் கொடியில்
பூத்த
பாரசீக ரோஜாக்கள்!

உன் எழுத்தை
எடை போடப் போனால்
தராசே மயங்கிவிடும்!

உன்
வாழ்க்கையைப் போலவே
இலக்கியமும்
அத்தனை விமர்சனத்துக்கும்
அப்பாற் பட்டது!

நெருப்பின் உதடுகள் உன்னைக்
கொறித்து விடலாம்!
ஆனால்....
உன் இலக்கியத்தை....?
உன் நெஞ்சில் ஊறி வரும்
ஒரு கோடி நினைவுகளை....?

(கவிதைச் சிறப்பு)

ஓரிடம்—என்றைக்கும் நிலையான மிகப் பெரிய தத்துவத்தை எத்தனை ரசமாக எளிதாக அழகுபடக் கூறிவிடுகிறார் பாருங்கள்:

"ஆசை வயத்தில் கட்டுண்ட மனிதனை ஆட்டிப் படைப்பவை மூன்று. அவை பதவி, பொருள், பெண்.

நோயாளி பதவியைத் துறப்பதும், சாகக் கிடப்பவன் பொருளைத் துறப்பதும் அனுபவிக்க முடியாதவன் பெண்ணாசையைத் துறப்பதும் ஆற்றாமையின் விளைவுகள். அனைத்திலும் வல்லவன் அனைத்தையும் துறப்பதே ஆண்மை மிக்க துறவு.

பரதனுக்காக நாடு இழந்த ராமன், பரதனே வந்து அழைத்தபோது, திரும்பிச் சென்றிருக்கலாம் அல்லவா? செல்வது நியாயம் கூட அல்லவா? அந்த நியாயத்தையே கூட அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. அன்னைக்குத் தந்தை கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதே நியாயம் என்று கருதினான். தந்தைதான் இறந்து விட்டானே இனி நாம் பதவியில் இருந்தால் என்ன என்று ராமன் எண்ணியதில்லை.

நல்லவனுக்குக் கையெழுத்துதேவையில்லை. தீயவனிடம் கையெழுத்து வாங்கினாலும் பயனில்லை. தர்மம் மனத்திலிருந்தே வருகிறது. அது சூழ்நிலைகளால் ஆசை காட்டப்பட்டாலும் மயங்குவதில்லை.

இத்தனைக்கும் நீ காட்டுக்குப் போக வேண்டும் என்று ராமனிடம் தசரதனா சொன்னான்? பரதனுக்கே நாடு என்பதும் அவன் சொன்ன வாசகமா? இல்லை. அவன் சொன்னதாகக் கைகேயி சொன்னாள். அவ்வளவுதான்.

தந்தையே நேரில் ஆணையிட்டாலும் வாள் தூக்கும் உலகத்தில் தர்மத்தைக் காப்பாற்றியவன் ஸ்ரீராமன்."

இனிக் கவிஞர் என்ற முறையில் அவர் இலக்கண மரபு குன்றாமல், படைத்த கவிதைகளில் சிலவற்றைக் கவனிப்போம்.

ஒரு கவிதையில் வெளியிடும் அவரது ஆவல் இது:

''நூறுவய தாகும்வரை
ஓடிவிளை யாடஒரு
நோயிலா மேனி வேண்டும்;
நுண்ணறிவு வறிஇள
வெண்ணிலவு போலஒர்
நூலைநான் எழுத வேண்டும்...''

நூறு வயது வரை வாழ வேண்டும் என்று ஆசைப்படுவோருக்கு ஓரளவு கட்டுப்பாடும் புலனடக்கமும் தேவை என்பார்கள். ஆனால் நம் கவிஞரோ அழகின் உபாசகர்; உணர்ச்சிப் பெருக்கில் வாழ்க்கையை ஆழ்ந்து துய்க்கத் துடித்தவர்.

''வசமான பெண்மையும்
வளமான கிண்ணமும்
வாழ்க்கையில் உள்ளமட்டும்
வாராது வஞ்சகம்
வாராதிங் கென்னிடம்
வாராது மரண பயமே!''

என்று பாடுகிறார். ''உலகம் பிறந்ததே (மது — மாது ஆகிய) இந்த இரண்டிலும் தான்; இந்த உண்மையே தெய்வமாகும்!'' என்கிறார்.

''மதுவையோர் கையில் வைத்து
மங்கையோர் புறத்தே வைத்தால்
எதுவரை உலகம் போகும்?
எங்கெங்கோ போகும்! — நானும்
அதுவரை போவேன்!''

என்று உமர்க்கையாம் சாயலில் உற்சாகமாய்க் கூவுகிறார்.

வாழ்க்கையின் இன்பங்களை மட்டிலுமே துய்த்த கவிஞர் அல்லர் இவர்; துன்பத்தின் எல்லைக்கும் சென்று விடுகிறார். சாவைப் பற்றிய அப்பட்டமான சித்திரங்களை அவருடைய பல கவிதைகளில் காணலாம்.

''கட்டெரித்தாலிந்த
மேனியும் சாம்பலாய்ச்
சுடுகாட்டு மண்ணிலுருளும்;
சுவையான பாடகன்
போயினன் எனச் சொல்லிச்
சொந்தமும் வீடு செல்லும்!
கட்டைக்கு வாய்க்குமோர்
பயன்கூட மானிடக்
கட்டைக்கு வாய்ப்பதில்லை!
கண்மூடி மேனியை
மண்மூடு முன்னமே
காலத்தை அனுபவிப்பேன்!''

அவருடைய பிரிவால் வருந்தும் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அவருடைய சொற்களிலிருந்தே ஆறுதலும் ஒரு பக்கம் கிடைக்கிறது.

''சாவே, உனக்கொரு சாவுதான் வாராதோ?'' என்று சாவை ஒரு நாள் எதிர்த்தவர், பின்பு சாவால் ஆன்மாவை அழிக்க முடியாது என்பதைப் பகவத்கீதை வழியே உணர்கிறார்.


கீதை மொழிபெயர்ப்பில் உள்ள அவருடைய கவிதை வரிகள்:


''உடலம் என்றோ ஒரு நாள் அழியும்
தானழிக்காவிடின் தானே அழியும்
ஒருடல் துறந்துமற் றோருடல் புகுந்து
ஆன்மா என்றும் அழிவில்லா திருக்கும்
புதுப் புது உடல்களில் பூத்துக் குலுங்கும்.''

கவிஞர் கண்ணதாசன் ஒரு பிறவிக் கலைஞர்; பிறவிக் கவிஞர். அவருடைய நேருக்கு மாறான முரண்பாடுகளுக்காக அவரை உலகம் போற்றியது; தூற்றியது; பூமாரி பொழிந்தது; கல்லால் அடித்தது; வாழ்த்தியது; வசை பாடியது — நான் நினைக்கிறேன், இப்படிப்பட்ட முரண்பாடுகளே அவருடைய தனித் தன்மையின் சிறப்பு என்று.

அவர் உடலால் பெற்ற அனுபவங்கள், 'நூறு வயது நோயற்ற மேனியோடு வாழ வேண்டும்' என்ற அவரது ஆசைக்குக் குறுக்கே நின்றிருக்கலாம். ஆனால் அந்த அனுபவங்களின் அடிப்படையில் உடலைக் கொண்டு ஆன்ம வெளியீடாக அவர் விட்டுச் சென்ற எழுத்துக்களில் பல, சாவுக்குச் சாவு மணியடிக்கக் கூடியவை.


காங்கன் சந்திப்பு
அதெப்படி?.. நீங்க பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை சப்ளை பண்ணலாம்?
அதெப்படி?.. உலக பாங்க் இந்தியாவுக்கு கடன் கொடுப்பதை நீங்க தடுக்கலாம்?
அடடா! உங்க பசுமைப் புரட்சி அபார சாதனை!
ரேகன்


கேரள ஆட்சி பீடம்
இ. காங்கிரஸ்
வாங்க.. வாங்க.. வர்றவுங்க எல்லாம் வாங்க!
காங்கிரஸ் (எஸ்)
கேரள காங்கிரஸ்


இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு கோரிக்கை
திருப்பத்தூர் தேர்தல் ஆதரவு

அதர்மக் காவலர்!

அன்புள்ள ஆர்.வி. அவர்களுக்கு. உங்களுடைய அபிமான ரசிகனான மோசடி மல்லன் எழுதியது.

அதர்மத்தை மறுபடி ஆரத்தி எடுத்து வரவேற்றுள்ள நிதி அமைச்சர் திலகமே! கறுப்புப் பணப் பத்திரம் வழங்குவது சட்ட விரோதமானதல்ல என்று சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு வந்த மறுகணமே, சூட்டோடு சூடாக, மறுபடி கறுப்புப் பணப் பத்திரம் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ள தங்களுக்கு, நானும் என் சகோதரன் அயோக்கியச் சீமானும் சேர்ந்து, ''அதர்மக் காவலர்'' என்ற பட்டத்தை வழங்குகிறோம். அருள்கூர்ந்து ஏற்று எங்களைக் கௌரவிக்க வேணுமாய் வேண்டுகிறோம்!

தாங்கள் பதவி ஏற்ற பிறகு முதல் பட்ஜெட் கொண்டு வந்தீர்களே அப்போது உண்மையிலேயே நாங்கள் கதிகலங்கி விட்டோம். அந்த பட்ஜெட்டைப் பார்த்ததும் இ. காங்கிரஸின் பொருளாதாரக் கொள்கையில் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதென்றே எண்ணி நடுங்கி விட்டோம்! ஆனால் அடுத்தடுத்து நீங்கள் செய்த காரியங்கள் எங்கள் வயிற்றில் பாலை வார்த்தன. ஐயனே! எங்களை வாழ விட்டதோடன்றிக் கொழுக்கவும் வைக்கும் உங்களுக்குக் கோடி கும்பிடு!

இந்த சுப்ரீம் கோர்ட் ஜட்ஜுகளைக் கொஞ்சம் மண்டையில் தட்டி வைத்தால் நல்லது.• கறுப்புப் பணப் பத்திரம் வழங்குதல் சட்ட விரோதமானது அல்ல என்று சொல்வதுடன் இவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டியதுதானே! அதற்கு மேல் ''இது நேர்மையற்றவர்களுக்குக் காட்டப்படும் சலுகை என்பதை மறுப்பதற்கில்லை'' எனவும், ''வருந்தத் தக்க துரதிர்ஷ்டவசமான நடவடிக்கை'' எனவும் வர்ணிப்பானேன்? இதையெல்லாம் இவர்களை யார் கேட்டார்கள்? சட்டப் பாயிண்டை மட்டும் கூறிவிட்டுப் போக வேண்டியதுதானே?

'ஜனநாயகத்தில் சட்டத்தின் ஆட்சி எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்கு தார்மீக சிந்தனையும் ஆட்சியாளருக்கு அவசியம்' என்று சில அசடுகள் பிதற்றும். நீங்கள் நம்ப வேண்டாம். அந்துலே ஆட்சியில் இருப்பது தார்மீக ரீதியில் தவறாக இருக்கலாம்; ஆனால் சட்டப்படி சரிதானே? கவலை என்ன? மக்கள் மீது தாங்க முடியாத அளவு வரிச் சுமைகளை ஏற்றுவது தார்மீக ரீதியில் தப்பாக இருக்கலாம்; ஆனால் சட்டம் இடம் தருகிறதே! இதே போல் கறுப்புப் பணம் வைத்திருப்போருக்கு நீங்கள் விசேஷச் சலுகை காட்டுவதும் சட்டப்படி சரியாகி விட்டது. 'பிறகென்ன? நிறைய கறுப்புப் பணம் உற்பத்தியாகும் விதமாக மேன்மேலும் வரிகளை விதிக்கலாம்; பர்மிட் லைசென்ஸ் கோட்டா முறைகளைப் பலப்படுத்தலாம். பொய்க் கணக்கு எழுத மாட்டேன் என்று உறுதியாக இருக்கும் பரமயோக்கியர்கள் நன்றாக அவஸ்தைப்படட்டும், நமக்கென்ன? இவர்களை ரகசிய 'ஸெகண்ட் அகவுண்ட்' வைத்துக்கொள்ள வேண்டாம் என்று நீங்களா தடுக்கிறீர்கள்?

இன்னும் சில முட்டாள்கள், 'இந்தக் கறுப்புப் பணப் பத்திரத் திட்டம் வெற்றி பெறாது' என்று பூச்சாண்டி காட்டுவார்கள். கறுப்புப் பணப் பொருளாதாரம் என்று ஒன்று தனியே இருப்பதையும் கறுப்புப் பணம் வட்டிக்கு விடப்பட்டு மேலும் கறுப்புப் பணம் உற்பத்தி செய்வதையும் இவர்கள் சுட்டிக் காட்டுவார்கள். 'நீங்கள் தருகிற இரண்டு சதவிகித வட்டிக்காக யார் பத்திரம் வாங்குவார்கள்?' என்று கேலியாகக் கேட்பார்கள். இதற்கெல்லாம் மசிந்து விடுகிறவரா நீங்கள்! பத்திரங்களைப் பலபேர் வாங்காவிட்டால்தான் என்ன? அதுவும் ஒரு விதத்துக்கு நல்லதுதான். எல்லாரும் பத்திரம் வாங்கப் போய்க் கறுப்புப் பணமே புழக்கத்தில் இல்லாது போய்விட்டால் பிறகு லஞ்ச ஊழல் எப்படிக் கொடிகட்டிப் பறக்குமாம்? தேர்தலுக்கு, கட்சிக்கு, சொந்தத்துக்கு என்று அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் செலவுகளா இல்லை?



1981 நவம்பர் 1

துன்மதி ஐப்பசி 16

மலர் : 40 இதழ் : 14

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

3

செல்லி பரிசல் ஓட்டிக் கொண்டிருந்தான்.

அவன் எதிரில் இந்தப் புது ஐயா கண்களை மூடிக்கொண்டு ஏதோ மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''அட! அந்தப் புது அய்யிரு! அன்னிக்கு நான் நேரத்துலே காலத்துலே கொண்டு வந்து இக்கரை சேர்த்தேனே.... அதே அய்யிரு. சாஸ்திரி அய்யாவுக்கு அப்புறமா இவருதான் கோவில் பூஜையை ஏத்துக்கப் போறாராம். அல்லா சனமும் சொல்லுது. பெரிய அய்யா மாதிரி இவரும் எப்பவும் மந்திரம் சொல்லிட்டே இருப்பாரு போல இருக்கு. இப்படிக் கண்ணை மூடிட்டே இருக்காரே... திடீர்னு பரிசல்லே ஓட்டை விழுந்துடுச்சுன்னு என்ன பண்ணுவாரு? அப்பவும் இப்பிடித்தான் சபிச்சுட்டே உக்காந்திருப்பாரோ? சீ....சீ! எனக்கேன் இந்த மாதிரி நினைப்பெல்லாம் வருது? இந்தச் சின்ன ஐயா எத்தனை அளகா இருக்காரு! பெரிய அய்யா தன்னோட மகளை இந்த ஐயாவுக்குக் கட்டி வச்சாலும் வைப்பாரு. வீட்டோட மாப்பிள்ளை. கோவில் பூஜையும் நடக்கும், குடும்பமும் நடக்கும்...''

ஒரு கணம் செல்லி சுகன்யாவையும் ஞானுவையும் தன் மனத்துள் பக்கம் பக்கமாக நிறுத்திப் பார்த்தான்.

ஊஹூம்! ஏனோ பொருந்தாத மாதிரி ஒரு நினைப்பு!

''அந்தப் பொண்ணு மகா குறும்பு.... மகா பேச்சு... இவரு பெரிய அய்யா மாதிரி சாந்தமா இருக்காரு. இவருக்கு ஏத்த பொண்ணு... அடக்கமா... ஆமா... இதெல்லாம் நமக்கென்னத்துக்கு வம்பு? இக்கரையிலேயிருந்து அக்கரை வரைதான் எம் பொழைப்பு! நடுவாந்தரத்துலே இதென்ன நினைப்பு? ஓடம் எல்லாரையும் கரை ஏத்தும், தான் கரை ஏறாதுன்னு சொல்லுவாங்க. அதே மாதிரிதான் நானும். அல்லாத்தையும் அக்கரை சேர்த்து இக்கரை சேர்க்கறதோட என்னோட வேலை தீந்து போச்சு!

செல்லி பரிசலை வேகமாக ஓட்டினான். அன்று பரிசலில் அதிகக் கூட்டமில்லை. இரண்டொருவர்தான் இருந்தனர். அதில் ஞானுவும் ஒருவன். அனைவரும் இறங்கிய பின் கடைசியாக ஞானு இறங்கினான். அவரவர் பணம் தந்தபோது செல்லி வழக்கம்போல் கையை ரொம்பக் கீழே தாழ்த்திக் காசு வாங்கிக் கொண்டான்.

ஞானு காசு போடும்போதுதான் அவனைப் பார்த்தான். ஏதோ ஒரு அந்நியத் தன்மை தெரிந்தது. இத்தனை நேரம் மந்திரம் சொல்லிக் கொண்டு வந்ததில் இவனைக் கவனிக்கவில்லை. அன்றுகூட இவன்தான் என்னை அக்கரை சேர்த்தாள். ஓடக்காரப் பெண். நல்ல பெண்.

ஞானு போட்ட காசு தவறிக் கீழே விழுந்தது. அதை எடுக்க ஞானுவும் குனிந்தபோது அவனும் குனிந்தாள். இருவரும் காசை ஒரே சமயத்தில் எடுக்க இருவர் கரங்களும் ஸ்பரிசித்தன.

''ஐயய்யோ'' — செல்லி பதறினாள்.

''ஏன்? என்னாச்சு?'' — ஞானு திகைத்துப் போய்க் கேட்டான்.

''என் கை ஐயா மேலே பட்டிடிச்சே!''

''ஏன்? அதனால என்ன?''

''என்னவா?'' — செல்லி பிரமித்துப் போனான்.

''எப்பவுமே கையைத் தாழ்த்தி, தாழ்த்திக் காசு வாங்கப் பழகிட்டே. அதான் அப்படிப் பயப்படறே? இதுலே ஒண்ணும் தப்பில்லே.''

செல்லி பேசாமல் இருந்தாள்.

''ஐயா மறுபடியும் எப்போ கிராமம் திரும்புவீங்க?''

''சாயங்காலம்.''

''பொழுது சாய ஐயாவுக்காகக் காத்திருக்கேன்.''

''கண்டிப்பா வந்துடு... நீ வரலேன்னு என்னால கிராமம் போக முடியாது...... எனக்கு நீஞ்சவும் தெரியாது....''

குமரிப் பெண்ணே! குயிலாளே!

—விமலா ரமணி—

ஞானு சொல்லியபடி போய்விட்டான். செல்லி அவன் போன திசையைப் பக்தியுடன் பார்த்தாள். தில்லைக் கோவிலின் கலசத்தைக் கண்டவுடன் நந்தனார் மெய் சிலிர்த்து, கை கூப்பியதைப் போல ஞானு போன திசையைப்பார்த்துக் கை கூப்பினாள் செல்லி. அவன் தந்தகாசைக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். சுருக்குப்பையில் பத்திரப்படுத்தினாள்.

''இந்தப் பணத்தைச் செலவழிக்கக் கூடாது.''

ஞானுவைப் பற்றி ரொம்பப் பெரிய மதிப்பு ஏற்பட்டது செல்லிக்கு! கிராமத்தில் இருக்கும் அத்தனை சாதியும், அது எந்தச் சாதியாக இருந்தாலும்... கையை உயர்த்தியே காசு போட்டு அவர்களுக்குப் பழக்கம்! அப்படிப்பட்ட இந்தக் கிராமத்தில் இப்படியும் ஒருவரா?

''அதனால என்ன?'' — ஞானு மனத்துள் சிரித்தான்.

''எப்பவும் கையைத் தாழ்த்தித் தாழ்த்திக் காசு வாங்கிப் பழகிட்டே! அதான் இப்படிப் பயப்படறே!''

ஞானுவின் குரல் மீண்டும் மனத்துள் கேட்டது.

பொழுது சாயறதுக்குள்ளே சட்டுப் புட்டுன்னு இக்கரை வந்து காத்திருக்கணும்...

ஒருவேளை பரிசல் நிறைஞ்சு போச்சுன்னு அத்திம்பேரும் பரிசலை எடுக்கச் சொல்லுவாங்களோ? என்னவானு என்ன? மறுபடியும் இக்கரை வந்து காத்திருந்தா தப்பில்லே... அதான் சின்ன ஐயா சொல்லிப் போட்டாங்களே! நீ வரலியானு நான் கிராமம் போக முடியாதுன்னு... தனக்கு நீஞ்ச வேற தெரியாதுன்னு சொன்னாரே!



செல்லியின் மனத்துள் பல பல பரபரப்புக்கள்!

நடேச சாஸ்திரிகள் சொல்லி அனுப்பி இருந்த அத்தனை வேலைகளையும் ஞானு செய்து முடித்து விட்டான்.

கோவிலுக்கு ஒரு பெரிய மணி வாங்கியாகி விட்டது.

கற்பூர ஆரத்தித் தட்டுக்கள் வாங்கியாகி விட்டது.

பிள்ளையாருக்கு வேஷ்டி... பெரிய பெரிய பூமாலைகளுக்கு ஆர்டர் கொடுத்தாகி விட்டது.

இந்தத் தடவை சதுர்த்தியை மிகப் பிரமாதமான முறையில் செய்ய வேண்டும் என்று ஊர்க்காரர்கள் திட்டம் போட்டிருக்கிறார்களாம். போதாக் குறைக்கு உற்சவ விக்ரகம் இல்லாத சின்னக் கோயில். உற்சவ விக்ரகம் வேறு பண்ண ஆர்டர் கொடுக்க வேண்டுமாம். அதற்காகத் தனக்குத் தெரிந்த ஸ்தபதி ஒருவரின் விலாசத்தைக் கூறி அவரையும் கையோடு அழைத்து வரச் சொல்லி இருந்தார் நடேச சாஸ்திரிகள்.

உற்சவ மூர்த்தி வந்த பிறகு தினுசு தினுசான வாகனங்களுக்கு இனி ஏற்பாடு செய்ய வேண்டும்.

முதலில் மூஞ்சூறு வாகனம். பிறகு திருவாச்சி வாங்க வேண்டும்... ரதம்... மானசீகமாகப் பிள்ளையாருக்கு அலங்காரம்பண்ணி மூஞ்சூறு வாகனத்துடன் பெரிய அலங்கார ரதத்தில் வைத்து இழுத்துக் கொண்டு போகிறான் ஞானு.

ரதத்தில் பிள்ளையார் காம்பீர்யமாக வீற்றிருக்க...ஞானு கண்களில் நீர் மல்கப் பிள்ளை

யாருக்கு அர்ச்சனை செய்து தீபாராதனை காட்டி அனைவருக்கும் விபூதி பிரசாதம் தந்து கொண்டிருக்கிறான்.

அவன் முன் எண்ணற்ற கரங்கள் ''சாமி... அய்யரே... எனக்குத் துன்னூறு...எனக்கு விபூதி'' — என்று கேட்டபடி நீண்டிருக்கின்றன.

வருடா வருடம் கூட்டம் அதிகமாகிறது. கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை. இந்தப் பிள்ளையாரின் பெருமை கேட்டு அக்கரை ஜனங்கள் எல்லாம் இக்கரைக்கு வந்து விடுகின்றனர். அப்புறம் போலீஸ் பந்தோபஸ்து போட வேண்டிய அளவுக்குப் பிள்ளையாருக்கு ஆபரணங்கள் குவிகின்றன.

திருப்பதி உண்டியல் மாதிரிப் பணம் சேருகிறது.

இடிந்து கிடக்கும் பிள்ளையார் கோவில் ராஜ கோபுரத்துடன், கொடி மரத்துடன் உயர்ந்து நிற்கிறது.

குவிகிற பணத்தை மீண்டும் மீண்டும் செலவழித்து... செலவழித்து...

ஸ்தபதியைக் கூட்டிக்கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தத்தில் அவர் வீட்டில்...காத்துக் கொண்டிருந்த ஞானு தன் மனத்துள் பற்பல கற்பனைகள் பண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஸ்தபதி மிக அவசரமாக வெளியூர் போய் விட்ட செய்தி கிடைத்தபோது இரவு மணி பத்து ஆகிவிட்டது.

இங்கு காத்திருப்பதில் அர்த்தமில்லை. அந்த கன்யாப் பொண்ணு வேறு ஏதோ கடையின் பெயரைச்சொல்லிக் கொலுசு ஒன்று வாங்கிக் கொண்டு வரச் சொல்லி இருந்தாள். இந்நேரம் ஸ்வாமி காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்ததில் அதை மறந்து போயாயிற்று. இப்போது கடை சாத்தி இருப்பார்கள். கொலுசு என்றதும் ஞானுவின் நினைவில் முதன் முதலில் அவளைப் பார்த்த ஞாபகம் வந்தது.

முதலில் அவன் அவளைக் கண்டபோது அவன் பார்த்தது அவள் கால் கொலுசு களைத்தான்; பிறகுதான் அவளது கருட்டைத் தலைமயிர்க் கற்றைகளைப் பார்த்தான். அந்தமயிர் கவ்விப் பிடித்திருந்த முகத்தைப் பார்த்தான். பாதாதி கேசம்!

இரவுக்குள் ஊர் திரும்பினால்தான் காலை பூஜைக்குச் சீக்கிரம் கிளம்ப முடியும். பாவம் செல்வி சாயங்காலம் இவனுக்காகக் காத்திருந்துவிட்டு வீடு திரும்பி இருப்பாள். இக்கரையிலேயே விடியும் மட்டும் காத்திருக்க வேண்டியதுதான்! என்ன செய்வது?

ஞானு ஆற்றங் கரைக்குப் போனபோது? பரிசல் காத்திருந்தது!

ஞானு திகைத்துப் போய் விட்டான்! இந்த நள்ளிரவில் இவன் வருகைக்காகச் செல்வி இன்னுமா காத்திருக்கிறாள்?

ஞானு மெல்லப் பரிசலை அணுகினான்.

பரிசலை ஓர் ஓரமாகக் கரையில் ஒரு மரத்துடன் கட்டிவிட்டு செல்வி அதற்குள்ளேயே தூங்கிக் கொண்டிருந்தாள்.

''ஏய் பொண்ணு'' என்றவன் நிச்சென்று அவள் பெயர் 'செல்வி' என்பது நினைவுக்கு வரவே ''செல்வி'' என்று இரைந்து கூப்பிட்டான்.

செல்விக்கு நல்ல தூக்கம்.

அவளைத் தொட்டு ''செல்வி.... செல்வி'' என்று அவன் உசுப்பியபோது திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள் செல்வி.

''வந்துட்டீங்களா ஐயா...வாங்க வாங்க'' செல்வி கண்களைத் துடைத்தபடி அவனை வரவேற்றாள். தண்ணீர் எடுத்துத் தன் முகத்தில் விட்டபடி தூக்கத்தைத் துடைத்தெறிந்தாள்.

ஞானு நெகிழ்ந்து போய் நின்றான்.

''இன்னுமா நீ வீடு திரும்பல்லே?''

''நீங்க வரேன்னு சொன்னீங்களே...''

''சாயங்காலம் வரேன்னு சொன்னேன். இப்படி ராத்திரியா காத்திருக்கச் சொன்னேன்?''

''காத்திருந்தது நல்லதாப் போச்சுங்களே. நல்லவேளை வந்துட்டீங்களே! இல்லாட்டி எப்படி அக்கரை போவீங்களாம்?''

ஞானு பரிசலில் ஏறினான்.

பரிசல் மெல்லப் போக ஆரம்பித்தது.

''ஐயா ஒண்ணு சொல்றேன்... கோபிக்க மாட்டீங்களே?''

''சொல்லு.''

''ஐயாவா என்னைத் தொட்டு எழுப்பினது?''

''ஆமாம். நல்லாத் தூங்கிட்டு இருந்தே. ரெண்டு தடவை கூப்பிட்டுப் பார்த்தேன். அதான் எழுப்பினேன். அதனால என்ன?''

''அதனால என்ன?''—

இந்த வார்த்தையை இவன் அடிக்கடி சொல்லுகிறான்!

''அதனால என்ன?''

''ஐயாவோட தகுதி என்ன? என்னோட தகுதி என்ன?''

''இந்தப் பரிசலைப் பொறுத்தவரை...இந்த ஆற்றைப் பொறுத்தவரை என்னோட தகுதியை விட உன்னோட தகுதிகள்தான் அதிகம்!''

''எப்படீங்க?''


''ஒரு கதை சொல்றேன் கேளு... ரொம்பப் படிச்ச சன்யாஸி ஒருத்தர் ஆற்றிலே படகிலே போய்க் கொண்டு இருந்தார்.

''புதுசா ரிலீஸ் ஆயிருக்கிற உங்கபடம் எழுச்சியை ஏற்படுத்தியிருக்காமே சார்!''

''அப்படியா!''

''ஆமாம் இன்டர்வல்லுக்கு முன்னாடியே படம் பார்க்கிற எல்லோரும் எழுந்து போயிடறாங்களாம்...'' -தி. நடராஜன்





எங்கள் குடும்ப நண்பர்

நவரசத் திலகம் முத்துராமன்

குடும்பத்தினருக்கு எங்கள் இதயம் கலந்த அனுதாபங்கள்

மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்

என்டீலக்ஸ் தேங்காய் எண்ணை தயாரிப்பாளர்கள்

கொல்லம் - கேரளா



அந்தப் படகோட்டி அறிவற்றவன். ஞான சூன்யம். அவனைப் பார்த்து அந்தச் சன்யாசி கேட்டார்.

''நீ சாஸ்திரம் படிச்சிருக்கியா?''

''இல்லீங்க.''

''உன்னோட வாழ்நாளிலே கால் பாகம் வீண்!''

''நீ இலக்கியம் படிச்சிருக்கியா?''

''இல்லீங்க.''

''அப்போ உன்னோட வாழ்நாள்லே அரைப் பாகம் வீண்!''

—இப்படி ஒவ்வொரு கேள்வியா கேட்டு அவன் அறிவற்றவன் என்பதை அகம்பாவமாக நிரூபித்து வந்தார் அவர்.

திடீரென்று அந்தப் படகுக்காரன் கேட்டான்.

''உங்களுக்கு நீந்தத் தெரியுமா?''—

''தெரியாது.... ஏன்?''

''இப்போ உங்க வாழ்நாள் முழுசுமே வீண். ஏன்னு என்னோட படகு ஓட்டையாயிடுச்சு... இது முழுகப் போகுது. நான் நீஞ்சிக் கரை சேர்ந்திடுவேன்! நீங்க....?'' என்றான் ஓடக்காரன்.

''எப்படி இருக்கு கதை? உயிருக்கு ஆபத்தான அந்தக் கட்டத்துலே அந்த சன்யாசியை விட ஓடக்காரன்தான் திறமைசாலியா ஆயிட்டான் இல்லையா?''

கதையைக் கேட்ட செல்வி ஆச்சரியப் பட்டாள்.

இந்தச் சின்ன வயசிலே இவருக்கு என்னவெல்லாம் தெரிஞ்சிருக்கு!

திடீர்னு இந்தப் பரிசல் ஓட்டையானா எப்படி இருக்கும்னு நினைச்சுப் பார்த்ததை இவரு தன்னோட மந்திர சக்தியாலே புரிஞ்சுக்கிட்டு இப்படிக் கதை சொல்லி இருப்பாரோ?

''என்ன செல்வி யோசிக்கிறே? உன்னை நீயே தாழ்த்திக்கக்கூடாது... ராம கிருஷ்ண பரமஹம்ஸருங்கிற ஞானி அப்படித்தான் சொல்லியிருக்கார். எல்லார் கிட்டேயும் கடவுள் இருக்கார். ஆண்டவன் சந்நிதானத்திலே உயர்வு தாழ்வு கிடையாது. இதெல்லாம் மனுஷங்களாகிய நாமா பண்ணிண்டது! இப்போ உதாரணத்துக்கு ஒன்னு சொல்றேன்... நான் சொன்ன கதையிலே வந்த மாதிரி திடீர்னு இந்தப் பரிசல் ஓட்டையாயிடுத்துன்னு வைச்சுக்கோ.... எனக்கோ நீஞ்சத் தெரியாதுன்னு உனக்குத் தெரியும். அய்யரைத் தொடக் கூடாதுன்னு என்னைக் கரை சேர்க்காம நீ மட்டும் நீஞ்சிப் போயிடுவியா? நீயே சொல்லு...''

செல்வி வியந்து போனாள். இவருக்கு மந்திரம் தெரியுமா? நான் என் மனசுலே நினைச்சதை யெல்லாம் எப்படி இப்படிச் சொல்றாரு?


செல்வி பேசாமல் பரிசலை ஓட்டிக்கொண்டு வந்தாள்.

நீல விதானப் போர்வையின் நட்சத்திரக் கண்கள் சிமிட்டிய வண்ணம் இருந்தன.

மெல்ல....மெல்ல பரிசல் ஓட்டையாகிக் கொண்டிருந்தது.

செல்வியின் மனப் பரிசல்!

(தொடரும்)



18

சாந்தியின் முகத்தில் தோன்றிய கடுமையைக் கண்டு ஹரிக்குத் திகைப்பு ஏற்பட்டது. கலங்கிய மனநிலையில் இருப்பவளிடம் நாம் அவசரப்பட்டுச் சொல்லியிருக்கக் கூடாது...

அவள் நிதானமாகப் படுக்கையைத் தட்டிப்போட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''ஸாரி ஹரி! என்னாலே முடியாது. நான் யாரோட தோழமையையும் தேடிண்டு போகப்போறதில்லே. புதுசாப் பிரச்னைகளைத் தேடிக்கிறதுக்கு எனக்குத் தென்பில்லே.''

அவள் சுபாவமான புன்னகையைப் பூக்காமல், திரும்பியே பார்க்காமல் ஒரு வேகத்துடன் மற்ற நோயாளிகளைக் கவனிக்கப் போகையில் அவனுள் ஒரு வேதனை ஏற்பட்டது.

இவள் நம்மைத் தப்பாக நினைத்துவிட்டாள் என்கிற வேதனை. நான்கு மாதங்களாக நெருங்கிப் பழகி நம் சுபாவத்தை அறிந்து கொண்டவள், எப்படி இப்படி நடந்து கொண்டாள் என்று ஆச்சரியம் ஏற்பட்டது.

நான் கேட்டது போக்கிரித்தனமானது இல்லை. என் உடல் நிலையில் வேறு எந்த உள்நோக்கத்துடனும் நான் எந்தப் பெண்ணையும் கூப்பிட்டுவிட முடியாது. அது அவளுக்கு நன்றாகத் தெரியும். பின் எதற்கு எரிச்சல் ஏற்பட்டது? வேலைக்காரியின் ஸ்தானத்துக்கு அழைக்கிறதாக நினைத்து விட்டாளா? தோழமைக்காக அழைக்கிறேன் என்று புரியவில்லையா?

தோழமை.

அவன் இதுவரை அவளது திருமண வாழ்வில் அனுபவித்தறியாத தோழமை.



அந்தி நேரத்து உதயங்கள்

வாஸந்தி

அது அவளுக்கு முக்கியம் என்று தோன்றவில்லையா? ஆயுள் முழுவதும் இப்படித் தனியாக நிற்கப் போகிருளா?

சட்டென்று தன் எண்ணங்களின் ஓட்டத்தைக் கண்டு அவனுக்குத் திகைப்பேற்பட்டது. எனக்கு என்ன தகுதி இருக்கிறது. அவளை அப்படி அழைக்க? எந்த உரிமையில் அப்படி அழைத்தேன்? கணவனுல் வஞ்சிக்கப்பட்ட பலஹீனமான நிலையில் அவள் இருப்பது என்னையும் பலவீனப்படுத்தியிருக்க வேண்டும். யோசிக்காமல் வார்த்தைகளைக் கொட்டியிருக்க வேண்டும்.

அவளுடைய கணவனின் ஆதிக்கத்திலிருந்து அவள் விடுபட்டாலும் அவள் எதற்காக அவனுடன் வந்து தங்கச் சம்மதிக்க வேண்டும்? எந்த மாதிரி வாழ்க்கையை நம்பி வருவாள்? சக்கர நாற்காலியில் மட்டுமே நகரக்கூடிய ஓர் ஆணுக்காக அவள் ஏன் தன் புதிய சுதந்திரத்தைப் பாழடித்துக் கொள்ள வேண்டும்? ஒரு ஆணின் தோழமையோ உறவோ வேண்டுமென்ருல் அவள் ஒரு ஆரோக்கியமான ஆணுடன் இருக்க விரும்புவாளா? கம்ப்ளீட்லோ பாரப்ளீஜியாவுடன் மாரடிக்க விரும்புவாளா?

இதையெல்லாம் எப்படி நாம் யோசிக்காமல் போனேம்? எத்தனை அசட்டுத்தனம் நமக்குள் புகுந்து விட்டது! எத்தனை சுயநலம் புகுந்து விட்டது!

அவன் தன்னைச் சுற்றிப் பார்த்தான். இந்த அறையில் இருந்த பன்னிரண்டு படுக்கைகளிலும் பல தினுசான உடல் ஊனங்கள். எல்லாரிடமும் சாந்தி ஒரே தினுசாய்ப் புன்னகை மாருமல் மிக நெருங்கிய பந்துவாய்க் கரிசனத்தோடு நடந்து கொள்கிருள். எல்லாரும் அவளைத் தங்களுடன் அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்று விரும்ப ஆரம்பித்தால் எத்தனை பெரிய பைத்தியக்காரத்தனம்! மற்ற எந்த நோயாளியாவது அப்படிக் கேட்டிருந்தால் கன்னத்தில் அறைந்திருப்பாள்.

நமக்கு எப்படி அப்படி ஓர் அசட்டுத்தனமான துணிச்சல் ஏற்பட்டது?

'உங்க கிட்ட ஏற்பட்டிருக்கிற மாதிரி ஒரு நெருக்கம் எனக்கு யார் கிட்டேயும் ஏற்பட்டதில்லே ஹரி!' — அவளுடைய இந்த வார்த்தைகள்....

இந்த வார்த்தைகள்தான் அவனுள் விபரீத கற்பனைகளைக் கிளப்பியிருக்க வேண்டும். அந்தச் சிரிப்பும், இளமைக் கோலமும் மாயாவின் நட்பு நழுவிப்போன ஏக்கத்துக்கு மருந்தாகத் தோன்றியிருக்க வேண்டும். நார்மல் வாழ்க்கைக்கு லாயக்கற்றவன் நீ என்று சொல்லாமல் சொல்லி, நேசம் என்கிற வார்த்தையை எட்டி உதைத்த ஒருத்தியின் செயலால் அதிர்ந்துபோன எனக்கு நார்மல் அப்நார்மல் என்பதெல்லாம் ஒரு மனப் பிரமை 'என்று புரிய வைத்தவள் இவள். அந்த மாதிரி ஒரு உணர்வை நோயாளிகளின் மனத்தில் ஏற்படுத்தவே இவள் இங்கு நியமிக்கப்பட்டிருக்கிருள். அதற்காக அவள் பிரயோகித்த நெருக்கமான வார்த்தைகளையெல்லாம் நான் தப்பாக எடுத்துக்கொண்டேனுனல், எனக்காகவே அவள் பிரத்யேகமாக உபயோகித்தாள் என்கிற பிரமையில் மாட்டிக் கொண்டேனுனல் ஆபத்து எனக்குத்தான்.

கையிலிருந்த புத்தகத்தைப் படிக்க முடியாமல் அவன் அந்த மார்பில் சாத்திக் கண்களை மூடிக் கொண்டான். வெளியில் வராத கண்ணீர் கண்களுக்குள் ஊசி முனைகளாய்க் குத்தின. கொஞ்ச நாட்

களாக இல்லாதிருந்த சுய பச்சாதாபம் உத்வேகத்துடன் பொங்கிற்று. இந்த மாதிரி யாருக்கும் வேண்டாதவனாய் உபயோக மற்றவனாய் ஒரு அவல வாழ்க்கையை வாழ்ந்து என்ன ஆகப்போகிறது? நான் இருந்து என்ன லாபம்? சமூகத்தில் நான் எந்த வகையில் ஒரு உபயோகமான பிரஜையாய் இருப்பேன்? இன்னொருவருடைய உதவியை ஆயுசுக்கும் எதிர்பார்த்துக் கொண்டு, நினைத்த இடத்துக்குப் போக முடியாமல், நினைத்த காரியத்தைச் செய்ய முடியாமல், காத்திட்டருடன் சக்கர நாற்காலியில் சுழன்றுகொண்டு இத்தனை மதில்களைக் கடந்து எந்தக்கோட்டையைப் பிடிக்கப் போகிறேன்? எதற்கு இந்த உடற் பயிற்சிகள்? எதைச் சாதிக்க? நான் செத்து ஒழிந்தால் இந்தச் சமூகத்துக்கு என்ன நஷ்டம்?

"குட்மார்னிங் மிஸ்டர் ஹரி!"

அவன் கண்களைத் திறந்தான். டாக்டர் வர்மா நின்று கொண்டிருந்தார், பெரிய புன்னகையுடன் கைத்தடியை ஊன்றியபடி.

அவன் தலையைக் குனிந்தபடி புன்னகைக்காமல், "குட் மார்னிங்" என்றான்.

"ஹௌ இஸ் லைஃப்?"

அவரையும் அவருடைய பெரிய புன்னகையையும் பார்க்கும்போதெல்லாம் தனக்கு ஏன் அடி மனத்தில் ஓர் எரிச்சல் ஏற்படுகிறது என்று புரியாத ஆச்சரியத்துடன் அவன் சொன்னான்:

"இந்த லைஃப் எதற்கு என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் டாக்டர்!"

வர்மாவின் புருவங்கள் யோசனையுடன் உயர்ந்தன.

"என்ன நேர்ந்தது உங்களுக்கு இன்று? நீங்கள்தான் இங்கு பர்ஃபக்ட் பேஷண்ட் என்று நினைத்தேன். மெள்ள மெள்ள உங்கள் உடல்நிலைக்கு மனசை விவேகமாகப் பழக்கிக் கொண்டுவிட்டீர்கள் என்று நினைத்தேன்."

"வேறே வழியில்லேன்னு பழகிண்டேன். விவேகம்னு சொல்ல முடியாது அதை. மந்தையோடு நடக்கறப்போ வேற வழி எங்கே?"

வர்மா அவனைக் கூர்ந்து பார்த்தார்.

"இப்ப புதுசாஏதாவது வழிதெரியறதா?"

"வழியைத் தேடிண்டு போவானேன் என்று தோன்றுகிறது."

திடீரென்று சொல்லத் தெரியாத ஆதங்கம் மனசை நிறைத்தது. வார்த்தைகள் தடுமாற்றத்துடன் வந்தன.

"டாக்டர்! நான் இப்படி அரை குறை மனுஷனாய் உயிர் வாழ வேண்டிய அவசியம் என்ன? கால் இருக்கிற பிரக்ஞையே இல்லாமல் நான் வேகமா ஓடிப் பழகினவன். இப்பொழுது இந்தக் கட்டிலிலிருந்து வீல் சேருக்கு நகர்ந்துஉட்காருவது பெரிய சாதனையாகப் படுகிறது. அந்தத் திருப்தி கொஞ்ச நேரத்துக்குக்கூட இல்லை. இந்த காத்திடர் பாட்டில் கூடவே இருக்கு என் ஊனத்தை நினைவு படுத்தற மாதிரி... டாக்டர் நான் எதற்கு இத்தனை கேவலமான ஒரு வாழ்க்கையை வாழணும்?"

டாக்டர் வர்மா இடையில் குறுக்கிடாமல் அவன் மனத்தில் இருப்பதைக் கொட்டி விடட்டும்' என்று நினைத்த மாதிரி அவனை யோசனையுடன் பார்த்துக்கொண்டு நின்றார்.

"இந்த நான்கு மாதங்களாக என்னை மாதிரி பல பேர்களைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்ததில் நான் தனியில்லை என்கிற ஒரு ச ாதானம் இருந்தது. இன்னும் ஒரு மாசத் லே என்னை டிஸ்சார்ஜ் செய்து விடுவீர்கள். அதுக்கு அப்புறம் இந்தச் சமாதானமெல்லாம் பெரிய கண் துடைப்பு என்று புரியும். என்னுடைய தனிமை பயங்கரமாகத் தாக்கும். யாராவது என்னிடம் பிரியமாக இருக்க மாட்டார்களா என்று மனசு அலையும்....!"


அவன் புறங்கையால் கண்களை மறைத்துக் கொண்டான்.

"அத்தனை கஷ்டங்களுடன் இந்த வாழ்க்கையை வாழ வேண்டியது அவசியமில்லை டாக்டர்!"

"இந்தத் திடீர் டிப்ரெஷனுக்கு ஏதாவது காரணம் இருக்கணும். நீங்கள் என் ரூமுக்கு வாருங்கள் பேசலாம்."

அரை மணி நேரம் கழித்து அவர் எதிரில் உட்கார்ந்தபோது அவர் கண்களில் இது வரை கவனித்திராத ஒரு காருண்யம் தெரிந்தது. அவனுக்காக அவர் வருந்துவது தெரிந்தது.

"இந்த மாதிரி உடல்நிலையிலே இப்படி மனச் சோர்வு ஏற்படறது இயற்கையானது.



தகவல் : சமந்தின்

எனக்கே கூட இந்த அனுபவம் முன்பு ஏற்பட்டிருக்கிறது.''

''உங்களை விட என்நிலை மோசம்.''

''டிகிரியில் வித்தியாசம் அவ்வளவுதான். மன உளைச்சல் எல்லாருக்கும் ஒரே மாதிரிதான் இருக்கும்.''

அவன் திடீரென்று ஒரு ஆத்திரத்துடன் அவரைப் பார்த்தான்.

''எப்படி? இருபத்தி எட்டு வயசில் உங்கள் வாலிபத்தை இழந்தீர்களா? ஆயுசுக்கு ஒரு காத்திட்டர் பொருத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதா?'' அவனுக்கு மார்பு படபடத்தது.

''உங்கள் நிலைக்கு நான் பொறுப்பில்லை ஹரி. இந்த நிலையிலும் உங்கள் தேவைகளை நீங்களே கவனித்துக் கொள்ள எங்களால் முடிந்த அளவு உங்களைத் தயாராக்கியிருக்கிறோம்.''

''என்ன பிரயோஜனம்? என்னை முழு மனுஷனா இந்த உலகம் ஏற்குமா?''

''நீங்களே உங்களை முழு மனுஷனாய் ஏற்கணும் ஹரி. இந்த விபத்து உங்களுக்கு எப்படிப்பட்ட அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்று எனக்குப் புரிகிறது. இந்த மாதிரியெல்லாம் சோதனைகள் ஏன் ஏற்படணும் என்கிற ஆராய்ச்சியில் எனக்கு நம்பிக்கை இல்லை. அந்தச் சோதனைகளை ஏற்றுக் கொண்டு அதை நமக்கு லாபமாக எப்படி மாற்றிக்கொள்வது என்கிற முயற்சியிலே தான் நீங்க மனுஷன்னு காண்பிக்கணும்.''

ஹரி ஏதோ ஆத்திரத்துடன் குறுக்கிடப் பார்க்கையில் அவர் புன்னகையுடன் கை அமர்த்தினார்.

''இந்த மாதிரி நிலையில் ஆத்திரம் வரும். நான் மட்டும் ஏன் இப்படிக் கஷ்டப்பட வேண்டும்? எல்லாரும் நன்றாக இருக்கிறார்களே, வேகமாக ஓடுகிறார்களே என்கிற ஆங்காரத்தால் ஆத்திரம் வரும்.

''நாம எல்லோருமே ஏதோ ஒரு சாதனைக்காகப் பிறந்திருக்கோம் மிஸ்டர் ஹரி. இந்த உடம்பு அதற்குக் கருவி. கருவி கொஞ்சம் சேதமடைஞ்சு போச்சு என்கிற துக்காக நம்ம வேலையைக் கவனிக்காம விட முடியுமா?''

''இது உபயோகமில்லாத கருவி.''


''அதைஉபயோகமாக்கறதிலேதான் உங்க சாமர்த்தியம் இருக்கு. உங்களை விட மோசமான நிலையிலே இருக்கிற எத்தனையோ பேர் சரீரத்தைப் பத்திய பிரக்ஞையே இல்லாம அதோட உபாதையை ஒரு தடங்கலாவே நினைக்காமெ வாழ்கிறார்கள்!

''மனசு உடைஞ்சு அழுவது ரொம்பச் சுலபமான வழி மிஸ்டர் ஹரி. இந்த உடம்புக்கு எதற்கு இத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? லுக் அட் இட் ஆஸ் எ சாலஞ்ச்!''

ஹரி தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்தான்.

வர்மா எழுந்து அவன் முதுகைத் தட்டினார்.

''இனிமே முகத்தைத் தொங்கப் போட்டுக்கொள்ளாதீர்கள். ஓட்டப் பந்தயத்திலே முதல்ல வர முடிஞ்சாத்தான் ஓடுவேன் இல்லேன்னா ஓடி என்ன லாபம்னு எல்லாரும்



கருத்து: ராஜு

இருந்தா பந்தயம் எங்கே இருக்கும்?''

வர்மாவிடம் பேசிவிட்டு வந்த பிறகு மனசு மெள்ள மெள்ள விரிந்து கொண்ட மாதிரி இருந்தது. ஒரு கண நேரப் பலவீனத்தில் எத்தனை அசட்டுத்தனமான மனச் சோர்வுக்கு ஆளாகிப் போனேன் என்று வெட்கமே ஏற்பட்டது.

'இந்தச் சரீரத்துக்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்?'

அவனுக்குச் சிரிப்பு வந்தது. 'அதாவது உனக்கு இருபத்தி எட்டு வயது என்கிற ஞாபகம் இருக்கக் கூடாது!' என்கிறார்.

ஞாபகங்கள்.

அவைதாம் என் மனத்துக்கு விலங்குகள். அவற்றை விலக்கிக் கொண்டு வெளியேறினால் தான் நமக்கு விமோசனம்.

சாந்தியைப் பார்த்துப் பழையபடி கலபமாகச் சிரித்தான்.

''ஸாரி சாந்தி. நான் அந்த மாதிரி உங்களைக் கேட்டிருக்கக் கூடாது'' என்றான்.

''சமயத்தில் டாக்டர் வர்மா எனக்கு நல்ல ப்ரெயின் வாஷ் கொடுத்தார். மனசிலே எந்த மாதிரி எண்ணங்கள் இருந்தாலும் என்நிலையிலே சட்டுனு உளறிடக் கூடாதுன்னு புரியறது இப்போ!'' என்றான். (தொடரும்)

கைலாச தரிசனம்



நேருக்கு வழியிலே இறைவன் என்றும் கொலு வீற்றிருக்கும் புனிததலம் கைலாசம். அதன் அருகே அருட்கடலான மானசரோவர் என்னும் தடாகம். காரைக்கால் அம்மையார் காலத்திலிருந்து, கணக்கற்ற இடர்களைக் கடந்து, அடியார்கள் மேற்கொள்ளும் யாத்திரை, கடந்த சில ஆண்டுகளாகத் தடைப்பட்டிருந்தது. இன்று மறுபடி வழி திறந்துள்ளது!

ஒரு தலைமுறை இடைவெளிக்குப் பிறகு கைலாச – மானஸரோவர் யாத்திரைக்கு வழி திறந்துள்ளது.

தலாய் லாமாக்களின் அருளாட்சியில் திபேத் இருந்தவரை இந்தியர்கள் ஆண்டுதோறும் கைலாச – மானஸரோவர் யாத்திரை மேற்கொள்வது சாதாரணமாக இருந்தது— அதாவது அதற்கெனத் துணிந்தவர்களுக்கு! திபேத்தைச் சீனு தனதாக்கிக்கொண்ட 1959ம் ஆண்டு முதல் இந்த வாய்ப்பு பக்தர்களுக்கு இல்லை. ஜூன் மாதம் இந்தியாவுக்கு வந்த சீன வெளிநாட்டமைச்சர் ஹுவாங் ஹுவா நமது வெளி விவகார மந்திரி திரு பி. வி. நரசிம்மராவ் இருவரும் சந்தித்தபோது நல்லிணக்க அடையாளங்களில் ஒன்றாக கைலாசம் – மானஸரோவர் போக விரும்பும் யாத்திரிகர்களுக்கு சீன அரசு அனுமதி அளிக்க ஒப்புக்கொண்டது.

அரசாங்க அறிவிப்பு வந்தவுடனேயே ஆயிரம் மனுக்கள் வெளி விவகார அமைச்சக்கு வந்து குவிந்தன. ஒரு தடவைக்கு இருபது பேரே செல்லலாம், மூன்று கோஷ்டிகளே இந்த ஆண்டு செல்லலாம் என்ற நிலையில் சீட்டுக் குலுக்கிப் போட்டு யாத்திரிகர்களை அரசு தேர்ந்தெடுத்தது. முதல் ஆண்டில் முதல் கோஷ்டியில் (செப்டம்பர்) பயணம் சென்று வந்த திரு சுதர்ஸன் லாலேயும் திரு தேஜ் முகர்ஜியையும் சந்தித்தேன்.

திரு சுதர்ஸன்லால் ஒரு பஞ்சாபி. டில்லி வாசி. ரிசர்வ் பாங்க் ஊழியர். வயது 52.

''கடினமான சூழ்நிலையை உடம்பு தாங்குமா என்று மருத்துவ சோதனை செய்தே எங்களை எடுத்தார்கள். அப்படியும் மூன்று பேர் எங்கள் கோஷ்டியில் பாதியில் நின்று விட்டார்கள். நடைக்கு அஞ்சக் கூடாது. எந்த வசதியும் கேட்காமல் வாழத் தெரிய வேணும். அப்போதுதான் இந்த மாதிரி யாத்திரைகளை அனுபவிக்க முடியும்'' என்றார் சுதர்ஸன்லால்.

செலவு அதிகமோ?

''அதிகம் என்று சொல்ல முடியாது. உத்தரப் பிரதேசத்தில் இந்திய அரசு ஆதரவு பெற்று வரும் குமாயூன் மண்டல் விகாஸ் நிகம் என்ற நிறுவனம் எங்கள் பயண ஏற்பாடுகளைப் பார்த்துக் கொண்டது. டில்லியிலிருந்து புறப்பட்டு டில்லி திரும்பும்வரை அவர்கள்பொறுப்பு. தலைக்கு ரூ2500 வாங்கிக் கொண்டார்கள். தவிர, சீன எல்லைக்குப் போனதும் அங்கே மலை ஏறும் குதிரை, சாமான் சுமக்கும் ஆள். செலவு ஆகாரச் செலவு முதலியன கொஞ்சம்தான். பிரயாண ஏற்பாடுகளுக்காகத் தடிமனான கம்பளி உடை அது இது என்று மொத்தத்தில் நாலாயிரம் ரூபாய் ஆகிவிட்டது எனக்கு.''


யாத்திரையின் நினைவாக மானஸரோவர் புனித நீரையும், பல வண்ணங்களில் அங்கே கிடைத்த மணலையும் கொண்டு வந்திருக்கிறார். புகைப்படங்கள் எடுத்திருக்கிறார்.

உத்தரப் பிரதேசத்தின் வடக்குப் பகுதியில் லிபு–லேக் என்னும் மலைகளுக்கு இடையில் உள்ள கணவாயைக் கடந்து இந்திய எல்லை தாண்டி நாலு மணி நேர ஜீப் பயணத்தில் இருபதாவது மைலில் உள்ளது தக்லகோட் என்னும் சின்னஞ்சிறு திபேத்திய நகரம். இங்கேதான் யாத்திரிகர்கள் மானஸரோவர் கைலாசம் போக 'விஸா' பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தியர்கள் தான் பல ஆண்டுகளாக வரவில்லையே தவிர நேபாளிகள் (அவர்கள் இந்துக்கள்தானே) ஆண்டுதோறும் மானஸரோவர் – கைலாச

× பனிமுடிய சிகரத்துடன் கைலாசம்

தரிசனத்துக்கு யாத்திரை போய்க் கொண்டிருக்கிறார்கள். சிலர் அனுமதித்து வருகிறார்கள். சுமார் பத்தாயிரம் பேர் மக்கள் தொகை கொண்ட தக்ள கோட்டை விட்டால் அப்புறம் நகரம் என்று சொல்ல எதுவும் இடையாது. இந்த ஊருக்கும் திபெத்திய தலை நகர் லாஸாவுக்கும் இடையே தூரம் 1600 கி. மீட்டர். ஜீப்பிலே வந்தாலே ஏழு நாள் மலை வழிப் பயணம். உத்தரப்பிரதேச மலைகளைக் கடந்து பனியிலும் மழையிலும் ஜீப், நடை, குதிரைச் சவாரி என்று இந்த ஊருக்கு வர இந்திய யாத்திரிகர்களுக்கு எட்டு நாள் ஆகிறது!

தக்ளகோட் தாண்டிக் கோஷ்டி இரண்டாகப் பிரிந்தது. மானஸரோவர் வலம் வருவோர் யார்





⌘ கதர்லன்லால்



⌘ மலைகள் பின்புலனில் மானஸரோவர் ஏரி

யார், கைலாசம் வலம் வருவோர் யார் யாரென்று பிரித்து கொண்டார்கள். கைலாச கிரி வலம் சற்றே கடினமானது. மானஸரோவர் வலம் தூரம் அதிகம். மூன்று பகல், இரண்டு இரவில் கைலாசத்தையும், நான்கு பகல் மூன்று இரவில் மானசரோவரையும் வலம் வந்தார்கள். பகலில் நடை. இரவில் கூடாரம் அடித்துத் தங்கி இளைப்பாறுதல். பகல் என்றால் சுமார் ஆறு மணி நேரம்தான் நடக்கமுடியும்.



ஒருவன் : "என் மனைவி மாதிரி, சினிமாவை யாரும் ஆழ்ந்து ரசிக்க மாட்டாங்க!"

மற்றவன் : "ஏன்?"

ஒருவன் : "சினிமாவுல மழை பெஞ்சதும், மொட்டை மாடியிலே கருவடாம் போட்டிருக் கேன்னு, எழுந்து வந்துட்டா!"

· ஆர். வசந்தகுமார்

"என்னடா, இவ்வளவு மார்க் வாங்கியிருக்கே.. ஒரு காலேஜி லும் இடம் கிடைக்கலியா..? ஆச் சர்யமா இருக்கே.. எதெதுக்கு அப்ளிகேஷன் போட்டே....?"

"ஸ்டெல்லா மேரிஸ், க்வீன் மேரிஸ், எத்திராஜ்..."

-சி. மோகன்தாஸ்



, பயணிகளுக்குக் கூடாரம் தந்து, அதை அமைக்கவும், வழித் துணையாகவும் ஆட்களை அனுப்பி, உணவுக்கும் ஏற்பாடு செய்த சீனர்களை மனமாரப் பாராட்டுகிறார் இந்திய அரசின் வெளி நாட்டுத் துறை தொடர்பு அதிகாரி திரு முகர்ஜி. நாற்பது வயதாகும் இவரும் இந்த முதல் கோஷ்டியில் சென்று கைலாசத்தை வலம் வந்தவர்.

"மலைப் பாதைகளிலும், கிரிப் பிரதட்சணத்திலுமாக நாங்கள் சுமார் 300 கிலோ மீட்டர் கால் நடையாக நடந்திருக்கிறோம். ஆனால் எனக்கு அலுக்கவே இல்லை. சிறு வயதிலேயே எனக்கு இமய மலைகள் மீது ஒரு மோகம். ஐரோப்பாவில் சில மலைகளைப் பார்த்திருக்கிறேன். கம்பீரத்திலும் அமைதியிலும் இமய மலைக்கு ஈடு இல்லை." என்று சொல்லிக் கொண்டே வந்ததும் அவரது அறைச் சுவர்களில் இமய மலையின் பல்வேறு சிகரங்களின் போட்டோக்கள் இருப்பதன் பொருள் புரிகிறது. உடனே சட்டென்று, "கைலாச மலை இமய மலைத் தொடரைச் சேர்ந்ததில்லை என்றாலும் அதற்குப் போகும் பாதை, இந்த சிகரம், அதை வலம் வருவது எல்லாமே ஃபென்டாஸ்டிக்! எனவேதான் நான் இந்த முதல் கோஷ்டியில் சேர ஆவலுடன் முன் வந்தேன்" என்றார்.

கோஷ்டியில் அனைவரும் அத்தனை குளிரில் மானஸரோவர் ஏரியில் நீராடியதை ஓர் இனிய அனுபவமாகக் குறிப்பிட்டார்.

"இந்தப் பயணத்தில் இந்திய — சீன உறவு நல்லிணக்கமாகி வருவதைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. முதலில் நமது பயணிகள் மானஸரோவரையும் கைலாசத்தையும் வலம் வருவார்கள் என்றே சீன அதிகாரிகள் எதிர்பார்க்கவில்லை. அதற்குத் தயாராக இல்லை. நேபாளிகள் கூடக் கைலாச தரிசனம்தான் செய்வார்கள். வலம் வருவதானால் அங்கங்கே இரவு தங்கவும் உணவுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமே. கூடாரங்கள் கொடுத்து, உதவிக்கு ஆள் அனுப்பிக்குதிரைகள்கொடுத்துஉதவினார்கள். நெடுக பணிவுடன் மரியாதையுடன் நடந்து கொண்டார்கள்" என்றார், எதிர்கால உறவு நன்றாக இருக்கும் என்ற நம்பிச்கையுடன்.

"பெரிய ஏற்பாடுகள் நடக்கும்போது சிறிய குறைகளைப் பெரிதுபடுத்தக் கூடாது. இதையெல்லாம் ஏன் ராகுல்பேடி எழுதுகிறாரோ" என்று கொஞ்சம் அங்கலாய்த்தார். (ராகுல்பேடி தமது இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரையில் 'சீனர் கொடுத்த கூடாரங்கள் கூரையில் பொத்தல்' என்றும் கூட வந்த சுப்பிரமணிய சுவாமி எம். பி. நடையைத் தவிர்த்து ஜீப்பில் திரும்பி விட்டதைப் பற்றியும் எழுதியிருந்தார்.)

இந்த ஆண்டு மூன்று கோஷ்டிகள் போய் வந்தன. ஒரே பெண்மணி உட்பட ஐம்பது பேர்தான் போக முடிந்தது. வரும் ஆண்டுகளில் கைலாச தரிசனம் பெறுவோர் தொகை பெருகலாம்.

பேட்டி : தம்பி சீனிவாசன்

புகைப்படங்கள் : சுதர்சன்லால்

புதிய

ஃபேப்

டிட்டர்ஜெண்ட்
கட்டி

வெளுக்கிறது உங்கள் துணிகளை அதிகத் தூய்மையாக



விசேட பளிச்சிட வைக்கும் சக்தியை உள்ளடக்கிய உன்னத ஃபார்முலா.

புதிய ஃபேப் டிட்டர்ஜெண்ட் கட்டியின் சக்திவாய்ந்த நுரைவளம் ஆழ ஊடுருவிச் சுத்தம் செய்து விடாப்பிடியான அழுக்குகளையும் அறவே அகற்றுகிறது.
அதன் விசேட பளிச்சிட வைக்கும் சக்தி வெள்ளைத்துணிகளை அதிக வெண்மையாக்குகிறது— வண்ணத்துணிகளை அதிகமாக பிரகாசிக்க வைக்கிறது—
உங்கள் துணிகளுக்கு தூய்மை கலந்த புதுமணம் தருகிறது.

அது ஈரக்கசிவற்றது—எனவே அதிக துணிகளை வெளுக்கிறது— உங்களுக்கு சிறந்த சிக்கனம்.


இணையில்லா வெண்மையும், ஈடில்லா பிரகாசமும் தரும் சலவைக்கு-புதிய ஃபேப் டிட்டர்ஜெண்ட் கட்டி!



தமிழ்நாடு மற்றும்
பாண்டிச்சேரியில் கிடைக்கிறது.

கோல்கேட்–
பாமோலிவ்
தரமாக அளிப்பது

GKM FD 4 TM



வேலைக்குப் போகும் பெண்
நடிப்பு: டணால் தங்கவேலு
கதை: சாருகேசி, தமயந்தி
சித்திரம்: செல்லம்
போட்டோ: உத்ரா
14
ஆமா அமிர்தம், இன்னும் எத்தினி நாளைக்கி கண்ணுக்கு மருந்து போட்டுக்கணும்னு டாக்டர் சொல்றாரு?
இன்னும் ஒரு வாரத்துக்கு வெளிச்சம் படக்கூடாதாம். நான் டிவி பார்த்த மாதிரிதான் போங்க!
எனக்கு ஒரு கவலை அமிர்தம். ஒங்க கண்ணு எப்பவுமே செவந்து இருந்தா, கோபத்துல சிவந்திருக்கா நோயில சிவந்திருக்கான்னு எப்படி கண்டு பிடிக்கறது?
என்னைக் கண்டாலே திண்டலாப் போச்சு ஒங்களுக்கு.... டிவி வாங்கியும் சினிமா பார்க்க முடியலியேன்னு நான் கவலைப் படறேன்!
பொறு, பொறு. பிரிஜ்ஜை வச்சு பச்சத் தண்ணியக் குடிக்கணும்னே. பிரிஜ்ஜு வரப்போவுது நாலு நாளை. ஜிலுஜிலுன்னு தண்ணியக் குடிச்சா ஒனக்கு ஜலதோஷம், இருமல், சளி, நியுமோனியா, டபுள் நியுமோனியா, டபுள் டைபாயிட்...
ஐயோ நிறுத்துங்க, நிறுத்துங்க! பெருசாம், எனக்கு பிரிஜ்ஜும் வாணாம், ஐஸ் தண்ணியும் வாணாம்!
பயப்படாதே அமிர்தம், நான் பேச்சுக்குச் சொன்னேன்! ஆனா ஒன் ஆசைய, மருமக வேலைக்குப் போயி எவ்வளவு அழகா நிறைவேத்தி வைக்கிறா பாரு!
அம்மா, நாலு நாள், இன்னும் நாலு நாள். வெள்ளை வெளேர்னு சிந்தாமணிக் குட்டி மாதிரி ஒரு பிரிஜ்ஜு இந்த ரூம்ல வந்து உக்காரப் போவுது பாரு!
அடேய், வாணாம்டா பண்ணிக்கு அது உக்காரவும் வாணாம், நிக்கவும் வாணாம். வந்ததையே அனுபவிக்கக் குடுத்துவைக்கலியே எனக்கு! அண்டாத் தண்ணியே போதும்டா எனக்கு!
இவர் முன் பணம் கட்டிட்டாரு அத்தை!



அட்டை: வண்ணப்படம்: உத்ரா

குடிசையில் ஒரு கோபுரம்

அன்னம்

போட்டிக் கதை—9

பக்கத்து ஊர் மாரியம்மன் திருவிழாவின் போதுதான் ரங்கன் எனக்கு அந்தக் கிழவியைக் காட்டினன்.

ரங்கன் என் தோஸ்து. இரண்டு பேரும் வேலூர் சிறையில் ஒன்ருக இருந்தோம். அவனுக்குத் தெரிந்ததை நான் கற்றுக் கொண்டேன். - நான் அறிந்ததை அவனுக்குச் சொல்லித் தந்தேன். ''திருநாள் சமயம். வந்தாயாஞல் தேட்டை போடலாம்!'' என்று அவன் எனக்குக் கடிதம் போட்டிருந்தான். அங்கிருந்து புறப்பட்டு மதுரைக்கு அருகிலுள்ள கிராமத்துக்கு வந்தேன்.

''இந்தக் கிழவி நம்ம ஊர்தான்.... காதுலேயும் கழுத்திலேயும் கிட்டத்தட்ட முப்பது சவரன் தேறும். ஒரே மகன். ராணுவத்தில் இருக்கிருன். நிறையப் பணம் அனுப்பருன். கிழவி வீட்டுக்குள் எதையோ புதைச்சு வச்சிருக்கும்.''

எனக்கு ஆசை பிறந்தது. இந்தப் பிக்பாக்கெட்டில் கிடைக்கும் ஐந்தும் பத்தும் எந்த மூலைக்கு? ஒரேயடியாக ஒரு பத்தாயிரம் இல்லை பதினைந்தாயிரம் கிடைத்தால் அப்புறம் யோக்கியமாக இருக்க வேண்டுமாஞல் முயற்சி செய்யலாம்.

அவள் பிள்ளையின் பெயர் சரவணன். முக்கியமாக அது போதும் எனக்கு.

ஒரு வாரம் கழித்து—எனக்கு மூர் மார்க்கெட்டில் கிடைத்த இளம் பச்சை யூனிபாரம் அணிந்து கொண்டு கிழவியின் வீட்டுக் கதவைத் தட்டினேன். என் கையிலிருந்த கூடையில் கிழவிக்கு ஆப்பிளும் ஆரஞ்சும் வாங்கி வந்திருந்தேன்.

''ஆயா! இது சரவணன் வீடுதானே?'' என்று விசாரித்தேன்.

''ஆமாம்! நீ யார் தம்பி?''

''சரவணனின் அம்மா இருக்காங்களா?'' என்று கேட்டேன்.

''நான்தான் தம்பி அது! உள்ளே வா! உட்கார்!'' என்று உபசரித்தாள் அந்த மூதாட்டி.

உட்கார்ந்தேன். ஹாலில் ஒரு போட்டோ மாட்டப்பட்டிருந்தது. போட்டோவைக் கையில் எடுத்துக்கொண்டேன்.


''பய ஜம்முன்னு இருக்கான் இல்லே... ஆயா! இது என்ன இரண்டு வருஷங்களுக்கு முந்தி எடுத்த படமா?''

''ஆமாம்!'' என்ருள் அவள். போட்டோவின் அடியில் தேதி போட்டிருந்தது. அவளுக்கு எங்கே தெரியப் போகிறது?

''இப்போ கொஞ்சம் பருமன். ஆள் நல்லா இருக்கான்.''

''நல்லா இருக்காஞ?''

''ஆமாம்... அடுத்த மாதம் லீவிலே வரேன். நீ போய் ஆயாகிட்டச் சொல்லு. பழம் வாங்கிக் கொடுன்னு என்கிட்டப் பணம் கூடக் கொடுத்தான். அப்புறம் நான் வரட்டுமா ஆயா?'' என்று திரும்புவது போலப் போக்குக் காட்டினேன்.



''நன்னா இருக்கு தம்பி! வாசல் குறட்டிலேயே திரும்பறதா? இரண்டு நாள் தங்கிட்டுப் போ, தம்பி!''

''இல்லே ஆயா! உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?'' என்றேன் மரியாதையோடு.

''இதிலே எனக்கு என்ன சிரமம்? வாப்பா உள்ளே வா! கொஞ்சம் இரு. போய் ஐயர் கடையிலேருந்து பலகாரமும் காப்பியும் வாங்கி வரச் சொல்றேன்'' என்று நகர்ந்தாள் கிழவி.

அவள் இடுப்பில் ஒரு சாவிக் கொத்து. அதுகூடத் தேவையில்லை. எந்தப் பெட்டியையும் என்னால் திறக்க முடியும். இரவு தூங்கும்போது நைஸாகக் கழுத்துச் செயினைக் கத்தரித்து விடலாம். கைவளையல்களையும் உருவிவிடலாம்.

கிழவி விழித்துக் கொண்டால்? ஒரே போடு! கிழவிதானே? இத்தனை நாள் வாழ்ந்தது போதாதா?

ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அனுவசியமாக வெளியே தலை காட்டக்கூடாது. எந்தப் பயலுக்கும் நம்ம முகம் கவனத்துக்கு வரக் கூடாது.

எனக்கு ஒரே உபசாரம்.

என்னை உட்கார வைத்துக் கிழவி பரிமாறினாள். கட்டாயப்படுத்திக் காப்பி சாப்பிடச் சொன்னாள்.

என் தாயார் மட்டும் உயிருடன் இருந்திருந்தால், அவளுக்கும் இந்த வயதுதான் இருக்கும். நிச்சயமாக இப்படியேதான் என்னைப் பார்த்துக் கவனிப்பாள்.

உண்ட வீட்டில் இரண்டகமா? என் அடிமனம் சொல்லியது. தர்மம் அதர்மம் எல்லாம் பார்த்தால் எப்படி? பிழைப்பு நடக்க வேண்டாமா?

அன்று இரவு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டேன். கிழவி — நகைகள் எல்லாவற்றையும் இரவு கழற்றிவிடுகிறாள். அவை அவள் தலையணைக்குள் பத்திரப்படுத்தப்படுகின்றன.

வேலை இன்னும் சுலபம். — தலையணையை மட்டும் மாற்றினால் போதும்.

அன்று இரவு கிழவி தூங்கவே யில்லை.

என்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் கேட்டாள். நானும் பொய்களைக் கோவைகளாக அடுக்கினேன்.

மறு நாள் காலை.

வெந்நீர் வைத்துக் கொடுத்து என்னைத் தலைமுழுகச் சொன்னாள். தொடர்ந்து மதியச் சாப்பாடு.

அவளுடைய எல்லாச் செய்கைகளும் என்னுடைய தீர்மானத்தை வெட்டி வீழ்த்தும் கோடாலியாக இருந்தன. அவள் பார்வையில் தெரிந்த அன்பு, பாசத்துக்கு முன் நான் கோழையாகி விட்டேன். பாசமும் அன்பும் என் உறுதியைக் கரைத்து விட்டன.

இனி அவள் வீட்டில் என்னால் திருட முடியாது. அவள் சுண்டு விரலுக்குக் கூட நான் கேடு நினைக்க முடியாது. என் அடிமனத்தில் மனிதாபிமானம் இன்னும் அந்த அளவுக்கு வற்றி விடவில்லை.



அன்றுஇரவு புழுக்கமாக இருக்கிறது என்று தெருத்திண்ணையில் படுத்துக்கொண்டேன். சமயம் பார்த்து என்சாமான்களை எடுத்துக்கொண்டு நழுவி விட வேண்டியது தான்.

இரவு பன்னிரண்டு மணி இருக்கும். உள்ளே நுழைந்தேன். கிழவி நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாள்.

மெதுவாகப் போய் என்சாமான்களை எடுத்துக் கொண்டு திரும்பினேன். வாயிற்கதவை இழுத்துச் சத்தமில்லாமல் மூட நான் முயன்றபோது. அது பலவந்தமாக உள்ளிருந்து திறக்கப்பட்டது.

கிழவி அங்கேநின்று கொண்டிருந்தாள்.

''நல்லாயிருக்குடா தம்பி... இதுதான்

'அழகா? சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டுப் போவது?''

என்னால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. 'தடாலெ' என்று அவள் கால்களில் விழுந்தேன்.

''என்னை மன்னிச்சுடு ஆயா!... எனக்கு உன் பிள்ளையைத் தெரியாது.... நான் அவனைப் பார்த்ததுகூட இல்லே. உன் நகைக்காகத்தான் வந்தேன்... ஒரு திருட்டு நாயி நான். நீ என்கிட்ட காட்டின பிரியத்துலே.....''

''எனக்கு எல்லாம் தெரியும் தம்பி!'' என்றாள் கிழவி.

''தெரியுமா?'' என்றேன் திகைத்துப் போய்.

''ஆமாம். என் பிள்ளைதான் நாலு மாசம் முன்னே ஒரு விபத்துலே போயிட்டானே. நீ என்ன காரணத்துக்காக வந்திருக்கிறாய் என்றும் தெரிந்து போயிற்று.''

எனக்குப் புரிந்தது. ரங்கனுக்கு இந்தச் செய்தி தெரிய நியாயம் இல்லை. ஆறு மாசங்களாக நாங்கள் உள்ளேயல்லவா இருந்தோம்!

''ஆமாம் ஆயா!... உனக்குத்தான் எத்தனை நல்ல மனசு... நான் வந்த உடனே 'போடா, வெளியே நாயே'ன்னு என் துரத்தலே?'' நான் உண்மையாகவே கேட்டேன்.

அவள் சிரித்தாள்.

''நீ திருடத்தானே வந்தே... இந்த அர்த்த ராத்திரியிலே நான் தனியாத்தானே இருக்கேன். என் கழுத்தை நெரித்து ஏன் நீ இன்னும் கொல்லலே?''


''உன்னைப் பார்த்தா எனக்கு என் அம்மா மாதிரி...!''

''அதேதான் தம்பி.... நீ நடக்கிறது. பார்க்கிறது. இருக்கிறது எல்லாமே அந்தப் பாவி சரவணனைப் போலவே....''

அவள் கண்கள் கலங்கின. அவள் கால்களை ஆதரவுடன் பற்றிக் கொண்டேன்.

வெகு சீக்கிரத்தில் இங்கிருந்து என்னைக் கழற்றிக் கொள்ள முடியாது. இதுவும் ஒரு வகையில் ஜெயில்தான். பாசச் சிறை. அன்புச் சிறை.

நான் ஆயுட் கைதியாக இங்கே முடங்கிக் கிடக்கத் தயார்!



ஹேருக்கு டை
செய்வது செயற்கை
யான தோற்றமளிக்கக்கூடும்.
ஆனால், நீங்கள் சரியான 'டை'யை
தேர்ந்தெடுத்துவிட்டால்
இயற்கையாகவே விளங்கும்.
கோத்ரெஜ் ஹேர்டை
தேர்ந்தெடுத்த பொருட்களால்
தயாரானது— நேர்த்தியாக
டை செய்கிறது. எவராலும்
வித்யாசம் காண முடியாது.

**நரை முடி 'எடுப்பான'
தோற்றத்தைத்
தருகிறது!**
'எடுப்பான' தோற்றம் அளிக்கக்
கூடும். ஆனால், தோற்றத்தில்
முதுமையையும் எடுத்துக்காட்டும்.
உங்கள் நண்பரையே கேட்டுப்
பாருங்கள்.

**முடிக்கு டை
செய்யும் தொல்லையை
எவர் விரும்புவர்?**
ஒருவரும் விரும்பமாட்டார்.
அதனால்தான், கோத்ரெஜ்
வழங்குகிறது தானாகவே பரவும்
ஒரு ஹேர் டை. இனி நீங்கள்
'முடியை பகுதிகளாகப் பிரித்து
சாயம் பூசும்' தொல்லைக்கு
உள்ளாக வேண்டாம். இந்த டை
உபயோகித்து, நுரை வரச்செய்து,
சிறிது காத்திருந்து, கழுவி
விடுங்கள். ஆஹா...
எவ்வளவு சுலபம்.

**ஹேர் டை உபயோகிப்பதினால்
முடி பாதிக்கப்படுமா?**
ஆம், பழைய முறையில் செய்யப்
பட்ட சாயங்கள் பாதிக்கலாம்.
அதனால்தான், கோத்ரெஜ்
அலாதியான ஹேர் டை
தயாரித்தளிக்கின்றனர். இதில்
'ஹேர் கண்டிஷனர்' சேர்க்கப்
பட்டிருப்பதால் உங்கள் முடிக்கு
இளமை தோற்றத்தை அளிக்கிறது.



கோத்ரெஜ் பர்மனென்ட் ஹேர் டை

**ஹேர் டை செய்வதிலுள்ள தொல்லையைப் போக்குகிறது;
தோற்றத்தில் இளமை பூரிக்க வைக்கிறது.**


2 வண்ணங்களில்: இயற்கையான கறுப்பு, கரும் பழுப்பு. 20 மி.லி. மற்றும் 40 மி.லி.

CASGS-154-204 TAM

உருவாச்







புரிசை கிராமம்.
தெருக்கூத்துக் கலைஞர் புரிசை கண்ண
தம்பிரான் (70 வயது!) தமது புத
புரிசை சம்பந்தனின் ஒத்துழைப்போ
இருபது தெருக்கூத்துக் கலைஞர்களின்
யுடனும் மகா கவியின் 'பாஞ்சாலி சப
தைத் தெருக்கூத்தாக உருவாக்கியிருக்கி
கூத்தை சுமார் மூன்று மணி நேரத்
நகரங்களிலும், இரவு பத்து முதல் வி
வரை கிராமப்புறங்களிலும் நடத்தத் தி
மிட்டிருக்கிறார் கண்ணப்பர்.
பாரதி நூற்றாண்டு விழாக்கொண்டா
தின் போது இவ்வாண்டு டிசம்பர் ம
சென்னையில் நடைபெறவிருக்கும்
நிகழ்ச்சியைத்துவக்கி வைக்க இருப்
குமாரி பத்மா சுப்ரமணியம்.

''வாருங்கள் சேர்ந்து பாடுவோ
என்று அழைத்தார் அமைப்பாளர் எ
சீனிவாசன். இப்போது வருடத்தில்
முப்பது பள்ளிகளில் இந்த 'கோரஸ் மி
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
''இசை எல்லோருக்கும் சொந்தமா
ஒவ்வொரு சராசரி இந்தியனின் உட
அது ஊறிக் கிடக்கிறது. இசையும்
லய்மும் இந்தியக் குழந்தைகளிடம் பு
கிடக்கிறது!'' என்கிறார் எம்.பி.எஸ்.
இவர் எல்லாப் பள்ளிகளுக்கும்
செல்வதில்லை. தம்மிடம் பயிற்சி
வர்களைத் தேர்ந்தெடுத்துப் பள்ளிக
அனுப்பி வைக்கிறார்.
பாடச் சொல்லிக் கொடுக்கும்போ
இசை பற்றிய அறிவும் குழந்தைகளு
சொல்லித் தரப்படுகிறது. புதுதில்லி
நாடக அகாடமி, தமிழகப் பள்ளிக் க
துறை - ஒத்துழைப்போடு இந்தியாவி
முதல் முறையாக, இந்தச் சேர்
வகுப்புக்கள் தமிழகப் பள்ளிகளில் நட
டுகின்றன.

இது ஒரு புது அனுபவம். சுத்தம்,
ஆசாரம், தேச பக்தி எல்லாம் பாடல்
வழியே குழந்தைகள் மனசில் தே
கின்றன.

சென்னை இந்திரா நகரின் தெரு ஒ
கூரை வேய்ந்த நீண்ட கொட்டகையில்
வாகின்றன வண்ண வண்ணச் சே
முழுப் புடவையையும் கையால் அச்
உருவாக்குகிறார்கள். ஆறு முதல்
அங்குலம் வரை நீளமும் மூன்று
அகலமும் உள்ள மர அச்சில் டிசை
வாக்கப்பட்டு, புடவையின் முழுப்
பிலும் வண்ணத்தில் முக்கி ஒற்றி எ
படுகிறது.
கிட்டத்தட்ட 1500 முறை மர அ
துணியின் மீது ஒற்றி எடுக்கிறார்கள்
புடவையின் முழு நீளத்துக்குமாக அ
மர மேசையில் 25 சாக்குத் து
ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி மெத்
அமைத்துக் கொண்டு; அச்சிட வே
சேலைத் துணியை அதன் மீது சுருக்கம
பரப்பி எத்தனை நுணுக்கமாக, எத்தனை
மாக, எத்தனை பொறுமையாக...

துகிறார்கள்!

வெற்றுத் துணி எத்தனை வேகமாக வண்ணச் சேலையாக உருமாறுகிறது!

ஒரே மாதிரி டிசைனில் இரு புடவைகளுக்கு மேல் காண்பது அபூர்வம்!

இதை வெற்றிகரமாக உருவாக்கியிருப்பவர் ஸ்ரீமதி சபிதா ராதாகிருஷ்ணா. கணவர் நிர்வாகத் துறையில் உதவுகிறார்.

70 ரூபாய் முதல் 300 ரூபாய் விலையுள்ள இந்தத் தயாரிப்புக்கள், இந்தியாவில் பல நகரங்களிலும் விற்பனையாகின்றனவாம். ஜப்பான், மேற்கு ஜெர்மனி, அமெரிக்காவுக்கும் ஏற்றுமதியாகின்றன.

'பாலைவனச் சோலை'யிலும் 'அலைகள் ஓய்வதில்லை'யிலும் சபிதா டிசைன் செய்த புடவைகளும், பாவாடை — தாவணிகளும் இடம் பெற்றிருக்கின்றன!

● பெருநகருக்கு வெளியே சுற்று வட்டாரத்தில் புதிய சிறு நகரங்கள் அமைவதால் நகரத்து நெருக்கடி குறைவதோடு, சுத்தமான காற்று, சுகாதார வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றை வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு அளிக்க முடியும் என்ற அடிப்படையில்தான் புதிய நகரங்களை உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

மறைமலை நகர்.

''தமிழக அரசு இந்தத் திட்டத்தைத் துவங்கியது 1973ல்'' என்கிறார் சென்னை நகர் அமைப்புத் திட்ட நிர்வாக அதிகாரி, திரு ஆர். நாகராஜன்.

''3390 ஏக்கர் பரப்பளவுள்ள மறைமலை நகரில் முதற் கட்டமாகத் தொழிற்கூடங்கள் அமைந்து வருகின்றன. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், தனியார் தொழிற்சாலைகள் முதலியன.

''குறைந்த வருமானக்காரர், மத்திய தரக் குடும்பத்தினர்களுக்கான வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன. 500 குடும்பங்களுக்கு மேல் ஏற்கனவே குடியேறிவிட்டன. தனியார் வீடு கட்டிக் கொள்வதற்கும் வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பூங்கா விளையாட்டுத் திடல், பள்ளி, தபாலாபீஸ், போலீஸ் ஸ்டேஷன் ஆகியவையும் அமைந்து வருகின்றன!''

நாலரை லட்ச ரூபாய் செலவில் பாலாற்றிலிருந்து ஒரு நாளைக்கு 3.5 மில்லியன் காலன் தண்ணீர் வருமளவுக்கு ஏற்பாடுகள் நடைபெற்று நீர்வழங்கு திட்டம் நிறைவேறும் தறுவாயில் இருக்கிறது. மின்சார வசதி — இப்போதைக்கு மட்டுமல்ல, எதிர்காலத் தேவைக்கும் செய்யப்படுகின்றன. -சாருகேசி



தமாஷ்!

''அவர் புனைபெயரில் எழுதுவதை விட்டுவிட்டு எப்போது சொந்தப்பெயரில் கதை எழுதுவார்?''

''சொந்தமாகக் கதை எழுதும்போது!''

-வ. தேனப்பன்

□ □ □

வீட்டுக்காரி: எங்க வீட்லே 'டி.வி.' இல்லையே, வேலை செய்யச் சம்மதமா?

வேலைக்காரி: அதனால் என்ன? எனக்கு ஒரு 'டி. வி.' செட் வாங்கிக் கொடுத்திடு. நான் எங்க வீட்லே இருந்தபடியே பார்த்துக்கறேன்.

-எஸ். வனஜா

□ □ □

மின்வண்டி. நெரிசலற்ற மதிய வேளை, என் எதிரே ஒரு காதல் ஜோடி. காதலன் காதலியின் கையைச் சீண்ட, அவள் தன் தலைக்கு மேலே ஏதோ ஒன்றைச் சுட்டிக் காட்ட - காதலனும் பார்க்க, இருவரும் விழுந்து விழுந்து சிரிக்க-ஓரக்கண்ணால் நானும் அவள் சுட்டிய பகுதியைப் பார்த்தபோது, அங்கே 'கை பிடிக்கக் கூடாது' என்ற அறிவிப்பு காணப்பட்டது.! 'புகை பிடிக்கக் கூடாது' என்ற அறிவிப்பில் 'பு' என்ற எழுத்தை மட்டும் யாரோ சுரண்டி எடுத்திருந்தனர்.

-பெம்ஜி

□ □ □

டைரக்டர்: ''என் புராணப் படத்தில் அர்ச்சுனன் வேஷம் கேட்கிறியே... என்ன தகுதி இருக்கு உனக்கு?''

அவன்: ''காலேஜ் நாட்களில் பிரமாதமா அம்பு விட்டிருக்கேன் ஸார்... முன் சீட் மாணவிகளின் மீது!''

□ □ □

டாக்ஸி டிரைவர்: ''நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி ஸார்!''

அவன்: ''ஏம்பா...?''

டாக்ஸி டிரைவர்: ''வழக்கமா ராயப்பேட்டையிலிருந்து மவுண்ட்ரோடு வந்தா என் டாக்ஸி மீட்டர் 48.40 காட்டும்... இன்று 47.10 தான் காட்டுது!''


-உ. ராஜாஜி

□ □ □

''அதோ போகிறாரே அவர் துச்சாதனன் பரம்பரையிலே வந்தவரு...''

''அப்படியா? எப்படித் தெரியும்?''

''அவர் காபரே டான்ஸ் கிளப் நடத்தறாரு!''



5

எல்லாம் முடிந்து விட்டது. பார்வதி மறைந்து விட்டாள். ப்ரியா வால் அதை நம்ப முடியவில்லை. பார்வதி அவ்வளவு சீக்கிரமாக எல்லோரையும் விட்டு விட்டுச் சென்றுவிடுவாள் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. மகனின் வருகைக்காக அத்தனை வருடங்கள் காத்திருந்து அவன் திரும்பி வந்த உடனேயே இந்த உலகத்தை விட்டுச் சென்று விடுவதா? விதி இப்படி ஒரு விபரீதமான விளையாட்டை அவிழ்த்து விடும் என்று அவளால் ஊகிக்க முடியவில்லை. பாவம் பார்வதி! மகன் திரும்பிய சந்தோஷத்தைச் சுவைக்க முடியாமல் போய் விட்டாளே! அது ஏன்? காரணத்தை டாக்டர் சொன்னார். அவர், அவள், கிரிஷ் பார்வதியின் படுக்கை அறையில் உட்கார்ந்திருந்தார்கள். பார்வதியின் படுக்கை கட்டிலில் ஓர் ஓரமாகச் சுற்றி வைக்கப்பட்டிருந்தது. கட்டிலின் நடுவில் ஒரு வெள்ளித் தட்டு. அதன் மேல் சாந்தமாக எரிந்து கொண்டிருக்கும் ஒரு மெழுகுவர்த்தி. அதைச் சுற்றிப் பலவிதமான பூக்கள். நடுவில் ஒரு வெள்ளிக் கோப்பையில் பால்.

''யூ ஸீ இந்த மாதிரி அசம்பாவிதமா நடக்கக் கூடாதுன்னு நான் ரொம்பப் பெய்ன்ஸ் எடுத்துண்டேன். ஆனா பிரயோஜனமில்லாமலே போச்சு.... ஒங்க அம்மாவோட ஹார்ட் ரொம்ப வீக். ஜெனரல் கண்டிஷனும் சரியா யில்லே. கிரிஷ் உனக்குத் தெரியுமோ இல்லியோ... ஒங்க அம்மா ரொம்ப சிக்கா இருந்தாங்க... அவங்க உயிரோட இருந்ததே உனக்காகத்தான்.''

கிரிஷ் வாயிலிருந்த டீக்கோப் பையை வெளியே எடுத்தான்.

''ஆனா டாக்டர் நீங்கதான் அவ்வளவு நல்லாக் கவனிச்சுக் கிட்டிருந்தீங்களே அம்மாவெ... நானும்



வருவான் ராஜகுமார

ராண்டார் கை

திரும்பி வந்துட்டேன்... அப்படி இருக்கச்சே மம்மி.. புரியவே இல்லே டாக்டர். நான் கொடுத்துவெச்சது அவ்வளவுதான். நீங்க என்ன பண்ண முடியும்?''

ப்ரியாவின் கண்கள் கிரிஷின் பார்வையி லிருந்து தப்ப முடியாமல் தவித்தன.

''கிரிஷ்! உன் ஃபீலிங்ஸ் எனக்குப் புரியுது. பட் நான் ஒரு டாக்டர். அதுலேயும் ஒங்க மதரை ட்ரீட் பண்ணின டாக்டர்... ஒங்க அம்மாவுக்கு இந் ஊருக்கு வரதுக்கு முன் னாடியே நெர்வ்ஸ் ஸிஸ்டம்லாம் டேமேஜ் ஆகியிருந்தது.நான் ஒரு நியூரோ ஸ்பெஷ லிஸ்ட் இல்லே.... இருந்தாலும் ஒங்க அம்மாவுக்கு நெர்வ்ஸ் வீக்னெஸ் அதிகமா இருந்ததுன்னு தெரியும்...''

''டாக்டர் எங்க அம்மாவுக்குப் பைத்தி யம்னு சொல்றீங்களா?''

''ஓ நோ... கிரிஷ் ப்ளீஸ் டோண்ட் மிஸ் அண்டர்ஸ்டாண்ட் மி.ஒங்க மதர் எனக்கு வெறும் பேஷண்ட் மட்டுமில்லே. ஷி வாஸ் ஸம்திங் மோர். எம்மேலே அவுங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை...டாக்டரா...மனிதனை ஒன்னைத் தேடிப் பிடிக்கிற பொறுப்பையே எங்கிட்டத்தானே ஒப்படைச்சாங்க. அப் பேர்ப்பட்டவங்களைப்போய் நான் பைத்தி யம்னு சொல்லுவேனா? நீ காணாமப் போயிட்டே. ப்ளேன் ஆக்ஸி டெண்ட்லே அப்படீங்கற ஷாக் அவர் நெர்வ்ஸ் ஸிஸ்டத்தை வீக் ஆக்கிடுச்சி... எனிவே நீ திரும்பி வந்த சந்தோஷத்துலே அவங்க ஹார்ட் கண்டிஷன் அப்ஸெட் ஆகக் கூடாதுன்னு நான் ட்ரை பண்ணேன்... ஒங்களுக்குத் தெரி யுமோ தெரியாதோ சந்தோஷ நியூஸ் கூட ஒருத்தருக்கு ஷாக் கொடுக்கலாம். பேட் நியூஸ் 'மாதிரியே....''

''அப்படியா... எனக்குத் தெரியாதே!'' கிரிஷ் மையை உறிஞ்சிக் கொண்டே பேசினான். அவன் செய்யும் சத்தங்கள் ப்ரியாவை என்னவோ செய்தன.

''ஆமா! கிரிஷ் சிரிப்புக்கூட ஒருத்தனைச் சாக அடிக்கலாம்.... கேக்கறதுக்கு ஜோக் மாதிரி இருக்குஇல்லே...ஆனா மெடிகலி ட்ரூ! உங்க மதர் விஷயத்துலே நான் ரொம்ப கேர் எடுத்துண்டேன். அதுக்குத்தான் அந்த ரெண்டு டாப்லெட்லைக் கொடுத்தேன்... அதெல்லாம் நம்ம ஊர்ல கெடைக்காதது.ம்., கிரிஷ் ஐ டிட் மை பெஸ்ட்... ஒனக்காக. ஒங்க அம்மாவுக்காக, இந்த ப்ரியாவுக்காக.''

''டாக்டர் ஒங்களை யாரும் தப்புச் சொல் லலியே. நீங்க இவ்வளவு சிரமப்பட்டு எக்ஸ் ப்ளேன் பண்ணத் தேவையில்லியே டாக்டர்'' கிரிஷ் லேசாகச் சிரித்தான்.

''க்ரிஷ் எக்ஸ்பிளேன் பண்ண வேண்டிய கடமை என்னது. அதுக்காகத்தான்... ஒரு நல்ல லேடி சரியான சமயத்துலே போயிட் டாங்களேன்னு... தெட்ஸ் லைஃப் ஐ சப் போஸ்!'' ஆனந்த் நாற்காலியில் சாய்ந்து கொண்டு மையைக் குடிக்க ஆரம்பித்தார்.

அரை மணி நேரம் கழித்துக் கிரிஷும், ஆனந்தும் வெளியே சென்று விட்டார்கள். அந்தப் பெரிய பங்களாவில் முதல் முறை யாகத் தனியாக இருப்பது அவளுக்குப் புதிய அனுபவம். சற்றுக் கசப்பாகவே இருந் தது. இப்போது இனி கிரிஷ் ஒருவன்தான் அவளுடன் அவ்வளவு பெரிய பங்களாவில்... அதிகப் பழக்கமில்லாத ஓர் ஆளோடு. அது வும், கிரிஷைப் போல இளமை, ஆண்மை ததும்பும் ஒருவனோடு...அவன் பார்வையே அவளை...அப்படி இருக்கும்போது அவனோடு



தனியாக... அதைப் பத்தி டாக்டர் ஆனந்துடன் பேசி முடிவெடுப்பது எனத் தீர்மானித்துக் கொண்டாள்.

''ப்ரியா... நீயா இப்படிப் பேசறே? ஐ ஆம் ஸர்ப்ரைஸ்டு'' டாக்டர் அவளை வெறுப்போடு பார்த்தார். அவரும் கிரிஷும் சில நிமிடங்களுக்கு முன்புதான் வீடு திரும்பினார்கள். கிரிஷ் குளிப்பதற்காக உள்ளே சென்றிருந்தான். அந்த நேரம் பார்த்து ப்ரியா டாக்டரிடம் பேச்சை எடுத்தாள். சூடாகக் காப்பி கொடுத்தாள்.

''டாக்டர் என் பொஸிஷனைப் பாருங்க.. கல்யாணமாகாதவ இவ்வளவு பெரிய வீட்டுல தனியா கிரிஷோட எப்படி இருக்கிறது?''

''ப்ரியா...ப்ரியா... யூ ஆர் டாக்கிங் ரப்பிஷ். இப்படிப் பேசறேனென்னு தப்பா எடுத்துக்காதே. நீ ஒரு சாதாரணமான கலியாணமாகாத பொண்ணுல்லே. இந்த வீட்டு மருமகள்.''

''இன்னும் ஆகலையே டாக்டர்!''

''மே பி. பட் சடங்கு நடக்கலையே தவிர, மற்ற எல்லா விதத்திலேயும் நீ டாடரின்லா தான். ப்ரியா நீ படிச்ச பொண்ணு. ஒனக்கு போய் நான் இவ்வளவு சொல்லணுமா?''

''டாக்டர்! கிரிஷுக்கும் எனக்கும் கலியாணம் ஆறவரைக்கும் நான் இங்கிருக்கிறது அவ்வளவு சரியா எனக்குப் படலே. ஊர்க்காரங்க பேசுவாங்க....''


''ஊர்க்காரங்க... யார் அவங்க? அவங்களுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? அவங்க என்ன பேசினு நமக்கென்ன? ஊர்க்காரங்களா ஒன்னையும் என்னையும் சாப்பாடுபோட்டு வளர்த்தாங்க? என்ன ப்ரியா நீ... தமிழ் சினிமா ஹீரோயின் மாதிரி பேசறயே? ஒரு மாடர்ன் கேர்ள் மாதிரி ஃபார்வேர்டா இருப்பேன்னு பார்த்தேன்....''

''அதெல்லாம் சரி டாக்டர். பட்...''

''ப்ரியா, 'பட்'டுமில்லே 'இட்'டுமில்லே.''

டாக்டர் காப்பிக் கோப்பையைக் கோபமாகக் கீழே வைத்தார். ''லுக் ப்ரியா நீ இந்த ஊர்லே ஒரு தேர்ட் ரேட் ஸ்கூல்லே நூறு ரூபாய் சம்பளத்துக்கு ராட் பண்ணிண்டிருந்தே. ஒன்னை அங்கிருந்து நான் இங்கே கொண்டு வந்தேன். ஒய்? எனக்கு ஏதாவது லாபம் வரும்னு? நோ. நல்ல பொண்ணு. கெட்டிக்காரப் பொண்ணு — அப்படிப்பட்டவளுக்கு லைஃப்லே ஒரு நல்ல ப்ரேக் கிடைக்கட்டுமே — அப்படீங்கற நல்ல எண்ணத்தோடதான் அதைச் செஞ்சேன். ஒன் மாதிரிப் பெண்கள் எனக்குப் பல பேரைத் தெரியும். அப்படி இருந்தும் ஒன்னைச் சூஸ் பண்ணேன். எனக்கு அதனாலே பைசா லாபம் கிடையாது. இன்னிக்கு நீ பார்வதி அம்மாவோட சொத்துக்கு வாரிசு. தன் புள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முன்னாடியே தன் ஆஸ்தியை ஒன் பேருக்கு எழுதி வெச்சாங்க அந்த அம்மா. கிரிஷ் வந்தவுடனே அவுங்க போயிட்டாங்க...''

''ரசிகர் கடிதம்'' இல்லை —



''அது சரி டாக்டர்....''

''ப்ரியா ப்ளீஸ் டோண்ட் இன்டரப்ட் மீ. கிரிஷ் பல வருஷம் கழிச்சுத் திரும்பி வந்திருக்கான். வந்தவுடனே அவுங்க அம்மா போயிட்டாங்க. அவன் எங்கெல்லாம் எப்படி எல்லாம் கஷ்டப்பட்டிருக்கானோ நம்பளுக்குத் தெரியாது. அப்படிப்பட்டவனுக்கு அம்மாவோட சாவு எவ்வளவு பெரிய ஷாக்கா இருக்கும்னு நீயே திங்க் பண்ணிப் பாரு. அந்த நிலைல நீ அவனை இங்க தனியா உட்டுட்டுப் போறேன்னு சொல்றே. இஸ் இட் ஃபேர் டு தெட் புவர் பாய்?''

''டாக்டர், நான் உட்டுட்டுப்போறேன்னு சொல்லலியே... நான் ராத்திரி தங்கறது சரியாப் படலேன்னு சொன்னேன்.''

''ப்ரியா ராத்திரிலே அவன் இங்கே தனியா இருந்தான்னு தற்கொலை பண்ணிக்கிட்டாலும் பண்ணிப்பான். இப்ப கிரிஷோட மனநிலை அப்படி. இப்ப நான் ஒரு டாக்டர் என்ற மொறையிலே பேசறேன்... பத்துப் பேரு என்ன சொல்லுவாங்க... ஊர்க்காரங்க என்ன சொல்லுவாங்க... அதுதானு பெரிசு... ஒனக்குக் கொஞ்ச நாள்லே கணவனு வரப்போறவன் தற்கொலை பண்ணிக்கிட்டுப் போனாப் போறான் — அப்படீன்னு நெனெச்சா நீ இப்பவே வீட்டை விட்டுப் போலாம்....''

ப்ரியாவுக்குத் தான் தோற்றுவிட்டோம் என்று புரிந்து விட்டது. டாக்டர் தன்னைக் கட்டிப் போட்டுவிட்டார் என்பது விளங்கி விட்டது. கண்களை மூடிக் கொண்டு நாற்காலியில் சாய்ந்து விட்டாள்.

ப்ரியா தூக்கம் வராமல் தவித்தாள். சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தின் டிக்டிக் சப்தம் இடிபோல் அவள் காதில் விழுந்தது. அது போதாதென்று அரை மணிக்கு ஒரு முறை மணி ஓசை வேறு. புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தாள். தூக்கம் அவளை ஏற்க மறுத்தது. கொட்டாவி விட்டபடியே எழுந்து உட்கார்ந்தாள். கலைந்திருந்த கூந்தலைச் சரி செய்து கொண்டாள். அப்போது படுக்கை அறைக்கு வெளியே காலடி ஓசை கேட்டது. இருட்டில் கதவுப் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அந்த ராத்திரி வேளையில் தன் படுக்கை அறைக்கு வெளியே நடப்பது யார்? கிரிஷ்!... அந்த வீட்டில்தான் வேறு யாருமே இல்லையே. அப்படியென்றால் கிரிஷ்தான் தன் படுக்கை அறைக்கு வெளியே.....

லேசாகக் கதவைத் தட்டும் ஓசை கேட்டது. அந்த வேளையில் கிரிஷ் கதவைத் தட்டும் காரணம்?

''ப்ரியா...ப்ரியா... நான்தான் கிரிஷ். கதவைத் தெற கொஞ்சம்.''

அந்த நிசப்தத்தில் அவன் குரல் காதில் அறைந்தாற்போல் கேட்டது. அவளுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. கதவைத் திறப்பதா கூடாதா? திறந்துவிட்டால் கிரிஷ் உள்ளே வந்து, தனியாக இருக்கும் அவளை... கிரிஷ் தன்னைவிடப் பலசாலி. சீக்கிரத்தில் கணவனாகப் போகிறவன். ஒரு வேளை தன் உரிமையை இப்போதே கொண்டாட ஆரம்பித்து விட்டால்...? தன்னால் கிரிஷைத் தடுக்க முடியுமா?

ப்ரியா :... ப்ரியா...யா...யா...யா...!''

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வேகமாகச் சென்று கதவைத் திறந்தாள்.

''ஹாய் ப்ரியா இன்னுமா தூங்கலே நீ?''

அவன் குரலில் ஒரு குழைவு. அவளை இதமாக வருடியது.

அவள் தலையை ஆட்டினாள்.

''ப்ரியா எனக்கும் தூக்கம் வரலே. மம்மி பத்தியே நினைச்சுண்டிருந்தேன்.... யாரோடாவது பேசணும் போல தோணிச்சு. இந்த வீட்ல ஒன்னையும் என்னையும் தவிர யார் இருக்காங்க!'' கிரிஷ் சிரித்தான்.

ப்ரியா மீண்டும் தலையை ஆட்டினாள்.

''ப்ரியா நான் ஒன்னோட கொஞ்சம் பேசணும். உள்ளே வரலாமா?''

ப்ரியாவுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. இதற்கு முன்பாக அப்படிப்பட்ட நிலையில் அவள் இருந்ததில்லை.

''ப்ரியா ஒனக்கு ஏதாவது அப்ஜெக்‌ஷன் இருந்தா நாம்ப ஹால்ல உட்கார்ந்துக்கிட்டு பேசலாம்... ஓகே?''

''பரவாயில்லே உள்ளே வாங்க.''

கிரிஷ் சிரித்துக் கொண்டே உள்ளே வந்தான். ப்ரியாவின் வாழ்க்கையில் இது ஒரு புத்தம் புதிய அனுபவம். எந்த ஆணும் அவளைத் தனியாக — அதுவும் படுக்கை அறையில் சந்தித்ததில்லை. ஆனால் இப்போது கிரிஷ்! கூடிய சீக்கிரத்தில் தனக்குக் கணவனாகப் போகிறவன். தன் வாழ்க்கையில் நுழையும் முதல் ஆண் அவளைத் தொட்டுத் தடவி உணர்ச்சிகளை எழுப்பி உடலைக் கொதிக்க வைத்துச் சுவைக்கப் போகிறவன்...

''ப்ரியா, இன்னிக்கு நானும் டாக்டரும் ஒன்னைப் பத்தி ரொம்ப நேரம் டிஸ்கஸ் பண்ணோம். அவர் ஒரு விஷயம் சொன்னாரு. அதைக் கேக்கும்போது நான் ரொம்ப வருத்தப்பட்டேன்.''

''எதைப் பத்தி?''

''ப்ரியா நீ இங்கே தங்க மாட்டேன்னு சொன்னியாமே! நீ அப்படிச் சொல்வேன்னு நான் எதிர்பார்க்கவேயில்லே.''

''ஸாரி நான் அப்படி சொல்லவேயில்லே. நீங்க ரெண்டு பேரும் என்னைச் சரியாப் புரிஞ்சிக்கலேன்னு நினைக்கிறேன். நான் இனிமே இங்கே தங்க மாட்டேன்னு சொல்லல்லே. சொல்லவும் மாட்டேன்.... ராத்திரி வேளையிலேநான் இங்கே தனியா இருக்கிறது நல்லது



''என்ன சார்; உங்க படத்துலே வில்லனுக்கு ரெட்டை வேஷமாமே?...''

''ஆமாம்.. ஒரு வில்லன் நல்லவன், இன்னொருத்தன் பொல்லாதவன்..'' -ஜி நடராஜன

இல்லேன்னு சொன்னேன்... அதாவது ::: எனக்கு....''

கிரிஷ் தன் கைகளை உயர்த்தி அவளைத் தடுத்தான். நாற்காலியை முன்னால் இழுத்துக்கொண்டான்.

''ப்ரியா இந்த நானி பாட்டிக் கதையெல்லாம் என்கிட்டச் சொல்லாதே. அது இந்தக் காலத்துக்கு ஒத்து வராது. முக்கியமா எனக்கு.... இதையெல்லாம் டாக்டர் என்கிட்ட ஒரு வார்த்தை விடாமச் சொல்லியாச்சு. இதப் பாரு ப்ரியா, மம்மி நம்ம ரெண்டு பேரும் கலியாணம் பண்ணிக்கணும்னு நெனச்சாங்க, சொன்னாங்க... உன்னைப் பார்த்துப் பத்து நிமிஷம்தான் ஆச்சுன்னாலும் ஒன்னைக் கலியாணம் பண்ணிக்கிறதுக்கு ஓகேன்னு சொன்னேன்... எதுக்காக? மம்மியைத் திருப்திப் படுத்தரத்துக்காக... அதனாலெ ஒன்னைப் பிடிக்கலேன்னு அர்த்தமில்லேம்மா. சொல்லப்போனா ஒன்ன எனக்கு ரொம்பவே புடிச்சிருக்கு. ப்ரியா இப்ப மம்மியும் போயிட்டாங்க. இப்ப இந்த வீட்டில மிஞ்சி இருக்கிறது நாம ரெண்டு பேரும்தான்... நம்ம ரெண்டு பேரும் உடனே கலியாணம் பண்ணிக்கணும்னு நம்ம டாக்டர் சொல்றாரு.''

''ஆனா ஒண்ணு....''

''ப்ரியா ஒண்ணுமில்லே ஒம்பதுமில்லே. நீ என்ன சொல்லப் போறேன்னு எனக்குத் தெரியும்.... மம்மி போயி கொஞ்ச நாள் கூட ஆகலே, அதுக்குள்ளே கலியாணமான்னு அதானே... நம்ம டாக்டர் அவரோட ப்ரண்டு — அவர் ஒரு ப்ராமின்... அவரோட நம்ம விஷயத்தைப் பத்திப் பேசியிருக்காரு. அந்த ஆளு சொல்றாரு நாம இப்பவே கல்யாணம் பண்ணிண்டா தப்பு இல்லேன்னு... நம்ம சாஸ்திரத்திலேயே இருக்காம். அதனாலே நாம வெயிட் பண்ணணும்னு கிடையாது.ப்ரியா குறுக்கேபேசாதே. நான் சொல்றதைக் கேளு. நாம ரெண்டு பேரும் உடனே கலியாணத்தைப் பண்ணிக்கிறோம்... அதுக்கு முன்னாடி நீ ரெண்டு விஷயத்தை அட்டெண்ட் பண்ணணும். அது ஒன்னோட வேலே. அது என்னதுன்னு ஒனக்குத் தெரியாதில்லியா சொல்றேன்... இப்பவே சொல்றேன்.''

கிரிஷ் சிரித்துக்கொண்டே எழுந்து நின்றான். பிறகு அவள் அருகே நகர்ந்தான்.

(தொடரும்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சி.எஸ்.பேட்டி

பேட்டி கண்டவர்: கே.எஸ்.ஆர்

⌘ இன்றைய தமிழகப் பிரதமக் காரியதரிசிக்கு (திரவியம்) அன்றே பொன்னாடை போர்த்திக் கௌரவித்திருக்கிறார் சி.எஸ்!



கேள்வி: நமது பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கச் சிந்தித்து யோசனைகள் சொல்லக் கூடிய ஒரு நிபுணர் குழுவை அமைத்தால் என்ன?

பதில்: அமைக்கலாம். ஆனால் அந்த நிபுணர் குழுவைக்கலந்தாலோசிக்கும் மனப்போக்கு நாட்டை ஆள்வோருக்கு ஏற்பட வேண்டுமே?

கேள்வி: தமிழகத்தின். அரசியல் அதன் முன்னேற்றத்தைத் தடுக்கிறதா?

பதில்: தி.மு.க.; அ.தி.மு.க. இரண்டுமே பொறுப்புள்ள அரசியல் கட்சிகளாக இயங்க வேண்டும் என்று விரும்புகிறேன். இப்போது தாயாதி சண்டைதான் நடக்கிறது. அதிகாரத்தில் இல்லாதவர், ஆட்சியில் உள்ளவரைக் கவிழ்க்கப் பார்ப்பதே காரியமாய் இருக்கிறார். இரண்டு தனி நபர்களுக்கிடையே உள்ள விரோதம் மேலே மேலே வளர்ந்து கொண்டே போகிறது. 67லிருந்து தமிழக மக்கள் இதை அனுபவித்து வருகிறார்கள். ஒரு தேசிய கட்சி மக்களின் நம்பிக்கையைப் பெறுமானால் நிலைமை முன்னேறும். ஜனநாயகத்தில் ஆட்சி மாறத் தேர்தல் உதவுகிறது. ஆனால் நிலையான மாற்றுக் கட்சி இருந்தால்தானே ஆட்சி மாற்றம் சாத்தியமாகும்? இன்று காங்கிரஸ்ும், தி.மு.க. அல்லது அ.தி.மு.க.வுடன் சேர்ந்துகொண்டு சேற்றில் புரண்டு விளையாடுகிறது. வந்தது வரட்டும் என்று காங்கிரஸ் தனித்து நிற்க வேண்டும். ஆனால் இந்த நம்பிக்கை இன்று இல்லை. இது தமிழகத்தின் சோகக் கதை.

கேள்வி: தமிழகத்தைப் பொறுத்த மட்டில் விவசாயம் பற்றி உங்கள் கருத்துக்கள்...?

பதில்: முதலில் காவேரி நீர் பங்கீடு பிரச்னை தீரவேண்டும். இப்போதுள்ள நிலைமை அவர்களை விடவும் நமக்குத்தான் பாதகமாக உள்ளது. ஒரு முடிவும் எடுக்காமல் இருப்பதற்கு மோசமான முடிவு எடுத்தாலும் தேவலாம்! 1924ம் ஆண்டின் ஒப்பந்தம் இருக்கிறது என்று நாம் கூறிக் கொண்டிருக்கிறோம். அதை அவர்கள் மதிப்பதில்லை. புது ஒப்பந்தம் தேவை என்கிறார்கள். அவர்களுடைய அணைக்கட்டுகள் நிறைந்து வெள்ளம் கரை உடைக்கும் என்று அச்சம் தோன்றும்போது மட்டும் நமக்குத் தண்ணீர் விடுகிறார்கள். துரிதமாய் ஓர் ஒப்பந்தம் ஏற்படுவது அத்தியாவசியம்.

அடுத்து விவசாய ஆராய்ச்சி தேவை. ஒன்றிரண்டு பெரிய ஆராய்ச்சிக் கூடங்களை மட்டும் நம்பிப் பயனில்லை. ஆங்காங்கே நிலவுகிற சூழலைக் கவனித்து ஆவன செய்ய, குறிப்பிட்ட ஒரு வகையான நிலப் பகுதிக்கு ஒரு ஆராய்ச்சிக் கூடம் என்ற கணக்கில் தேவை. அக்கூடம் மண் வளம், நீர்—வளம், சீதோஷ்ண நிலை முதலியவற்றை ஆராய்ந்து விவசாயிகளுக்கு யோசனைகள் கூறவேண்டும். விஞ்ஞான பூர்வமான யோசனைகளை ஏற்றால் தான் விவசாயம் செழிக்கும். விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் விதை, ரசாயன உரம், பூச்சி மருந்து முதலியவற்றில் கலப்படம் நடக்கிறது. இந்த ஊழலை ஒழித்தால் தான் உற்பத்தி பெருகும். அறுவடைக்குப் பிறகும் விஞ்ஞான ரீதியான அணுகுமுறை தேவை. தானியக்கிடங்குகள், போக்குவரத்து, தானியத்தைத் தேட்டுதல் முதலிய அம்சங்களையே குறிப்பிடுகிறேன். விநியோகத்துக்கும் சிறப்பான ஓர் அமைப்புத் தேவை.

எப்படியெல்லாம் அபிவிருத்தி செய்யலாம் என்பதற்கு ஒரு உதாரணம் தரு

கிறேன். கிடைக்கிற தண்ணீரைப் பயிருக்குச் சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக நிலத்தைப் பயிர் செய்ய முயல வேண்டும். முன்னேறிய நாடுகள் பயன்படுத்துவதை விட மூன்று மடங்கு அதிக நீரை நாம் நமது வயல்களுக்குப் பாய்ச்சுகிறோம். நமது நீர்ப் பாசனம் நவீனமாக்கப்படல் வேண்டும். ஒரு வயலிலிருந்து இன்னொரு வயலுக்குப் பாய்கிற இன்றைய முறை நல்லதல்ல. நீர் பாய்வதை நாம் கட்டுப்படுத்த முடியவில்லை. ரசாயன உரம் ஒருவன் போடுகிறான். அதன் பலனை அவன் அடையாமல் பக்கத்து நிலத்துக்குத் தண்ணீர் பாயும்போது அது உரத்தை அடித்துக் கொண்டு போய்விடுகிறது! விஞ்ஞான ரீதியான நீர்க் கட்டுப்பாடு ரொம்ப முக்கியம்.



எனவே தர்மம் கேட்பவன்
அறிவாளியாய் இருப்பது
அவசியம் —
வாரியார் [illegible] கேட்டவர்
சாங்கரிபுத்திரன்

கேள்வி: மத்திய — மாநில உறவுகள் பற்றி என்ன கூற எண்ணுகிறீர்கள்?

பதில்: இப்போது இரு வகையான மாநிலங்கள் உள்ளன. ஒன்று காங்கிரஸ் ஆளும் மாநிலங்கள். மற்றது காங்கிரஸ் ஆட்சி அல்லாத மாநிலங்கள். காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் சுயாட்சி என்பது அறவே யில்லை. எல்லாமே மத்திய அரசு காட்டும் வழியில்தான் நடக்கிறது. இது ரொம்ப வருந்தத்தக்கது. இருக்கிற அதிகாரங்களையே மத்திய அரசின் அனுமதியின்றிப் பயன்படுத்த யாரும் முன்வராதபோது மாநிலத்துக்கு மேலும் அதிகாரங்கள் கோரி என்ன பயன்? இந்த அடிப்படையில் எந்த மாநில அரசுமே திறம்பட இயங்க முடியாது. காங்கிரஸ் அல்லாத ஆட்சி நிலவும் மாநிலங்களைப் பொறுத்தமட்டில் ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்வது நல்லது. ஒரே கட்சிதான் மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சியில் இருக்க வேண்டும் என்பது அபத்தம். இப்படி நினைப்பதால் சதா ஒரு போராட்டச் சூழல் நிலவுகிறது. இதற்கு அவசியமே இல்லை. இருக்கிற அதிகாரங்களைக் கொண்டு மாநில அரசுகள் எப்படித் திறம்பட இயங்கலாம் என்று பார்த்து முடிவு எடுக்க வேண்டும். சில அம்சங்களில் மாநிலங்களுக்கு மேலும் சில அதிகாரங்கள் தரப்படலாம் என்பது உண்மைதான். ஆனால் அதற்கு இப்போது அவசரமில்லை. தங்கள் எதிர்காலம் ஒரு கேள்விக்குறி எனப் பல மாநில அரசுகள் கருதுகின்றன. இதற்குக் காரணம் மாநில அரசுகளை டிஸ்மிஸ் செய்ததன் மூலம் மத்தியில் ஜனதா, இந்திரா காங்கிரஸ் இரண்டுமே தவறான முன்னோடிகளை ஏற்படுத்தியதுதான். இத்தகைய நிச்சயமற்ற நிலைகள் நீங்க வேண்டும்.

கேள்வி: கடைசியாக ஒன்று... தலைநகரை மாற்றப் போவதாகத் தமிழக முதல்வர் கூறியிருக்கிறாரே?...

பதில்: மாநிலத்தின் மத்தியில் தலைநகரைக் கொண்டுள்ள மாநிலங்கள் மிகவும் குறைவு. கேரளா, கர்நாடகா, ஆந்திரா முதலியன நடு மையத்தில் தலைநகரைக் கொண்டிருக்கவில்லை. ஜனநெருக்கடியைத் தவிர்க்கத் தலைநகரை மாற்ற அவசியம் இல்லை. இதற்கு மிகவும் செலவாகும். அந்தப் பணத்தைக் கொண்டு பல உபயோகமான தொழில்களை ஆரம்பிக்கலாம். நிரந்தர வேலைவாய்ப்புக்களை உண்டாக்கலாம். ஜன நெருக்கடியைத் தவிர்க்க வேறு வழிகள் உள்ளன. அவற்றை யோசிக்க நிபுணர் குழு அமைக்கலாம். தலைநகரை மாற்றக் குறைந்தது 25 வருஷம் ஆகும். இன்று எம். ஜி. ராமச்சந்திரன் தலைநகரை மாற்றுகிறேன் என்று ஆரம்பிக்க, நாளை அவர் ஆட்சியில் இல்லையெனில் கருணாநிதி அவரைப் பழிவாங்குவதற்காகவேனும் மறுபடி சென்னையே தலைநகர் எனலாம். பிறகென்ன? வீராணம் திட்டம் மாதிரி இதுவும் இரண்டும் கெட்டான் நிலைமையை அடைந்து மக்களுக்கு ஏராளமான கஷ்ட நஷ்டத்தைத் தரும்.

மூர்த்தி கதவைத் தட்டும்போது ப்ளஷ்-டோர் வைத்த அந்த வீட்டுக்குள்ளிருந்து வளையல் ஓசை தொடர்ந்து ஒலித்தது. எதையோ சலிப்பது போல், எதையோ குலுக்குவது போல். கதவைத் தட்டியதும் ஓசை நின்றுவிட்டது. கதவின் முன் தன் நிழல் மார்பளவு சரணாகதி ஆனது போல் விழுந்திருப்பதைக் கவனித்தவாறே கதவு திறப்பிற்கு அவர் காத்திருந்தார். நாற்பத்திரண்டு வயசில் கதவு கதவாகக் காத்திருக்கிற உத்தியோகம் வாய்த்தது பற்றி, தான் வேறு காத்திருப்பவன் வேறு என்ற பாவனையோடு நினைத்துப் பார்த்தார் மூர்த்தி.

'காத்திருப்பதற்கு வயசு என்ன வேண்டியிருக்கிறது! ஒவ்வொரு வயசுக்கும் ஒரு காத்திருப்பு!'

மனச் சமாதானத்துக்கு வேதாந்தம் வேண்டியிருந்தது. கறுகறுப்புக்கு ஒரு சிமிட்டாப் பொடி மாதிரி. மூர்த்தி ஹாண்ட்பாக்கைத் திறந்து பொடி டப்பாவில் ஒரு சிமிட்டாப் பொடி எடுத்துப் போட்டுக்கொள்கிறவரைகூட கதவு திறக்கவில்லை. கைக்குட்டையில் மூக்கைத் துடைத்துக்கொண்டு மீண்டும் கதவைத் தட்டினார்.

'முன்பே தட்டினேனே... காது கேட்டு விட்டு அதென்ன கல்லுளிமங்கத்தனம்...' இந்தத் தட்டலில் இவ்வளவு சங்கதி.

''யாரது....''

பெண் குரல். ஒரு பயம் தெரிகிற குரல்.

''சென்சஸுக்கு வந்திருக்கோம்.''

மூர்த்தி தனியாகத்தான் இருந்தார். ஒரு பாதுகாப்பு உணர்வு தரவே பன்மையில் சொன்னார்.

''அவர் வீட்டிலே இல்லே.''

''பரவாயில்லே. கணக்குத்தானே எடுக்கப் போறோம். நீங்க வந்து சொன்னாக்கூடப் போதும்.''


கதவின் வெளிப்புறக் கைப்பிடி அசைந்தது. இதென்ன இப்படி ஒரு பயம்? தன்னைப் பூட்டிக்கொள்ளும் ஒரு சிறை வைப்பு! மூர்த்திக்கு லேசாகப் புன்னகை வந்தது. ஆனால் புன்னகையின் ஆயுசு நீடிக்கவில்லை.

கதவைத் திறந்துவிட்டு அவள் நின்றாள். அவள் அவள் அவள். மனம் மூன்று முறை இடறி இடறி விழுந்தது.

என்ன விநோதமான தூக்கி வாரிப்போடும் சந்திப்பு!

நீயா என்று அவர் வாய்க்கும் நீங்களா என்று அவள் வாய்க்கும் ஒரு கேள்வி வந்து அது தேவையில்லை என்ற உணர்வு இருவருக்கும் உறைத்தது. ஒரு மௌனம். அவள் அவரைப் பார்த்தாள். முதலில் பார்த்த அதிர்ச்சி நீங்கி ஒரு உதாசீனம். அலட்சியம். உங்களுக்காக ஒன்றும் பயந்து கொண்டு இல்லை என்கிற மிடுக்கு.

மூர்த்தி அவளை ஏற இறங்கப் பாதாதி கேசம் பார்வையிட்டார். கழுத்தில் இரட்டை வடச் சங்கிலி. கல்வைத்த மாலை. காதில் மூக்கில் வைரமோ? நல்ல ஜொலிப்பு. புடவை பாலியெஸ்டர்.



விடுதலைக்கு விலை சுதந்திரம் அல்ல!

வையவன்



அவர் பார்வையை அவளும் புரிந்து கொண்டாள். 'நான் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. புரிந்ததா...' மிடுக்கு கொஞ்சம் கூடிற்று. என்னமோ பேசவேண்டும். யார் பேசுவது? ஒன்றுமே பேசாமல் போய்விடலாமா? ஒரு கடமை இருக்கிறது. அதற்கும் வெளியே யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொண்டால் என்ன? அவர் வாய் திறப்பதற்கு ஊசலாடினார்.

கூடத்திலுள்ள ஒரு கடிகாரமோ? டிக்டிக்டிக்கென்றுஓசையிட்டது. அந்த மௌனத்தை அது ஒரு கோழைத்தனமாக்கிக் காட்டிற்று.

''ஏழு வருஷமிருக்குமா?''

ஆரம்பித்தது மூர்த்திதான். கேட்டதுமே அவளுக்குப் புரிந்தது.

''இல்லே. ஆறு வருஷம்தான் ஆச்சு. கோர்ட் தீர்ப்பு டிசம்பர் எழுபத்தஞ்சிலே.''

எவ்வளவு துல்லியமாக நினைவு வைத்திருக்கிறாள்! பதில் அவர் கன்னத்தில் அறைந்தது.

மூர்த்தி ஹாண்ட் பாக்கில் கையை விட்டு மறு வார்த்தையின்றி சென்சஸ் புத்தகத்தை எடுத்தார்.

''வீட்டிலே எத்தனை பேர் இருக்கீங்க?''

அவர் வேலையைக் கவனிக்க ஆரம்பித்து விட்டார் என்று அவள் புரிந்து கொண்டாள்.

''தற்சமயம் ரெண்டு பேர்....''

''பேர் சொல்லு...'' ஒருமை வந்து விட்டது. வாய் தவறியமாதிரி அவர் திருத்திக் கொண்டார். ''சொல்லுங்கோ.''

அவள் அவரை வெற்றி கண்டு முறியடித்த மாதிரி நமுட்டுச் சிரிப்புடன் சொன்னாள்.

''கே. சீதாராமன்...''

அவர் மௌனமாக எழுதிக் கொண்டார்.

''வயசு?''

''முப்பத்தி எட்டு.''

''தொழில்?''

''லாயர்.''

இந்தப் பதில் சுருக்கென்று ஓர் இன்ஜெக்ஷன் மாதிரி தைத்தது.

அவர் நிமிர்ந்து. 'அடி சக்கை' என்ற மாதிரி அவளைப் பார்த்தார். அவளது சிவந்து பருத்த தாம்பூலக் கறை படிந்த உதடுகளில் ஒரு வெற்றிக் களிப்பு தெரிந்தது. ''டைவர்ஸ் ஸ்பெஷலிஸ்ட்'' என்று அவள் இணைத்துக் கொண்டாள். தலை குனிந்து அவர் படிப்புக்கு எதிரே தமக்கு ஏற்கனவே தெரிந்த தகவலைப் பூர்த்தி செய்து கொண்டார். எம்.ஏ. எம்.எல். அவர்களது விவாகரத்து வழக்கில் அவர் அவளுக்காக வாதாடியவர்.

''அடுத்து....?''

''நான். எஸ். நீலிலட்சுமி. வயசு முப்பத்தஞ்சு.''

சீதாராமனுக்கு என்ன உறவு என்று எழுத வேண்டிய இடத்தில் அவர் விரல்கள் தாமதிப்பதை அவள் கவனித்தாள்.

''வைஃப்.''

வைஃப் என்று எழுதிக்கொள்ளட்டுமோ என்று கேட்க அவருக்கு நாக்குத் துடித்தது. இருபத்திரண்டு டிசம்பர் எழுபத்தைந்தில் கோர்ட் அவரது 'மனைவி' உரிமைக்குக்

— ஜானகி மணாளன்

கோடு கிழித்திருந்தது. இப்போது அவருக்கு அந்தத் தேதியும் நினைவு வந்துவிட்டது.

''குழந்தைகள்....''

''இல்லே.''

''வீட்டில்....''

''வேறு யாருமில்லே.''

மூர்த்தி வந்த வேலை முடிந்து விட்டது. சென்சஸ் நோட்டை ஹாண்ட் பாக்கில் வைத்து ஜிப்பை மூடினார். திரும்பிவிடக் கால்கள் முயன்றன. அதற்குள் நீலிலட்சுமி ஆரம்பித்தாள்.

''ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி ஒன்றில்கூட இப்படி ஒரு சென்ஸஸுக்கு நீங்கள் வரவில்லே?''

மூர்த்தி நிமிர்ந்து எந்த நோக்கில் இதைக் கேட்கிறாள் என்று ஆராய்வது மாதிரி பார்த்தார். உயரத்திலிருந்து கீழே இறங்கி வந்த மாதிரி ஒரு தொய்வு அவள் குரலில்.

அது குத்தல் இல்லே. நினைவூட்டல். போன சென்சஸில்தான் அவர்கள் அறிமுகமாயினர். போன சென்சஸ்தான் அவர்கள் திருமணத்துக்கு வித்தூன்றியது.

''ஆமாம்.''மூர்த்தி தலையாட்டினார். ''எப்படி இருக்கே?''

''பார்த்தா தெரியலே. பரம சௌக்கியமா இருக்கேன்... நீங்களும் சௌக்கியம் தானே?''

அந்நியர்களாகி விட்ட பிறகு கௌரவம் தானே பாராட்ட வேண்டியிருக்கிறது.

''ஆஹா.... ரொம்ப சௌக்கியம். நீ இங்கே இருப்பேன்னு தெரியாது.''

''தெரிஞ்சிருந்தா வந்திருக்க மாட்டீங்க இல்லே?''

''வந்திருப்பேன். இது ட்யூட்டி.''

இவ்வளவு நேரம் அவர் வாசலுக்கு வெளியிலும் அவள் வாயிற் படிக்கு உள்ளும் தான் நின்று கொண்டிருந்தனர். அது அவளுக்கு உறைத்ததோ என்னவோ...

''உள்ளே வாங்களேன்.''

''பரவாயில்லே...வேலை முடிஞ்சபோச்சு.''

''ஒய் காண்ட் யூ கம் இன் அண்ட் ஹாவ் எ கப் ஆஃப் டீ?''

அவள் வரவேற்றாள். மூர்த்தி மீண்டும் அவள் நோக்கத்தை அலசினார். ஒரு பார்வையில்.

''ஜஸ்ட் ஆஸ் எ ஃப்ரண்ட்'' அவள் தெளிவு படுத்துவது போல் சொன்னாள்.


இதுவும் அவர் சொன்ன வார்த்தை. தீர்ப்பு முடிந்து அவர்கள் விவாகரத்தாகி விட்ட பின் கோர்ட் வாசலில் பிரியும்போது சொன்னது. அவர் உள்ளே நுழைந்தார்.

மொஸைக் பாவிய கூடம். சோபா கம் பெட். கூடத்தின் மத்தியில் இரண்டு நியூஸ் பேப்பர் தாளை விரித்து அதன் மத்தியில் ஒரு பேஸினை வைத்திருந்தாள். கதவைத் தட்டு முன் கேட்ட வளையல் ஒலிக்கு விளக்கம் புரிந்தது. அவள் மாவுதான் சலித்துக் கொண்டிருந்திருக்கிறாள்.

''உட்காருங்கள்.''

அவள் உள்ளே போனாள்.

'நட்பு மாதிரி ஆரம்பித்தது அந்த அறிமுகம். அந்த நட்பில் முதிர்ச்சி ஏற்பட்ட போது விவாகம். கல்யாணத்துக்குப் பின்....' -அவர் யோசித்துக் கொண்டிருந்தார்.



உள்ளே அவள் ஸ்டவ் பற்றவைக்கும் ஒலி. தொடர்ந்து 'காஸி'ன் சீற்றம்.

'கல்யாணத்துக்குப் பின் ஆணோ பெண்ணோ நட்பு வேஷமே போட்டுக் கொண்டிருக்க முடியுமா? எவருக்கும் தானாகவே இருக்கத் தோன்றுகிறது. சுதந்திரமாய், சகஜமாய். பிரச்னை அதிலா?'

மனம் கணக்கெடுத்தது.

'இரண்டு பேருக்கும் அப்படித் தோன்றி விட்டது. எனக்கும் இவளுக்கும் எல்லா பந்தங்களும் விட்டுக் கொடுத்தல்தான். எனக்கு விட்டுக் கொடுத்துச் சலித்தது. இவள் முறை வரும்போது படித்தவளாயிருந்ததால் இவளுக்கு அது பெண்ணடிமைத்தனம் என்று தோன்றி விட்டது.'

ஃபேன் போட்டால் நன்றாயிருக்குமோ என்று புழுக்கத்தை உணர்ந்தார் மூர்த்தி. மாவு பறந்துவிடும். இதுகூட அவர்கள் வாழ்ந்த நாளில் பிரச்னையாகி யிருக்கும். அந்த நாளில்.

'பெண்ணடிமைத்தனம் என்றுசீறிய அவள் எதிர்பார்த்தது ஆண் அடிமைத்தனம். விடுதலை கோருவோர்க்கெல்லாம் நுகத்தடியை இன்னொரு கழுத்துக்கு மாற்றிவிடத்தான்

தோன்றுகிறது. நான் அடிமையல்ல. நீ வேண்டுமானால் அடிமையாய் இரு. இதுதான் விடுதலையோ?'

அவள் ஒரு 'ட்ரே'யில் பூப்போட்ட அழகிய பீங்கான் சாஸரில் 'ஹார்லிக்ஸ்' கொண்டு வந்தாள். மூர்த்தி மௌனமாய் எடுத்துக்கொண்டார்.

ஹார்லிக்ஸில் சர்க்கரை அதிகம்.

அவர் குடித்து விட்டு கப் அண்ட் சாஸரைப் பீப்பாயின் மேல் வைத்தார். எழுந்தார்.

''வரட்டுமா? ரொம்ப தாங்க்ஸ்.''

அவர் அத்தனை சீக்கிரம் கிளம்பிவிடுவார் என்று நீதிலட்சுமி எதிர்பார்க்கவில்லை. சொல்ல வேண்டிய, தெரிந்து கொள்ள வேண்டிய ஆனால் சொல்ல முடியாத கேட்க முடியாத எத்தனையோ தகவல்களின் கனம் அவள் கண்களில் ஆவலாய், மூர்த்தியின் உள்ளத்தில் ஒரு சுமையாய்ப் பாக்கியிருந்தது.

அவள் கதவு வரை வந்தாள். அவர் படியில் இறங்கினார். எதிரில் ஒரு கார் நின்றுந்தது. டிரைவர் காரிலிருந்து இறங்காமலேயே சொன்னான் அவளிடம்.

''ஐயா உங்களை நேரா கோர்ட்டாண்ட வரச் சொன்னாரு... அப்படியே மகாபலிபுரம் போகணுமாம். ரெண்டு நாளைக்கு வேண்டிய டிரஸ்ஸை எடுத்துக்கிட்டு வரச் சொன்னாரு...'' படி இறங்கிய மூர்த்தியைப் பார்த்துப்பேச்சை நிறுத்திக்கேட்டான். ''இவரு யாரு...'' அவன் குரலில் வெறுப்பினால் ஒரு தூரம் தெரிந்தது.

''சென்சஸ் எடுக்க வந்தவரு.''

அவன் பார்வையில் சந்தேகம் அகலவில்லை.

''ம்ம்... ஜல்தி கௌம்புங்க. நான் பெரிய வீட்டுக்குப் போயிட்டு வர்றேன்... அதுக்குள்ளே தயாராக இருங்க.''

அவன் விரைப்புடன் சொல்லிவிட்டுக் காரைக் கிளப்பினான். வயதானவன். நெடு நாளாக சீதாராமனிடம் டிரைவராக இருப்பவன் போலிருக்கிறது. அவளுக்கு என்ன ஸ்தானம் என்று நறுக்குத் தெறிப்பது போல் புரிந்தது.

நீதிலட்சுமியின் முகம் சிறுத்து விட்டது. அவளது அந்தஸ்தும் மிடுக்கும், சுதந்திரமும் மழையில் கரைந்த சாயம் போல் நீங்கி முகம் வெளுத்து விட்டது.

மூர்த்தி அவளை அனுதாபத்தோடு பார்த்தார். அவள் கன்னச் சதை துடித்தது.

மூர்த்திக்கு வேதனை நெஞ்சை அறுத்தது. இது தம் கண்ணெதிரில் நடந்திருக்க வேண்டாம். அவள் தம் முன்பு அழுதுவிடுவாளோ என்று அவர் பயந்தார். நல்லவேளை. அப்படி ஒன்றும் நடக்கவில்லை. குனிந்து அவர் தம் ஹேண்ட் பாக்கைத் திறந்து ஒரு காகிதத்தை எடுத்துத் தம் விலாசத்தை எழுதினார். ஆறு ஆண்டுகளுக்குப் பின் அவள் பெயரைச் சொல்லி அழைத்தார்.

''நீதி... இது என் விலாசம். நான் தனியாகத்தான் இருக்கேன். என்னிக்காவது உனக்கு வரத் தோணினா வா.''

அவள் உடனே வாங்கிக் கொள்ளவில்லை. விலாசம் எழுதிய சீட்டோடு நிற்கும் அவரையும் அந்த நீட்டிய கரத்தையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''ஜஸ்ட் ஆஸ் எ ஃப்ரெண்ட்....''

அவள் படி இறங்கி வந்து காகிதத்தை வாங்கிக் கொண்டாள்.

'விடுதலைக்கு விலை சுதந்திரமல்ல' இதைச் சொல்ல அவர் நாக்குத் துடித்தது. இது அவளைச் சுட்டுவிடும். இந்த நிலையில் அப்படிக் கேட்பது தம் ஆண்மைக்கு அழகல்ல என்று அவர் கட்டுப்படுத்திக் கொண்டு நடந்தார். இன்னும் அவளைத் தாம் நேசிப்பதை அவர் உணர்ந்தார்.

வீட்டினுள் அவள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்ட நிதானத்தைப் பார்க்கும் போது நிச்சயம் அவள் வரக் கூடும் என்று தோன்றியது.

அவர் அடுத்த வீட்டின் காம்பவுண்டுக்குள் நடந்தார்.

அருள்வாக்கு

ஆஸ்திக புத்தி வளர...

■ மற்ற தேசங்களில் அவரவருடைய மதத்துக்கும் படிப்பு முறைக்கும் இடையே முரண் இல்லை. துரதிர்ஷ்ட வசமாக நம் தேசத்திலோ வெள்ளைக்காரர்கள் காலத்தில் ஏற்பட்ட பள்ளிக்கூடங்கள் நம் மதத் தொடர்பே இல்லாமல் உருவாயின. ஜீவனத்துக்காக எல்லாரும் இந்தப் படிப்பிலேயே போய் விழும்படி ஆயிற்று. குழந்தைப் பருவத்திலேயே இவ்வாறு சொந்த சாஸ்திரங்களில் தொடர்பில்லாமல் அந்நிய முறையில் வளர்ந்ததால், நம் புராதன சாஸ்திரங்களில் பற்றோ நம்பிக்கையோ ஏற்பட வழியில்லாமல் ஆகிவிட்டது. சாஸ்திரங்களின் உத்தேசம் இன்னது என்றே தெரியாததால், அவற்றின் விதிகளையும் மனம் போனபடி மாற்றலாம் என்று எண்ண ஆரம்பித்து விட்டார்கள்.

புராணங்கள் புளுகு மூட்டை; சாஸ்திரங்கள் குருட்டு நம்பிக்கையை வளர்ப்பவை என்பதைத்தான் ஆரம்பத்திலிருந்தே நம் குழந்தைகள் கேட்டு வருகிறார்கள். இவர்களுக்கு எப்படி நம்மத அனுஷ்டானங்களிலும் ஆசாரங்களிலும் பிடிப்பு ஏற்பட முடியும்?


சிறு பிராயத்திலிருந்தே ஆஸ்திக புத்தியை வளர்க்க வேண்டும். நமது மத அனுஷ்டானங்களை விடாமல் பற்றி ஒழுகி உத்தமமாகவாழ்கிற சிஷ்டர்களின் சங்கத்தில் குழந்தைகளைப் பழக்க வேண்டும். இந்திரிய அதீதமான அனுபவம் பெற்று ரிஷிகள் பிரத்தியட்ச அனுபவத்தின் மீது தந்த கிரந்தங்களே ஆத்ம க்ஷேமத்துக்கு வழி காட்டுபவை என்ற நம்பிக்கையை உண்டாக்க வேண்டும். இகலோக சௌக்கியம், சமூக வாழ்வு இவற்றையும் ஆத்ம க்ஷேமத்துக்கு உகந்த முறையில் ஒழுங்குபடுத்தித் தரவே ரிஷிகள் சாஸ்திரங்களைத் தந்தார்கள் என்ற விசுவாசத்தை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் லௌகிக சௌக்கியத்துக்கும் மேலாகச் சமய விதிகளைக் கருதி அனுசரிக்கிற அறிவு நாட்டில் வளரும்.

-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்









அலைவாய் ஆறுமுகன்

ந.கல்யாணசுந்தரம்

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி மாவட்டத்தின் தென்கிழக்கே அமைந்துள்ளது திருச்செந்தூர். நீலத்திரை கடல் ஓரத்திலே நித்தம் அருள்தரும் ஆறுமுகனை வழிபடுவோர் தொகை அளவிடற்கரியது. இன்று திருச்செந்தூர் என வழங்கப்படும் இவ்வூர் இடைச்சங்க காலத்தில் கபாடபுரம் (அலைவாய்) என அழைக்கப்பட்டது. ''அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே'' என்றார் நக்கீரர். அகநானூறு காட்டும் அழகிய காட்சியைக் காண்போம். ''திருச்செந்தூரில் கழனி (வயல்) உழவர் ஓசை கேட்டு அஞ்சிப் பறந்த அழகிய மயில் முருகன் வீற்றிருக்கும் மலைப் பக்கம் சென்று தங்கும்'' என்கிறார் பரணர்.

இடைச் சங்கம் இங்கு இருந்த சிறப்பை எண்ணி ''சீர்கெழு செந்தில்'' என்கிறார் இளங்கோ. செந்திலூர் என்ற பெயர் மருவிச் செந்தூராயிற்று. திருச்செந்திலூர் திருச்செந்தூர் என அருணகிரி நாதரால் அழைக்கப்பெற்றது.

இரண்டாம் படைவீடு என்று நக்கீரர் கூறினாலும் முருகன் சூரனை வெல்லப் படைகளோடு தங்கிய இடம் இதுவேயாகும். கந்த சஷ்டி விழா இங்கு தனிச் சிறப்பு வாய்ந்தது.

தூண்டுகை விநாயகரைச் சந்தித்த பின்னரே மணல் மேட்டில் ஏறத் துவங்க வேண்டும். இவ்விநாயகர் கோவிலுக்குள் ஒரு கல்வெட்டு உள்ளது. அதில் முருகன் மயில் மீதில் காட்சியளிக்கிறான். எதிரே ஒரு பெண் கூடையுடன் நிற்கிறாள். கீழே ஒரு பாம்பு ஓடுகிறது. சண்முகபுரத்திலிருந்து (இங்கிருந்து ஒரு கல் தொலைவிலுள்ளது) பூசைக்குரிய பொருட்களைக் கூடையில் சுமந்து வந்த தாசியைப் பாம்பு தீண்டிவிட்டது. தாசியின் வருகையை எதிர் பார்த்துக் காத்திருந்த பூசாரி தூண்டுகை விநாயகரிடம் முறையிட அவர் தம் தம்பியை மயில் மீதனுப்பினார். தாசி உயிர் பெற்றாள் என்பர்.


மணல் மேட்டில் ஏறிக் கிரிப் பிரகாரம் வழியாக வலமாகச் செல்லும்போது வள்ளி ஒளிந்த குகைக்குரிய பாதையைக் காணலாம். வள்ளி ஏன் அக்குகையில் ஒளிந்தாள் என்பதற்கு ஒரு சுவையான கதை கூறப்படுகிறது. கன்னியாகுமரியை ஆண்ட மச்சேந்திரன் மகள் தெய்வயானை மீது முருகன் ஆசைப்பட்டார். அவளைக் கடத்திக் கொண்டு வரும்போது விடிந்த கரை (இப்போது இடிந்த கரை எனப்படுகிறது) வந்ததும் விடிந்து விட்டது. திருச்செந்தூரை அடைந்ததும் முதல் மனைவியான வள்ளியம்மை கோபித்துக்கொண்டு (வடவாய்) குகைக்குள் ஒளிந்து கொண்டாள் என்பர். முருகன் கெஞ்சிக்கண்டவாறு சமாதானம் செய்தார். பங்குனி உத்திரம் முதல் ஆறு மாதங்கள் வள்ளியம்மையோடு உலா வருவதாகவும் ஐப்பசி மாதம் திருக்கல்யாணம் முதல் ஆறு மாதங்கள் தெய்வயானையோடு உலா வருவதாகவும் கூறினர். இப்பக்கமுள்ள பரதவர் முருகனை இதனால் 'மச்சான் சுவாமி' என்கின்றனர்.

ஆண்டி


இங்குள்ள முருகன் ஆண்டியாகவும் ஆண்டவனாகவும் காட்சி தருகிறான். கடற்கரையாண்டியாகக் காட்சி தரும் பாலசுப்பிரமணியர் தம் தந்தையை வழிபடும் நிலையில் வலக்கையில் பூ ஏந்தியுள்ளார். தமிழ் நாட்டில் வேறு எக்கோயிலிலும் (மலையாளத்தில் உள்ளது) இக்காட்சியைக் காண முடியாது. இவருக்கு இரு புறங்களிலும் காணப்படுபவை சீபலிச் சுவாமிகள்.

ஆண்டவன்

தெற்கு நோக்கிச் செந்திலாண்டவனாகக் காட்சி தரும் ஆறுமுகப் பெருமான் வள்ளி



✖ மூலவர் பாலசுப்ரமணியர்



✠ பார்வதியம்மன்

தெய்வயானையோடு காட்சி தருகிறார். ஆண்டுக்கு இரு முறை (ஆவணி, மாசித் திருவிழாக்களில்) எழுந்தருளி உலாப் போந்து அருள் தருகிறார்.

தோசைப் பிரியன்

ஆறுமுகன் பூசையில் காலையில் தோசை இடம்பெறுகிறது. இதற்குக் கூறப்படும் கதைகள் பல. திருவனந்தபுரத்திலிருந்து இவர் சிலையைத் திருச்செந்தூருக்குக் கொண்டு வரும்போது பறக்கை (நாகர்கோயில் அருகில் உள்ளது) என்னுமூரில் செட்டிமார் தோசையும், சிறு பருப்புக் கஞ்சியும் வைத்து வழிபட்டனர். அதன் நினைவாகவே இன்றும் தோசையும் கஞ்சியும் இடம் பெறுகின்றன.

மலையாள எல்லையைத் தாண்டும் போது ஒரு தொட்டிலிலே ஆறுமுகனைக் கிடத்தி வேப்பஇலையால் மூடிக்கொண்டு வந்தனர். மலையாளக் காவலாளிகளிடம் இது வைசூரி கண்ட குழந்தை என்றனர். காவலாளிகளும் விட்டுவிட்டனர்.

தி.மு.கவா? அ.தி.மு.க.வா?

இங்கு முருகன் சிலைகளுக்குச் சாத்தப்படும் ஆடையின் நடுவே கருப்பு, சிவப்புப் பட்டைகள் போடப்படுகின்றன. காலத்துக் கேற்ற கோலமோ?

அம்மைப் புள்ளிகள்

கி.பி. 1649ல் டச்சுக்காரர் இக்கோயிலைக் கொள்ளையிட்டுக் கற்சிலைகளை உடைத்து ஆறுமுகன் சிலையைத் தங்கமெனக் கருதிக் கப்பலில் ஏற்றிச் சென்றனர். புயலும் மழையும் தொடரவே, திருநள்ளாற்றிலிருந்து கவர்ந்த ''நொண்டிச் சாமி''யை (நடராசரை)க் கடலில் எறிந்தனர். பின்பும் புயல் தொடரவே ஆறுமுகனையும் கடலில் எறிந்தனர்.

பின்னையன் (திருமலை நாயக்கர் பிரதிநிதி: திருநெல்வேலியை ஆண்டவன்) கனவில் தோன்றித் தாம் இருக்குமிடத்தை முருகன் புலப்படுத்தினார். பின்னையன் மீண்டும் நடராசரையும் ஆறுமுகனையும் பிரதிஷ்டை செய்தார். ஆறுமுகப் பெருமான் கடலில் கிடந்த காலத்தில் மூதத்தின் மீன்கள் கொத்தியதால் அம்மைப் புள்ளிகள் தோன்றின.

கலெக்டரின் வியப்பு

லூசிங்டன் என்னும் திருநெல்வேலிக் கலெக்டர் திருவிழா நடந்த சமயம் திருச்செந்தூர் வந்தார். ஆறுமுகனை மண்டபத்திலமர்த்தி விசிறியால் விசிறினர். ''உங்கள் சுவாமிக்கு வியர்க்குமோ?'' என்றான். ''ஆம்'' என்றனர். சோதித்துப் பார்த்தான். புதிய துண்டால் முகத்தில் ஒற்றினர். துண்டு நனைந்தது. தன் தவறுக்கு வருந்தி வெள்ளிக்குடம் ஒன்றைப் பரிசளித்தான்.


இலை விபூதி

பன்னீர் இலைகளில் விபூதியை வைத்து வழங்குவது இங்குள்ள வழக்கம். விசுவாமித்திரர் தம் தோஷம் நீங்க இங்கு வந்து இலை விபூதி அருந்தி தோஷம் நீங்கினார். ஆதி சங்கரரும் இலை விபூதியை உண்டு நலம் பெற்றார். அவரால் ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கம் பாடப்பெற்றது.

ஊமையும் பேசலாம்!

குமரகுருபரர் இங்குவந்து ஊமைத் தன்மை நீங்கப் பெற்று கந்தர் கலிவெண்பா பாடினார். அவர் மட்டுமா? 5–12–76 கல்கி இதழ் பக்கம் 25ல் ''அதிசயம் ஆனால் உண்மை'' என்ற தலைப்பில் ஊமைப் பிள்ளை பேசிய அதிசயச் செய்தி இடம் பெற்றுள்ளது:

''மொட்டை அடிப்பதற்காக ஊமைப்பிள்ளை (5 வயது)யை எடுத்துத் திருச்செந்தூருக்குக் கொண்டு வந்தனர். அருகே கோயில் யானை பிளிறியதைக் கேட்ட சிறுவன் 'அம்மா' என்றலறிப் பேசிவிட்டான்!''



✠ அலைவாயுகந்த பெருமான்



Gold Star®
Suitings
Suitings
Suitings
Suitings
Suitings
Suitings
Suitings
tomorrow is here
A SHREE RAM SILK PRODUCT
message

கல்கிப் பத்திரிகைக்கும் டி.கே.சி.க்கும் உள்ள தொடர்பு அந்தப் பத்திரிகையின் பிறப்பிலேயே ஏற்பட்ட தொடர்பாகும். இந்தத் தொடர்புக்கு எத்தனையோ காரணங்கள் இருந்த போதிலும் அடிப்படையான காரணம் டி. கே. சி.க்குக் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய எழுத்திலும் ஆற்றலிலும் இருந்த அளித்தரமான ஈடுபாடாகும். எம். எஸ். அவர்களின் சங்கீதத்தில டி. கே சி.க்கு இருந்த ஈடுபாட்டையும் கல்கி அவர்களின் எழுத்தாற்றலில் அவருக்கு இருந்த ஈடுபாட்டையும் இரண்டையும் இரண்டு தட்டிலே வைத்தால் நராக முள் நேராக நிற்கும்!

இந்த இரண்டு ஈடுபாட்டுக்கும் சான்று சொல்கிற ஒரு கடிதம் கீழே வருகிறது:

திருக்குற்றாலம்
1–12–49

அருமை நண்பர் கல்கி அவர்களுக்கு,

பள்ளிப் பையனாக இருந்தபொழுது ஜியாகிரபி மேல் எனக்கு ஒரு பிரியம்! ஏதாவது மலை, நதி, புல்வெளி, காடு என்று வர வேண்டியது. அவ்வளவுதான், அந்தப் பிரதேசங்களுக்கு அப்படியே போய்விடுவேன். வாத்தியார், வகுப்பு, பிளாக் போர்டு, வார்னிஷ் மணக்கும் 'மாப்' (Map) பிரம்பு எல்லாம் மாயமாய் மறைந்துவிடும்.

அந்தமாதிரி கருட வாகனம் ஏறிச்சென்ற எனக்கு மோகினித் தீவு (கல்கி அவர்களின் தொடர்கதை ஆரம்பம்) மிக உவந்ததாய் இருக்கிறது. அங்கேயே போய்விட்டேன். மலை என்ன, பசுமை என்ன, சிற்ப மலைகள் என்ன, ஹார்பர் என்ன, எல்லாம் சேர்ந்து மனசைப் பிடித்துத் தீவாந்திரத்துக்கே தீர்ப்புக் கொடுத்து விட்டது.

களத்தையே இவ்வளவு அழகாக சிருஷ்டி செய்திருக்கிறது. இனிமேல் வருவார்கள் பாத்திரங்கள்; கட்டங்களும் ஜோராய் வரும்.

நல்ல விருந்து தமிழனுக்கு.

அட்டைப் படமும் முன்னுரைக்கான படமும் வெகு வாய்ப்பாய், மோகன பாவம் கொண்டவைகளாய் இருக்கின்றன. வர்ணம் அழகான அழுத்தம் கொடுக்கிறது.

கல்கி கல்கிதான். மிக்க சந்தோஷம்.

என்னுடைய தேக ஆரோக்கியம் கொஞ்சம் கடிகார பெண்டுலம் மாதிரிப் பத்து நாளாக வம்பு ஒன்றும் பண்ணாமல் அடக்க ஒடுக்கமாய் இருந்தது. நேற்றுக் கொஞ்சம் சேஷ்டை பண்ண ஆரம்பித்தது. இன்று சரியாய் இருக்கிறது. இன்லாவின் போடா ் லே தட்டிக் கொடுத்துச் சரி பண்ணலாம் என்று எண்ணுகிறேன்.



✠ அமரர் கல்கியில் மோகினித்தீவு தொடர்கதைக்கு ஓவியர் மணியம் தீட்டிய அட்டைப்படம்.

யோகப் பயிற்சி குமாரசாமி இங்கு வந்திருக்கிறார். அவரும் பையன்களும் வந்திருக்கிறார்கள். அவர்தான் சொன்னார், பயிற்சியில் தங்களுக்கு உடம்பு சௌகரியப்பட்டிருப்பதாக. ரொம்பத் திருப்தி. 'குணமது கைவிடேல்' என்ற ஒரு வரி ஆத்திச்சூடியில் நல்ல வரி. அதற்காகவாவது அறஞ் செய விரும்பலாம். நப்போலக் கூட வளைய லாம்!

இன்று காலை இலஞ்சியில் ஈசுரம்பிள்ளையவர்களின் பேத்திக்குக்கல்யாணம். போயிருந்தேன். மேளம் வாசிப்பு நின்றதும் எம்.எஸ். கச்சேரிதான். ''கண்டதுண்டோ'', ''யாமறிந்த மொழிகளிலே'' முதலான தட்டுகள். (இசைத்தட்டுகள்). கொட்டகை சங்கீதத்தால் நிறைந்து விட்டது.

இங்குள்ளவர்களுக்கு ''டேஸ்ட்'' உண்டாய்விட்டது. இன்னும் அதிகமாக உண்டாக வேண்டும். பதிக்க வேண்டிய பாடல்களைச் சீக்கிரமாகவே பதித்துவிட வேண்டும். தாமசம் கூடாது. பாடல்களுக்குச் சனியன் பிடித்த மாதிரி (வேறு) யாராவது பாடித் தொலைத்து விடுவார்கள். தீட்டுப்பட்டு விடாதபடி ஜரூராகச் செய்ய வேண்டும்.

''மன்னும் இமயமலை'' இன்னும் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது எனக்கு! ''மானினம் வருவ போன்றும்'' எப்போது வரும் என்று திருச்சியில் கேட்டார்கள். சீவிலிப்புத்தூரில் கேட்டார்கள். இங்கேயும் கேட்கிறார்கள்.

• • •

மியூஸிக் காலேஜுக்கு மீட்டிங் 5ந் தேதி போட்டிருக்கிறது. அதற்கு நான் வரவில்லை. கடையநல்லூரில் 11ந் தேதி ஜோலி இருக்கிறது. கல்கி படத்தைத் திறந்துவைக்கப் போகிறார்கள். அதற்கு இருந்துவிட்டுச் சென்னை வருகிறேன். ராஜாஜி 21ந் தேதி வாக்கில் சென்னைக்கு வருவார்கள் என்று தெரிகிறது. அதற்குள் வந்துவிடுகிறேன்.

குற்றாலம் வெகு ஜோராகவே இருக்கிறது. நாங்கள், ருக்மிணி அம்மாள், அம்பி, ராஜேந்திரன், ஆனந்தி, தங்கம், அனந்த் எல்லாருமாக வந்தால் என்ன! மற்றப்படி சதாசிவம் குஞ்சம்மாள் (எம்.எஸ்.) எல்லாருமாகவே வந்தால் என்ன. எழுதுவதை இங்கிருந்தே எழுதலாம். அச்சு எந்திரம் அங்கிருந்தே அடித்துக் கொண்டிருக்கட்டுமே! எட்டாப் பழந்தான். ஆனாலும் பறிக்கக் கூடிய காரியந்தான்.

இரண்டு வீட்டில் உள்ளவர்களுக்கும் என் அன்பைச் சொல்ல வேண்டும்.

அன்புடன்
டி. கே. சிதம்பரநாதன்

முத்துராமனுடன் முப்பது வருஷம்!

முப்பது வருடங்களுக்கு முன்னால் மாயவரத்தில் ஒரு கண்காட்சியில் எங்களது குழுவின் நாடகம். முதல் நாளே அங்கு சென்று விட்டேன். அன்று மாலை அங்கு வேறு ஒரு குழுவின் நாடகம் நடந்தது. ஓரமாக நின்று பார்த்தேன். அப்போதுதான் முதன் முதலாக முத்துராமன் நடிப்பைக் கண்டு எடை போட்டேன்.

எங்களை விட்டு சிவாஜி கணேசன் பிரிந்திருந்த நேரம். அந்த இடத்தை நிரப்ப நானும் ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தேன். முத்துராமனை அழைத்துப் பேசினேன். ஆனால் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகுதான் எங்கள் குழுவில் வந்து அவர் சேர்ந்தார். எங்களது ஏராளமான நாடகங்களில் நடித்தார்.

முத்துராமனுக்குப் பள்ளிப் படிப்புக் கிடையாது. எட்டு வயதிலேயே அவர் நாடகத் துறைக்கு வந்துவிட்டார். ஆனால் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் அடங்காத ஆர்வம் கொண்டிருந்தார். பல வகைகளில் வளர்த்துக் கொள்ளவும் செய்தார். வி. கோபாலகிருஷ்ணன் இவருடைய வேண்டுதலின்படி ஸேவா ஸ்டேஜ் குழுவினருக்கு ஆங்கிலப் பாடம் நடத்தினார்.

'பாஞ்சாலி சபத'த்தைப் பொறுத்தவரை வருக்கு மிக மிகப் பிடித்தமானது துரியோதனன் வேடம். சினிமா ஷூட்டிங் என்றெல்லாம் போக ஆரம்பித்த பிறகும் முடிந்தபோதெல்லாம் நாடகத்தில் நடிக்க வந்து விடுவார். வெளியூர் நாடகமென்றால் கூட ''இந்த ஒரு நாள் ஷூட்டிங்கை முடித்து விட்டு வந்துவிடுவேன். தயாரிப்பாளர் என்னை விமானத்திலேயே அனுப்புகிறேன் என்று கூறியிருக்கிறார்'' என்பார். அதேபோல வந்துவிடுவார்.

இந்த வருடம் செப்டம்பர் மாதம் 11ம் தேதி 'பாஞ்சாலி சபதம்' நாடகத்தை நாங்கள் பாரதியார் நூற்றாண்டு விழாவுக்காக ராணி சீதை ஹாலில் நிகழ்த்தினோம். அப்பொழுதும் அவர்தான் நடித்தார். அவர் குரல் கவர்ச்சிகரமானது. ஆண் அழகன் வேறு. துரியோதனன் வேடத்துக்கு மிகப் பொருத்தமானவர்.

எந்த விதமான கெட்ட பழக்கங்களும் இல்லாதவர். ஒரே ஒரு வீக்னஸ்! பால் பந்தாட்டத்தில் அவருக்கு ரொம்ப விருப்பம். நாடக ஒத்திகை இருந்தால், ''கொஞ்சம் தயவு பண்ணி அட்ஜஸ்ட் செய்துகொள்ளுங்கள்'' என்றெல்லாம் கூறிவிட்டு விளையாட்டைக் காண நழுவிவிடுவார்!

எஸ். வி. சகஸ்ரநாமம் கூறக் கேட்டு
எழுதியவர் : சலன்





மழலைத் தொழிலாளர்கள்

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை குதூகலித்து மகிழ உதவும் பட்டாசு மத்தாப்புக்கள் தயாரிப்பில் எவ்வளவு துயரப் பின்னணிகள்!

இந்த ஆண்டில் கூட இரண்டு விபத்துகள். சிவகாசியில் ஒன்றும் திருநெல்வேலியில் ஒன்றும். இதுபோன்ற விபத்துக்களில் சிறு குழந்தைகளும் பலியாவது பெருத்த வேதனை.

இப்படி விபத்துக்கள் நேர்வதற்குக் காரணங்கள் என்ன? இப்படிப்பட்ட பாதுகாப்பற்ற ஒரு தொழிலில் குழந்தைகளை எப்படி ஈடுபட அனுமதிக்கிறார்கள்? இந்தத் தொழிற்சாலைகளுக்கு அதிகாரிகள் அனுமதி தருவானேன்?

சிலரை அணுகிச் சேகரித்த தகவல்கள்:

சட்டப்படி பதினான்கு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைத் தொழிலாளர்களாக வேலைக்கமர்த்தக் கூடாது. பதினான்கு முதல் பதினேழு வயது வரை உள்ளவர்களை 'அடலஸண்ட் சைல்ட்' என்று வகைப்படுத்தி, இவர்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றத்தக்க உடல்நலம் உள்ளவர்கள் என்று மருத்துவர்கள் சான்றளித்தால், வேலைக்கு வைத்துக் கொள்ளலாம்.

பட்டாசுத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை ஏராளமான சிறுவர்கள், மேற்சொன்ன விதிகளை லட்சியம் பண்ணாமல் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

இருபது பேருக்கு மேல் தொழிலாளர்கள் வேலை பார்த்தால்தான் அது தொழிற்சாலைச் சட்டங்களின்படி லைசென்ஸ் பெற வேண்டியதாக இருக்கும். இதற்காகவே, பல நிறுவனங்கள் இருபது பேருக்குக் குறைவாக வேலையாட்கள் இருப்பதாய்ச் சொல்லித் தப்பித்துக் கொள்கிறார்கள்.

பொதுவாக இந்த வாணவெடித் தொழிற்சாலைகள் ஊருக்கு உள்ளே இருப்பதில்லை. எளிதில் யாரும் அணுக முடியாத வயற்காடுகளிலும், ஒதுக்குப்புறங்களிலுமே இவை இயங்குகின்றன. தொழிற்சாலை அதிகாரிகள் தொலைவில் வருகிறார்கள் என்று தெரிந்தாலே பிள்ளைகளை வயல்காட்டுப் பக்கம் துரத்தி விட்டு விடுகிறார்கள்.

அதற்காக வண்டி வாகனங்களைத் தூரத்திலேயே நிறுத்திவிட்டு அதிகாரிகள் அரவமில்லாமல் சென்று சோதனையிட்டால் 'இந்தக் குழந்தைகள் இங்கே வேலை செய்யவில்லை. பெரியவர்களுக்குச் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறார்கள்' என்று சொல்வார்கள்: கையும் களவுமாக என்கிறமாதிரி குழந்தைகள் வேலை செய்கிறபோதே பிடித்துச் சில வழக்குகள் போடப்படுமேயானால் நீதி மன்றத்தில் இந்த வழக்குகளுக்கு 'நியூஸென்ஸ்' வழக்குகளுக்குக் கிடைக்கிற மாதிரிதான் தண்டனைகள் கிடைக்கின்றன. இருபது ரூபாய்தான் அபராதம். பல நேரங்களில் இந்தப் பட்டாசு தயாரிப்பு நிலையங்களைத் தொழிற்சாலைகள் என்று காட்டி லைசென்ஸ் பெறுவதை விட இப்படி அபராதம் செலுத்துவது மலிவானதாய் இருக்கும் போலிருக்கிறது.

லைசென்ஸ் பெறுவதற்கான கட்டணம் ஒன்றும் அதிகமில்லை. இருபது நபர்களை வைத்து வேலை வாங்கினால் ரூ. 40 செலுத்த வேண்டும். 50 பேரானால் ரூ. 80. 100 பேரானால் ரூ. 150 என்று குறையும். 500 பேர் உள்ள தொழிலகமானால் ரூ. 500தான் லைசென்ஸ் கட்டணம்.

தயாரிப்பாளர்கள் இந்தக் கட்டணத்துக்கு அஞ்சுவதில்லை. ஆனால் தொழிற்சாலை என்று லைசென்ஸ் பெற்றுவிட்டால் பலவிதமான தொழிலாளர் நலத் திட்டங்களை அமுல்படுத்த வேண்டி வரும். தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ், பிராவிடெண்ட் பண்டு என்று பல இனங்களில் பணம் செலவிட வேண்டியிருக்கும். இதற்காகவே தயாரிப்பாளர்கள் நழுவ முயலுகிறார்கள்.

பட்டாசுத் தொழில் பெரும் அளவில் நடைபெறுவது இராமநாதபுரம் மாவட்டத்தில்தான். அதிலும் சிவகாசியில்தான் அதிகம். தஞ்சை போன்ற பிற மாவட்டங்களிலும் பெயரளவுக்கு உண்டு.

விவசாய வேலைகளில்தான் இதுபோன்ற குழந்தைத் தொழிலாளர்கள் பெரும்பாலும் ஈடுபடுவதுண்டு. ஆனால் இராமநாதபுரம் போன்ற பின்தங்கிய பகுதிகளில் விவசாயமாவது இன்னொன்றாவது? சிவகாசிப் பகுதியில் அதிகமாகக் குழந்தைகள் பெறுவதை விரும்புகிறார்கள். ஏனெனில், வேலை செய்து குடும்பத்துக்கு உழைத்துப் போட இன்னும் இரண்டு கரங்கள் கிடைக்கின்றனவே,

பட்டாசு, வாணத் தயாரிப்பில் ஈடுபடும் இந்த சிறுவர்கள் பிரச்னை அரசுக்கே ஒரு சவாலாகத்தான் இருக்கிறது! அதிகாரிகள் வெறும் சட்டங்களை மட்டும் வைத்து இதில் தீர்வு காண முடியவில்லை. பெரும் அளவில் மனிதாபிமான உணர்ச்சி சட்ட விதிகளை மழுங்க அடித்து விடுகிறது. அதிகாரிகள்



ஆட்சி வேறு; கட்சி வேறு!

அண்மையில் 85-வயது பூர்த்தியான பக்தவத்சலம் அவர்களுக்கு நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். பிறகு, மாற்றுக் கட்சியினரால் தாக்கப்பட்ட தொண்டர்களுக்கு உதவி செய்ய அ. தி. மு. க. மந்திரிகள் தெருத் தெருவாகப் பணம் வசூலித்ததைப் பற்றியும், அ.தி.மு.க. கட்சி ஆரம்பித்துப் பத்தாண்டுகள் நிறைவு பெற்றதை ஒட்டிப் பல வழக்குகளை அரசு வாபஸ் பெற்றது பற்றியும் அவரிடம் கருத்துக் கேட்கிறோம். அனித்தரமான பதில் அளிக்கிறார் முன்னாள் முதல்வர்.

''மந்திரிகள் தெருத் தெருவாகச் சென்று நிதிவசூலிப்பது என்பது அதிகார துஷ்பிரயோகத்துக்கு வழி வகுக்கும். மந்திரியே வசூலுக்கு வருவதால், வியாபாரிகள் ''வம்பை ஏன் விலைக்கு வாங்க வேண்டும்'' என்று முடிந்த அளவுக்குப் பணத்தைப் போட்டு விடுவார்கள். அப்படியே அவர்கள் சற்றுக் குறைவான தொகையைப் போட்டால் தொண்டர்கள் வியாபாரியை மந்திரியின் பெயர் சொல்லி மிரட்டிப் பணம் பறிப்பார்கள். பாதிக்கப்பட்ட கட்சித் தொண்டர்களுக்கு உதவி செய்வதென்றால், கட்சியில் உள்ள மற்ற உறுப்பினர்களிடம் ஆளுக்கு ஒரு ரூபாய் என்று வசூலித்து உதவலாம். அதை விட்டு விட்டு வியாபாரிகளிடமும், பொதுமக்களிடமும் பணம் வசூலிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? பலர் கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கும் நாடகம் தான் இந்த வசூல் விவகாரம் என்று கூறுகின்றனர். ஆனால் சரியான ஆதாரம் இல்லாததால் என்னால் இந்தக் குற்றச்சாட்டைக் கூற முடியாது.

''அ.தி.மு.க. கட்சி தோன்றிப் பத்து வருடங்கள் ஆனதை முன்னிட்டு விவசாயிகள் மாணவர்கள் மேல் போடப்பட்டுள்ள வழக்குகளை (வன்முறை, கொலை வழக்குகள் தவிர) வாபஸ் பெறுமாறு அரசு உத்தரவிட்டுள்ளதும் தவறே. வழக்குப் போடும்போது தக்க காரணங்களுடன் போட வேண்டும். பிறகு அதில் உறுதியாக இருக்க வேண்டும். ஒரு ஆளும் கட்சி தனது பத்தாண்டு நிறைவு நாளை முன்னிட்டு அரசு நிர்வாகத்தில் தலையிட்டு வழக்குகளை வாபஸ் பெற உத்தரவு போடுவதென்பது சரியானதல்ல. ஆட்சி வேறு; கட்சி வேறு. இது இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் தான் இப்போது ஆண்டுகொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரியான செயல்களைக் கண்டிக்கத் தெரியாத இல்லாதவர்கள் இருக்கும்வரையில், கோமாளித்தனமான செயல்கள் நடந்துகொண்டுதான் இருக்கும்!''

பேட்டி: ப்ரியன்

சோதனையிடப் போகும்போது பிள்ளைகள் பிடிபட்டால் – அதன் பின்னர் சோகமயமான பின்னணி இருப்பதும் தெரிய வருகிறது.

விதவைகளும், வேறு ஆதரவற்றவர்களும் பிள்ளைகள் கொண்டு வருகிற ஒன்றையும் இரண்டையும் நம்பியே வாழ்கிறார்கள். சட்டங்களைக் காட்டி மழலைத் தொழிலாளர்களை வேலை செய்ய முடியாமல் செய்து விட்டால் அந்தக் குடும்பங்கள் 'அம்போ' என்று நிற்க வேண்டி வரும்.

இனி – இப்படிப்பட்ட பாதுகாப்பற்ற தொழிற்சாலைகளை எப்படி அங்கீகரிக்கிறார்கள் என்பது ஒரு கேள்வி.

குடிசைத் தொழிலாக வகைப்படுத்தப் பட்ட தொழில் இது. பெரும்பாலும் தொழிற்சாலை லைசென்ஸ் பெற யாருமே விண்ணப்பிப்பதில்லை. அதிகாரிகள் சோதனை யிடும்போதுதான் லைசென்ஸ் பிரச்னையே வருகிறது.

இந்தச் சிறு தொழில்களைத் தொழிற்சாலை சட்டத்தின் பிடியிலிருந்து விடுவித்துவிட வேண்டும் என்று கூடப் போராடுகிறார்கள்.

முக்கியமான நிர்வாகத் தடங்கல் ஒன்றும் இருப்பதாய்த் தெரிய வருகிறது. தேவையான கந்தகம், மற்ற ரசாயனப் பொருள்களை வைத்திருக்க லைசென்ஸ் வழங்கும் உரிமை கலெக்டர்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அவர்கள் லைசென்ஸ் தரும் போது தொழிற்சாலைச் சட்டப்படி லைசென்ஸ் பெற்றவர்களா என்பதைக் கவனிப்பதில்லை. லைசென்ஸ் பெற்ற தொழிற்சாலைகளுக்கு மட்டும் தான் கலெக்டர் அலுவலக வெடிமருந்து லைசென்ஸ் கிடைக்கும் என்று உறுதியானால் பாதுகாப்பு ஏற்பாடுகள் தானே அமையும்.

ஏனெனில் தொழிற்சாலை அமைப்பு, பாதுகாப்பு வசதிகள், தொழிலாளர் நலன் இவற்றைக் கருத்தில் கொண்டுதான் தொழிற்சாலைக்கான லைசென்ஸ் வழங்கப்படுகிறது.

இந்த வேலை ஆபத்து நிறைந்தது என்று உணர்ந்து தம்முடைய குழந்தைகளை இப்படிப்பட்ட வேலைகளுக்குப் பெற்றோர்கள் அனுப்பாமல் இருக்க வேண்டும்.

பொருளாதாரக் கண்ணோட்டத்தில் இது நடக்கிற காரியமா?

–நகர்வாலா

ஊருக்குத் தீனி




□ மதுரை மாவட்டம் தேனுமருதூர் என்ற கிராமத்தில் தினசரி இரவுப் பள்ளிக்கூடம் நடத்தப்படுகிறது. யாருக்காக, வயதானவர்களுக்காகவா? இல்லை. காலையில் மாடு மேய்க்கவும், வயலில் வேலை செய்யவும் செல்லும் ஏழைச் சிறுவர்களுக்குத்தான்! இப்பள்ளியை நடத்துபவர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் செல்வ நாயகம் என்பவர்.



□ ''வீட்டிலே மனைவியிடம் சட்டைக்குச் சோப்புப் போட்டு வை என்றால் அவள் சட்டை செய்வதில்லை. அவளுக்கு ஏதாவது சோப்புப் போட்டால்தான் அவள் சட்டைக்குச் சோப்புப் போடுகின்றாள். ஆக சோப்புக்குக்கூட சோப்பு போட வேண்டிய காலமாகப் போய்விட்டது இது!''

மதுரையில் நடைபெற்ற இலக்கிய விழா ஒன்றில் கேட்ட ஜோக்.



□ மதுரையைச் சேர்ந்த முருகன் என்பவர் எம். ஏ. வரை படித்துவிட்டு வேலைக்காக ஒவ்வொரு அலுவலகமாக ஏறி இறங்கினார். ஆனால் எந்த அலுவலகத்திலும் வேலை கிடைக்கவில்லை. மனம் தளரவில்லை முருகன். துணிந்து ஒரு தொழிலைச் சொந்தத்தில் ஆரம்பித்து விட்டார். அது ''ஹேர் கட்டிங் சலூன்'' தான். மதுரை மேலைப் பெருமாள் மேஸ்திரி வீதியில் ''மார்ஷல் ஹேர் கட்டிங் சலூன்'' என்ற பெயரில் ஆரம்பித்திருக்கிறார். முருகனைப் போல் ஒவ்வொரு பட்டதாரியும் தாழ்வு மனப்பான்மையை நீக்கி ஏதாவது ஒரு தொழிலைச் சுயமாக ஆரம்பித்தால் வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஓரளவாவது குறைக்கலாமே!



□ காலை தினசரிகளைப் பெரும்பாலும் ஆண்கள் தான் வீடு வீடாகச் சென்று கொடுப்பது வழக்கம். ஆனால் மதுரையில் ஒரு பெண்மணி இப்பணியைச் செய்கிறார். பெயர் கவிதா பூங்கொடி.

தொகுப்பு :

திசைமுத்து



□ கடைகளுக்குச் சிறுவர் சிறுமியரை அனுப்பும் பெற்றோர்க்கு ஓர் எச்சரிக்கை! மாம்பலம் ரங்கநாதன் தெரு. கையில் பையுடன் நடந்துகொண்டிருந்த ஒரு சிறுவனைத் திடீரென்று யாரோ இரு சிறுவர்கள் அவனின் கரங்களைப் பிடித்துக் கொண்டு நேசத்துடன் அவனைச் சீண்டி விளையாடியவாறே செல்லத் தொடங்கினர். திகைப்பு நீங்கிய பின்பு தான் தன் சட்டைப் பையிலிருந்த பத்து ரூபாயை அந்தத் திடீர் நண்பர்கள் எடுத்துச் சென்றுவிட்டது அவனுக்குத் தெரிந்தது. 'பிக் பாக்கெட்' அடிப்பதில் இது லேட்டஸ்ட் முறை போலும்!

□ ஆவடி காமராஜர் காலனி வாசிகள் காலனியின் நடுவே ஒரு கரும்பலகையை நிறுவியுள்ளனர். இப்பலகையில் தனிப்பட்ட அல்லது பொது அறிவிப்புக்கள் செய்து கொள்ளலாம். காணாமல் போன சிறுவன் பற்றிய அறிவிப்பு அண்மையில் இப்பலகையில் காணப்பட்டது.

□ ''காண வேண்டின் காக்க வேண்டா, எவரும் நுழைக எப்போதும்'' என்ற வாசகம் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் அறையின் முன்னே காணப்பட்டது. அவரைப் போல் கதவுகளைத் திறந்து வைத்துள்ள அதிகாரிகள் எத்தனை பேர்?

— யெம்ஜி



"மழை வருமா?"

"ஜெரா"

"என்னிக்கு அந்தக் கெழவி வீட்டைவிட்டுத் தொலையுறாளோ அன்னிக்குத்தான் நான் உன் வூட்டு வாசப்படியை மிதிப்பேன் —இப்படிக்கு கண்ணம்மா"

கடிதத்தின் கடைசி வரிகளைப் படித்து முடித்த தபால்காரர் பொன்னையா எதிரே கல்லாக அமர்ந்திருக்கும் மாணிக்கத்தைச் சங்கடத்தோடு பார்த்தான். போயும்போயும் இந்த அப்பாவி மாணிக்கத்துக்கு இப்படி ஒரு அரக்கி மனைவியாக வாய்க்க வேண்டுமா? என்று மனத்துக்குள் கேள்வி கேட்டுக்கொண்டு மௌனமாக எழுந்த பொன்னையா "அப்ப... வரட்டுமா மாணிக்கம்" என்று இழுத்தான். கல்லாக இருந்தவன் கண நேரத்தில் உயிர் பெற்று "இருங்க சாரு... டீ குடிச்சிட்டுப் போவீங்களாம்..." என்றபடி டீ போடுகிறவனைப் பார்த்துக் கண் ஜாடை காட்டிவிட்டு நிதானமாகப் பாக்கெட்டில் கைவிட்டுத் துழாவிச் சில்லறையை எடுத்துக் கல்லாப் பெட்டியில் இருந்தவன் முன்பு வைத்தான். பிறகு பொன்னையா நீட்டிய கார்டை வாங்கிக் கொண்டு கை கூப்பி விடை பெற்றவனாகக் கடையை விட்டு அகன்றான். இனி கண்ணம்மாவை எதிர்பார்த்துப் பிரயோசனமில்லை என்ற நினைப்பு மனத்தின் ஓரத்தில் 'சுருக்'கென்று தைக்க, தலையை உயர்த்தி வானத்தை அண்ணாந்து பார்த்தான். "இதற்கெல்லாம் நான் வருத்தப்பட மாட்டேன்" என்பது போல் வானம் வெட்ட வெளியாய் மேகக் கூட்டங்களின்றி வெளேரென்று சிரித்துக் கொண்டிருந்தது. ஊஹூம்... மழை வருவதற்கான அறிகுறியே இல்லை. இந்தப் பருவ மழை தவறிப் போனதால்தான் எத்தனை பிரச்னைகள்... வறண்டு கிடப்பது விளை நிலங்கள் மட்டுமல்ல.... எத்தனையோ பேர்களின் வயிறுகளும், நெஞ்சங்களும்தான் என்பது யாருக்குப் புரியப் போகிறது?

தட்டிக் கதவைத் திறந்து கொண்டு மாணிக்கம் குடிசைக்குள் நுழையும்போது சுள்ளிகளை அடுப்பில் கொடுத்துவிட்டுப் புகை மண்டலத்தில் போராடிக் கொண்டிருந்தாள் தாயம்மாக் கிழவி — மாணிக்கத்தின் தாய் — கண்ணம்மாவின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தவள். சுள்ளிக் குச்சியே கேலி செய்யும் அளவுக்கு ஒடிசலான தேகம். நடுங்கும் கரங்களால் ஊதுகுழலைப் பிடித்துக் கொண்டு கண்கள் தெறித்து விடுமளவுக்கு அடுப்பை ஊதிக் கொண்டிருந்தவளைப் பார்த்ததும் பதறிப்போய் விட்டான் மாணிக்கம்.

"தா...ஆத்தா... எந்திரி நீ! என்ன பண்றே! உடம்பு முடியாம இருக்கையில இதெல்லாம் என்னாத்துக்குப் பண்றே...ம்?"

கண்களை இடுக்கி மகனை ஏறிட்ட கிழவி, "பானையில கால்படி அரிசி இருந்துச்சி... கஞ்சி காய்ச்சி வச்சாக் குடிப்பியேன்னுதான்...." என்று முனகியபடி கையைத் தரையில் ஊன்றிக் கஷ்டப்பட்டு எழுந்து கொண்டாள். மாணிக்கம் ஊதுகுழலைக் கையில் எடுத்து அடுப்பில் ஊதவும், சுள்ளிகள் குபீரெனத் தீப்பிடித்து எரிந்தன.

"ஏண்டா... ஒரு தபா ஊருக்குப் போயி அவளைக் கூப்பிட்டுப் பாரேன்."

"அவ இனிமே வரமாட்டா ஆத்தா." சொல்லும்போதே மாணிக்கத்துக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்ணம்மாவின் மேல் அவன் உயிரையே வைத்திருந்தான்! அவள் இங்கு வாழ்ந்த சில மாதங்களில் சதா வாய்ப் பேச்சிலேயே இவனை வதைத்துக் கொண்டிருந்தாள் — இருந்தாலும் இவன் கண்ணம்மாவைக் கண்மூடித்தனமாகக் காதலித்தான். நாள் முழுதும் கடுமையாக உழைத்தும் கால் வயிறு கூட நிரம்பாத வறுமைத் தீயில் வெந்து கொண்டிருந்தவனுக்கு அவள் காட்டிய சுகங்கள் மட்டுமே சொர்க்கமாக இருந்தன. ஆனால் அவளோ ஏமாந்து போய் ஓர் அன்றாடங்காய்ச்சிக்குக் கழுத்தை நீட்டி விட்டதாகக் கத்திக் கொண்டிருப்பாள்! பிறந்த வீட்டுப் பெருமையையும், புகுந்த வீட்டின் வறுமையையும் வாய்க்கு வாய் பேசி வம்பளப்பாள்! தாயம்மாக் கிழவியோடு சரி சமமாய் மல்லுக்கு நிற்பாள்! இதனால் எல்லாம் மாணிக்கம் மனம் நொந்து போய்விடக் கூடாதே என்பதில் கிழவி வெகு எச்சரிக்கையாக இருப்பாள்! தவறு யார் மீது இருந்தாலும் கிழவியே தணிந்து போவாள். எப்படியோ மகன் சந்தோஷமாக இருந்தால் சரி என்று கிட்டத்தட்ட மௌனசாமியாகவே பல மாதங்கள் கழித்திருக்கிறாள்!

ஆனால்... ஒரு மாதத்துக்கு முன்பு மருமகள் கிளப்பிய பிரச்னையைக் கண்டு கிழவியால் மௌனம் சாதிக்க முடியவில்லை! மாணிக்கத்தின் பெயரில் இருந்த பரம்பரைச் சொத்தான ஓர் ஏக்கர் நிலத்தை விற்று, காசாக்கி ஏதாவது வியாபாரம் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று கண்ணம்மா தூபம் போட்டதும் முதலில் மாணிக்கம் வெகுவாகத் தயங்கினான். போதாதற்குக் கண்ணம்மாவின் அண்ணன்

வேறு ஊரிலிருந்து வந்து ஒதிவிட்டுப் போகவும், மாணிக்கம் மெதுவாகக் கிழவியிடம் விஷயத்தைச் சொன்னான். நெடு நேரம் பேசாமல் இருந்த கிழவி நீண்ட பெருமூச்சு விட்டாள்.

''எங் கண்ணு முன்னால அந்த நெலத்தை மத்தவனுக்கு விக்கறதை நான் ஒப்புக்க மாட்டேன்! என் பொணத்துக்குப் பொறவு நீ எதை வேணாக்க செஞ்சு போடு.''

கிழவியின் பதில் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த கண்ணம்மாவின் தலையில் ஓங்கி அடித்தது. பொறுமை இழந்து மாணிக்கத்திடம் பொருமினாள்.

''அதென்னமூணுபோகம் விளையற பூமியா? மேட்டுக்காடு தானே! மளிகைக் கடைச் செட்டியாரு, ரைஸ் மில்லுக் கட்டறதுக்காக அந்த நிலத்தைக் கேக்கறாரு! நல்ல விலை போட்டுத் தர்றதா எங்கிட்டச் சொன்னாரு! குடுத்துட வேண்டியதுதானே!''

''அப்பிடியெல்லாம் சொல்லாதே புள்ளே! ஒரு மழை பெஞ்சாப் போதும். எதுனச்சும் வெதச்சுப் போடலாம்! எங்க பரம்பரைச் சொத்து. அதனாலதான் ஆத்தா வேண்டாம்னு சொல்லுது.''



''ஆமா... பெரிய்ய்ய சமீனு பரம்பரை! தூத்தெறி... சோத்துக்கு வக்கில்லே. பெரிசா வாயி மட்டும் கிழியுது...''

அதற்குப் பின் கண்ணம்மா பல முறை கேட்டும் மாணிக்கம் வளைந்து கொடுக்கவில்லை. கண்ணம்மாவுக்காகச் சற்று இளகியவன் கிழவிக்காக மனத்தைக் கல்லாக்கிக் கொண்டான். கண்ணம்மா அவனுடைய சமாதானங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. கரித்துக் கொட்டிவிட்டுப் பிறந்த வீட்டுக்குப் போய் விட்டாள். அவள் போனதிலிருந்து நன்றாக நடமாடிக் கொண்டிருந்த தாயம்மாவும் படுக்கையில் விழுந்துவிடவே, பதறிப்போய் விட்டான் மாணிக்கம். எப்போதாவது கிடைக்கும் கூலி வேலையையும் ஒழுங்காகச் செய்ய முடியாமல் தடுமாறினான். திரும்பி வரும்படி கண்ணம்மாவுக்கு அவன் எழுதிய கடிதத்துக்குப் பதிலாகத்தான் அவள் தேளாகக் கொட்டி இருந்தாள்!

''ஏண்டா நீதான் ஒரு நடை போயி பார்த்துப் பேசிக் கூப்பிட்டுப் பாரேன்... சம்சாரமில்லாம எத்தினி நாளைக்குத்தான் சங்கடப்படுவே! நா சொல்றதைக் கேளு! நெலத்தை வித்தாத்தான் அவ—வருவான்னு தெரிஞ்சா பேசாம அதைச் செட்டியாருக்குக் கெரயம் பண்ணிக் கொடுத்துப்போட்டு அவளைக் கூட்டிக்கிட்டு வா! இந்தக் கெழவியால உங் குடும்பம் ரெண்டாக வேண்டாமிடா ராசா.''

கிழவி அழுவதைக் காணச் சகிக்காமல் கண்களில் நீர் முட்டக் குடிசைக்கு வெளியே வந்தான் மாணிக்கம். இப்போது கூட ஒன்றும் கெட்டுப் போகவில்லை. ஒருமழை பெய்தால் போதும். கண்ணம்மாவின் மனத்தை மாற்றிவிடலாம்... ஆனால்...மழை வருமா? இரும்பு இதயம் கண்ணம்மாவுக்கு மட்டும்தானா? இல்லை. இந்த இயற்கைக்கும்தான்!

''கெழவிய சர்க்காரு ஆஸ்பத்திரியில சேர்த்துப் போடறதுதான் நல்லதுன்னு தோணுது'' வைத்தியரின் முடிவைக் கேட்டு வாய் அடைத்துப் போனான் மாணிக்கம். நாக்கு உள்ளிழுத்துக்கொண்ட உணர்வில் பேசமுடியாமல் தடுமாறினான். ''ஏ... ஏனுங்க... ஆத்தாவோட நெலமை...''

''மோசமாத்தான் இருக்கு... நான்தான் படிச்சுப் படிச்சுச் சொன்னேனே! கெழவிக்கு அலைச்சல் கூடாது... படுக்கையை வுட்டு எழுந்திரிக்க கூடாதுன்னு...''

''எனக்குத் தெரியலங்க.... நான் கூலிக்குப் போயிருக்கிற வேளையாப் பார்த்துக் கண்ணம்மாவைக் கூட்டியாரேன்னு அவளூருக்குப் போயிருக்கு! திரும்பி வந்து படுக்கையில வுழுந்ததுதான்...''

''சரி...சரி... எங்கேயாவது கடனை உடனை வாங்கி, காசு பணம் பொரட்டிக்கிட்டு வண்டி வச்சு கெழவிய டவுனுக்கு எடுத்துக்கிட்டுப் போயி சர்க்கார் ஆசுபத்திரியிலே சேர்த்துப்போடு... அப்பாலே ஆண்டவன் விட்ட வழி....''

வைத்தியர் போன பின் நெடு நேரம் மரமாக அமர்ந்திருந்தான் மாணிக்கம்.

எப்படியாவது கிழவியை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும்! மாணிக்கம் யோசித்தான். திடீரென அந்த ஒரு ஏக்கர் நிலமும், மளிகைக் கடைச் செட்டியாரும் மனத் திரையில் தோன்றி மகிழ்ச்சியோடு கைகளை நீட்டி வரவேற்றனர்! மழை இல்லாமல் வறண்ட நிலத்தை வைத்திருப்பதை விட அதை விற்றுவது கிழவிக்கு மறுவாழ்வு தரலாமே!...

மாணிக்கம் சொன்னதை யெல்லாம் பொறுமையாகக் கேட்டுவிட்டுப் பரிதாபமாகச் சூள் கொட்டினார் செட்டியார். ''கொஞ்சம் முன்னாடி வந்திருக்கக் கூடாது மாணிக்கம்! இப்பத்தான் நம்ம கண்ணுசாமியோட நிலத்தைப் பேசி முடிச்சு அட்வான்ஸ் கொடுத்தேன். நீதான் முடியாதுன்னு முதல்லேயே சொல்லிட்டியே! கைமாத்தா ஏதாவது உதவலாம்னு—பார்த்தாலும் கல்லாப் பெட்டி காலியா கிடக்கு.''

எதிர்பாராத அணுகுண்டைச் செட்டியார் வீசி விடவும், ஓரேயடியாக ஆடிப் போன மாணிக்கம் அரை உயிராகக் குடிசைக்குத் திரும்பினான். குடிசைக்கு வெளியேயும் உள்ளேயும் சிலர் கூட்டமாக நிற்பதைப் பார்த்து நெஞ்சு வெடித்து விடுமளவுக்கு ''ஆத்தா'' என்று குரலெழுப்பி அழுதவன் ஓடிப்போய்க் கை கால் இழுத்துக்கொண்டிருந்த கிழவியை அள்ளி மடியில் போட்டுக் கொண்டான். உள்ளடங்கிய கண்களால் அவனை உற்றுப் பார்த்த கிழவி... ''மா... மாணிக்கம் ..கண்ணம்மா... வந்துடுவா...'' என்று முனகினாள். அதற்குள் அவள் தலை இரண்டொரு முறை 'விலுக்...விலுக்' என்று வெட்டி இழுத்தது. பிறகு மெதுவாகத் தொய்ந்து விழுந்தது. மாணிக்கம் வயிற்றுக் குடல் வாயின் வழியே தெறித்து விடுமளவுக்கு ஓலமிட்டு அழுதான். அவனுடைய கூக்குரலையும் அழுத்திப் புதைக்கும்படி வானத்தின் எங்கோ ஒரு மூலையில் பாறைகள் உருண்டன. மின்னல்கள் இளைவிட்டுச் சிரித்துக் கண்ணடித்தன. சுழன்றடிக்கும் சூறைக் காற்றோடு பேரிரைச்சலாய் வெளியே மழை பெய்யத் தொடங்கியது. மாணிக்கம் சட்டென்று எழுந்தான். வெளியில் வந்து வெறுப்போடு வானத்தைப் பார்த்தான். துணிப்பையைத் தலைக்கு வைத்துக்கொண்டு அப்போதுதான் வாசற்படி ஏறிக்கொண்டிருந்த கண்ணம்மாவைக் கனல் தெறிக்கும் கண்களால் எரித்தான். மௌனமாகப் பின்வாங்கிக் குடிசைக்குள் சென்று மடமடவென்று கிழவியின் காரியங்களைக் கவனிப்பதில் மூழ்கினான்.


காலம் தவறிப் பெய்யும் மழைக்கு மட்டுமல்ல. சில சமயங்களில் அனுசரித்துப் போகாத மனைவிக்கும் மதிப்பில்லை என்பதை உணர்த்துவதைப் போல் லட்சியம் செய்ய ஆளில்லாமல் கண்ணம்மா வெளியே கால் கடுக்க நின்று கொண்டிருக்கிறாள்! இப்போது வறண்டு கிடக்கும் அவன் வாழ்க்கையை வளமாக்கும் மழை வருமா? மாணிக்கம்தான் சொல்ல வேண்டும்!

''இது என்ன சார் புதுரகம் 'விலைவாசி ஸ்பெஷல்'னு?''
வெடிக்கடைக்காரர்: ''இருக்கிற ராக்கெட் ரகங்களில் இதுதான் சார் ரொம்ப உயரத்திற்குப் போகும்!''

— கீழை. அ. கதிர்வேல்


சத்யா மூவீஸ்
அளிக்கும்
தேவி பாரடைஸ் • அகஸ்தியா
அபிராமி A/C
ராணுவ வீரன்
S.P. முத்துராமன்
M.S. விஸ்வநாதன்
ELEGANT

சுவர்ணமுகி



ஸ்ரீவேணுகோபாலன்

31

கோட்டையிலிருந்து வீரர்கள் பீரங்கி எடுத்து வீசிய ஒவ்வொரு கல்லுக்கும் எதிரிகள் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்தார்கள். - நூனிஸ்

ஓலையைப் படித்த வேங்கடராஜா பதற்றம் அடைந்தார். லிங்கமா! இப்படியும் நடக்குமா?'' என்று கேட்டார்.

ஓலை கோட்டை நாயகத்திடமிருந்து வந்திருந்தது. கோட்டைத் தளபதியான குமரேசனைப் பற்றி அவலாதி கூறியிருந்தார். எதிரியிடமிருந்து தளபதி பத்தாயிரம் வராகன் லஞ்சம் வாங்கியிருப்பதாகவும், மறுநாள் காலையில் யாருக்கும் தெரியாமல் கோட்டைக் கதவைத் திறந்து விடப் போகிறார் என்றும் தெரிவித்திருந்தான்.

''குமரேசன் அப்படிப்பட்டவனா?'' என்றார் வேங்கடராஜா!

''இல்லை. என்னிடம் விசுவாசமானவர்களில் அவன் ஒருவன். ஆனால் சந்தர்ப்பம் வந்தால் யார் யார் எப்படி மாறுவார்கள் சொல்ல முடியாது'' என்றார் அவர்.

கடந்த இரண்டு தினங்களில் அவர் வேலூருக்குள் எத்தனையோ வேடிக்கைகளைப் பார்க்கிறார்.

நேற்றுவரை அவரைப் போற்றியவர்கள் மறுநாள் திடீரென்று மாறிக் கொண்டிருந்தார்கள்.

''இப்போது என்ன செய்யலாம்?'' என்றார் வேங்கடராஜா.

''குமரேசனை அழைத்து விடுவோம். வந்தால் சிறைப் பிடிப்போம். வராவிட்டால் நாமே தந்திரமாகக் கொன்றுவிடுவோம்'' என்றார் லிங்கமர்.

''இரவே அது நடந்தாக வேண்டும்'' என்றார் வேங்கடர்.

''இதோ!'' என்று சொல்லி உடனே ஆளை அனுப்பினார் லிங்கமர்.

இருவரும் பிறகு கவலையோடு திரும்பியபோது அடுத்த அறையில் சுவர்ணமுகி சோகமாக நிற்பதைப் பார்த்தார்கள். ''இது ஒரு பிரச்னை!'' என்றார் வேங்கடர்.

''என்ன விஷயம்?'' என்று வெறுப்புடன் கேட்டார் லிங்கமர்.

''இவளைத் தெரியுமா?'' என்று குரலைத் தாழ்த்திக் கேட்டார் வேங்கடர்.

''தெரியாது'' என்றார் லிங்கமர்.

''இவள்தான் இம்மாடி ஸ்ரீரங்க மகாராஜாவின் மகள்?'' என்றார் வேங்கடர்.

''என்னது! சிறையில் இறந்த அந்த மகாராஜாவின் மகளா?'' என்று திடுக்கிட்டுக் கேட்டார் லிங்கமர்.

''ஆமாம்!'' என்றார் வேங்கடர்.

''மகாராஜா! ஸ்ரீரங்க மகாராஜா சிறையில் இருந்தபோது ராமதேவன் என்ற பையனை மட்டும் சலவைக்காரரின் அழுக்குக் கூடையில் வைத்து வெளியே அனுப்பினார் என்பது எல்லோருக்கும் தெரியும்.''

''அப்போதே ஸ்ரீரங்க மகாராஜா இன்னொரு காரியமும் செய்திருக்கிறார். தமது ஒரே மகள் சுவர்ணமுகியைச் சிறைக் காவல்காரனிடம் கொடுத்து அவனது மகளை உள்ளே வாங்கி வைத்திருக்கிறார்.''

''ஆச்சரியம்!'' என்றார் லிங்கமர், புருவங்களைத் தூக்கி. ''இவ்வளவு வருஷமும் இந்த விஷயம் வெளியாகாமல் இருந்ததா?''

''ஆமாம்! அதனால் இந்தப் பெண்ணுக்கு ஏதாவது இங்கு நேரிடுமென்று யாரும் வெளியில் சொல்லவில்லை.''

''அவளது வளர்ப்புப் பெற்றோர்கள் யார்?''

''ஏன்? நமது நாராயணவனம் ரங்கப்ப தளவாய்!''

''அவரா? அவர் ஏன் வெளியே கூறவில்லை''

''அவள் ஒரு பெண்! அவளது திருமணம் முடிந்த பிறகுதான் அவளது வரலாற்றைக் கூறவேண்டும் என்று அவர் நினைத்திருந்தார். ஆனால் அதற்கு முன்னால் அவர் திருப்பதிச் சண்டையில் இறக்க வேண்டி நேர்ந்தது. இனியும் அந்த ரகசியம் தன்னிடம் மட்டும் இருக்கலாகாது என்று நம்பிக்கையான இருவரிடம் கூறியிருக்கிறார். இப்போது ரகசியம் வெளிவந்து விட்டது.''

லிங்கமர் தமது வாளின் கைப்பிடியைப் பற்றினார். ''மகாராஜா! இதில் ஏதோ சூது இருக்கிறது.'' என்றார்.

''எப்படிச் சொல்கிறாய்?''



"இத்தனை நாளும் இல்லாத பூதத்தை யாரோ கிளப்புகிறார்களே! நமக்குத் தெரியும் மறைந்த ஸ்ரீரங்க மகாராஜாவின் குடும்பத்தில் எஞ்சியது அவரது மகன் ராமதேவன் ஒருவர் தான் என்று!"

"ஆமாம்; அந்த ராம தேவன் சிறிது காலம் ஆட்சி புரிந்து, மகவு இல்லாமல் இறந்ததால் நான் இந்த ராஜ்யத்தின் மகுடத்தை ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தது. இப்போது திடீரென்று ஸ்ரீரங்க மகாராஜாவுக்கு ஒரு மகளும் இருந்தாள் என்று நம்ப வேண்டி வந்தால்..."

"இறந்தாரே மகாராஜா ராமதேவர்!



"உங்க மூத்த மருமகன் மட்டும் பழைய சோறு போட்டால் கூட கோவிச்சுக்காம, சாப்பிடுவாராமே!"

"ஆமாம் அவர் ஒரு புதை பொருள் ஆராய்ச்சியாளர்."

– கீழை அ. கதிர்வேல்

அவருக்குத் தெரியுமா தனக்கு ஒரு சகோதரி உயிரோடு இருக்கிறாள் என்று?"

"நானும் அதைக் கேட்டேன். அவளால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை"

லிங்கமரின் கண்கள் விருட்டென்று உருண்டன. "மகாராஜா! இப்படி வாருங்கள் வாருங்கள்!" என்று அடுத்த அறைக்கு அழைத்துப் போனார்.

"இதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கிறது மகாராஜா! நாம் இப்போது இரக்கமில்லாத ஒரு காரியத்தில் இறங்க வேண்டும்"

"என்ன செய்யலாம்?"

"இவளை இன்று இரவுக்குள் தீர்த்துக் கட்டிவிட வேண்டும்."

வேங்கட ராஜா திகைத்தார். "ஏன் இப்படிச் சொல்கிறாய் லிங்கமா?"

"மகாராஜா! இன்றைய நிலைமையைப் பாருங்கள்! கோட்டை முற்றுகையாகி இருக்கிறது. உள்ளே ஜனங்கள் நம்மை எதிர்க்கிறார்கள். கோட்டைத் தளபதி துரோகம் செய்திருக்கிறார். இந்த வேளையில் யாரோ ஒருத்தி தன்னை பழைய மகாராஜாவின் மகள் என்று சொன்னால், இதெல்லாம் என்னவென்று தோன்றுகிறது? யாரோ ஒரு பெரிய சதிகாரன் இத்தனைக்கும் பின் நின்று இவைகளை நிகழ்த்துகிறான் என்றுதானே தோன்றுகிறது? இதில் தாட்சண்யமே வேண்டாம். இந்தப் பெண்ணை விட்டுவைத்தால் ஆபத்து. இதனால் எத்தனை தலைவலிகள் நமக்குக் கிளம்புமோ! மகாராஜா! யோசிக்காதீர்கள்! இவளை இன்று இரவே முடித்து விடுவோம்." என்றார் லிங்கமர்.

"ஏன் முடிக்க வேண்டும்? சிறை வைத்தால் என்ன?" என்றார் வேங்கடர்.

"நாளை கோட்டை உடைந்து உள்ளே கலவரம் நடக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்! இதுபோல் ஒரு பெண் இருப்பது தெரிந்தால் என்னென்னவோ நடக்கும். நமது மகுடங்களுக்கே ஆபத்து வரும்" என்றார் லிங்கமர்.

வேங்கட ராஜாவால் மேலே பேச முடியவில்லை. அவர் ஒரே பதற்றத்தில் இருந்தார். எந்தச் சமயத்தில் என்ன நேருமோ என்ற பயம். இந்தச் சமயத்தில், ஒரு பெண் அவரிடம் அடைக்கலமாகி வந்திருக்கும் நேரத்தில்.....

"மகாராஜா! தாங்கள் ஏன் தயங்குகிறீர்கள்? இந்தப் பெண்ணை யார் அழைத்து வந்தார்கள்?"

"ஸ்ரீரங்கன்."

"யார்? தங்கள் தம்பியின் மகனா?"

"ஆமாம்."

"பேஷ்! பேஷ்!" என்று தலையை ஆட்டினார் லிங்கமர். "ஸ்ரீரங்கன் கொண்டு வந்தாரா? அப்போதே நினைத்தேன் மகாராஜா! அவரைப் பாதுகாப்பில் வைத்திருக்கிறோம். அதை மீறி அவர் இங்கே வந்து தங்களிடம் பேசியதை நான் நம்பவில்லை. இப்போது அதை நினைத்தால்கூட எனக்குச் சந்தேகம் தோன்றுகிறது."

"என்ன, சொல்லு!" என்றார் வேங்கடர். ஏற்கனவே அவர் உடலில் ஆட்டம் இருந்தது.


"ஸ்ரீரங்கர் வெளியே போய் சண்டை செய்யத் தங்களிடம் அனுமதி கேட்டாரே, அதுவே சூழ்ச்சியாக இருந்தால்...."

வேங்கடர் திடுக்கிட்டு விழித்தார். "லிங்கமா! அவன் அப்படிச் செய்ய மாட்டான்."

"சொல்கிறீர்கள்! ஒரு நெருக்கடி நேரத்தில் ஒருவர் என்ன செய்வார், என்ன செய்ய மாட்டார் என்பதை யாரும் உறுதியிட்டுக் கூற முடியாது. ஸ்ரீரங்கன் வெளியில் போவது என்பது திம்மராஜாவோடு சேருவதற்குத் தான் என்று தெரிந்தால்...."

வேங்கடருக்கு நெற்றி சுருங்கியது. தலைமேல் கை வைத்தார். "லிங்கமா! எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. என்னை விட்டுவிடு!" என்றார்.

அவர் நிலையைப் புரிந்த லிங்கமர் "மகாராஜா! கவலைப்படாதீர்கள்! இந்தப் பெண்ணைப் பாதுகாப்பில் வைக்கிறேன். மற்றவைகளை நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றார்.



சேலம் ஸ்டாண்டர்ட் ரைஸ்மில் ஸ்டோர்ஸ் உரிமையாளர் ஸ்ரீ R. வைத்தியநாத அய்யர் குமாரி ஸௌபாக்கியவதி **விஜயலக்ஷ்மிக்கும்** ஓய்வு பெற்ற யாழ்ப்பாணம் (ஸ்ரீலங்கா) கல்லூரி முதல்வர் ஸ்ரீ S. ஸ்ரீனிவாஸய்யர் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி **S. பாலகிருஷ்ணனுக்கும்** திருமணம் சமீபத்தில் சேலத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது. வாழ்க மணமக்கள்.

''உன் இஷ்டப்படி செய்'' என்றார் வேங்கடர்.

சுவர்ணமுகி அந்தப்புர அறை ஒன்றில் பாதுகாப்பில் வைக்கப்பட்டாள்.

வேங்கடரும் லிங்கமரும் மந்திராலோசனை அறையில் உறங்காமல் விழித்திருந்தார்கள். அவர்களோடு பின்னர் தாமர்ல வேங்கடப்பனும், அவர் தம்பி ஐயப்பனும் சேர்ந்து கொண்டனர்.

எல்லோரும் கோட்டைத் தளபதி குமரேசன் எப்படியும் வருவார் என்று எதிர்பார்த்திருந்தார்கள்.

நடு இரவு வரை அவர் வராமல் போகவே குமரேசன் துரோகம் செய்துவிட்டார் என்று அவர்கள் உறுதி செய்தார்கள்.

உடனே அவர்கள் அவசரமாக ஆலோசித்து இரு தீர்மானங்கள் எடுத்தார்கள்.

ஒன்று, இரவுக்கிரவே வேட்டையாடிக் குமரேசனைக் கொல்ல வேண்டியது.

இரண்டு, எதிரிகளைத் தாக்குவதற்காக வெளியே பாய்வதற்குச் சித்தமாக இருக்கும் ஸ்ரீரங்கனைத் தடுத்து நிறுத்தி: அவனையும் பாதுகாப்பில் வைப்பது!

குமரேசனைத் தேடி தாமர்ல சகோதரர்களும், ஸ்ரீரங்கனைத் தேடி லிங்கம நாயகரும் புறப்பட்டார்கள்.

குமரேசன் மேற்குக் கோட்டை வாசலில் தனக்குச் சாதகமான நூறு பேர் படையோடு ஒளிந்திருந்தான்.

தாமர்ல சகோதரர்கள் உளவறிந்து அவர்களைத் திடீர்த் தாக்கு தாக்க, வெகுசீக்கிரம் அந்த வாசலின் உட்புறம் பெரிய பூசல்!

தாமர்ல வேங்கடப்பன் உள் வாசலையும், அதை அணைத்துள்ள கட்டடங்களையும் சேர்த்துப் பிணைத்து ஒரு சங்கிலி போல் பாதுகாப்பை உண்டாக்கி விட்டார்.

எனவே, வெளியே போக வழியில்லாமல் உள்ளே பாய யத்தனித்த நூறு பேர்களும் வெவ்வேறு பகுதிகளில் மும்முரமாகத் தாக்கப்பட்டுத் தங்கள் உயிர்களை இழந்தனர்.

குமரேசன் கடைசி நிமிஷத்தில் தப்பித்துக் கொத்தளத்தில் ஏறி, தொங்கு பாலத்தின் சங்கிலியை வெட்டுவதற்கு அவசரமாக முனைந்தார்.

ஆனால் அவர் மீது விட்டெறியப்பட்ட எரிகணை அவரையும் சேர்த்துக்கொண்டு அகழியில் விழுந்தது.

அடுத்து, கிழக்குக் கோட்டை பாரிசத்தில் தனது சிறு படையுடன் ஸ்ரீரங்கன் காத்திருக்கும் வேளையில்,

லிங்கம நாயகர் அவனை வந்து எழுப்பியது ஆச்சரியமாக இருந்தது.

''ஏன் சுவாமி, மகாராஜா மனம் மாறி விட்டாரா?'' என்றான்.

''ஆமாம், உடனே உங்களை அரண்மனைக்கு அழைத்து வரச் சொன்னார்'' என்றார் லிங்கமர்.

சற்று ஆச்சரியமுடன் எழுந்து ஸ்ரீரங்கன் அவரைப் பின்பற்றினான்.

அரண்மனைக்குள் நுழைந்த பிறகு லிங்கமர் ராஜ கூடம் போகாமல் வேறு எங்கேயோ போவதைப் பார்த்து,

''சுவாமி, எங்கே?'' என்றான்.

''இப்படி வாருங்கள் சொல்கிறேன்'' என்றார் லிங்கமர்.

இருவரும் பாதுகாப்பு அறைகளை நெருங்கினபோது ஸ்ரீரங்கனின் உதடுகள் துடித்தன.

''எங்கே மகாராஜா!'' என்றான்.

''இங்கே இருங்கள்! வருவார் அவர்'' என்றார் லிங்கமர்.

''பாதுகாப்பு அறையிலா?'' என்றான் ஸ்ரீரங்கன்.

''ஆமாம்!'' என்றார் லிங்கமர்.

விருட்டென்று வாளைஉருவினான் ஸ்ரீரங்கன்.

''ஹேய்'' என்று ஓங்கி எச்சரிக்கை செய்து பாதுகாப்பாளர்கள் பளீர் என்று அவன் மீது பாய்ந்தார்கள்.

ஸ்ரீரங்கனின் வாள் வெளியே வருமுன் அவனை ஒரே பொத்தாகப் பொத்திக் கீழே தள்ளினார்கள்.

பிறகு அவனது வெகுண்ட உருவத்தை நெட்டித் தள்ளி அறைக்குள் தள்ளி அதன் இரும்புக் கதவுகளைப் பூட்டினார்கள்.

ஸ்ரீரங்கனுக்கு ஆத்திரம் ஓர் இரும்புக் குண்டு போல் வீசி அடித்தது.

''ஏ, லிங்கமா, துரோகி! மகாராஜாவைக் கொன்று சாம்ராஜ்யத்தை அபகரிக்கப் பார்க்கிறாயா? நீ உருப்படுவாயா? துரோகி'' என்று கூப்பாடு போட,

மேலே காற்றுப் போக்கி வழியாக வந்த அவன் குரல் அரண்மனை எங்கும் வீசி அடித்தது.

(தொடரும்)

''அவரை மட்டும் ஏன் ரெண்டு தடவை இண்டர்வியூ பண்றார் டைரக்டர்?''

''டபுள் ஆக்‌ஷன் ரோலுக்கு நடிக்க வந்திருக்காராம்.''

- எஸ்.ஜெயராமன்



தண்ணீர் தண்ணீர்



அத்திப்பட்டு கிராமவாசிகளின் கண்ணீர்க்கதை திரைப்படமாகியுள்ளது.

A Classic

தண்ணீரில்லாக் கிராமங்கள் எத்தனையோ ஆயிரம். சுதந்திரம் பெற்று 34 ஆண்டுகளுக்குப் பிறகும் இன்னும் இந்தியாவில் உள்ளன. என்றாலும் தண்ணீர் ஓர் உருவகமே. அதைப் போன்று எத்தனையோ பல தீர்க்கப்படாத பிரச்னைகள்.

''மக்களே உழையுங்கள்! உழைப்பின்றி உய்வில்லை!'' அடுத்தடுத்து வரும் சுதந்திர தின அறிவுரை.

அத்திப்பட்டு வாசிகள் உழைப்புக்கு அஞ்சவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்க முற்படும்போது அரசும் சாதி அடிப்படை அரசியலும் அவர்கள் எல்லோரையுமே முடமாக்குகிறது. படத்தில் கேணியில் உள்ள விஷ நீரைக் குடித்து முடமாவது ஒரிருவர் மட்டுமே!

சமுதாயப் பிரச்னையோடு தமிழில் நாடகமும் சினிமாவும் மறுபடி வராதா என்று ஏங்கிய கட்டத்தில் மறுமலர்ச்சியாகத் தோன்றியது தண்ணீர் தண்ணீர் நாடகம்.

ஒரு தேர்ந்த டைரக்டர் ஒரு தரமான நாடகத்தை எப்படி உன்னதத் திரைப்படமாக்க முடியும் என்பதை உணர்த்துகிறது தண்ணீர் தண்ணீர் சினிமா.

நாடகக் கலைஞர்களையே பெரும்பாலும் பயன்படுத்திய துணிவு; சினிமாவுக்கென 'காம்ப்ரமைஸ்' செய்யாமல், சமுதாயப் பிரச்னை என்று கூறிக் குளிர் காயாமல், நாடகத்தின் இலக்கியத் தரத்தை இழிவுபடுத்தி விடாமல் இருக்கும் நெஞ்சுறுதி; ரசமான ஒரிரு மாற்றங்களைக் கதையில் செய்து சுவை கூட்டியுள்ள ஆற்றல் — இவை பாலசந்தர்.

வசன உச்சரிப்புக்கு நாயரைப் பயன்படுத்திக் கொண்டது. 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விட்ட' சாகசம்.

சரிதா கட்டை குட்டையாக இருந்தாலும் நடிப்பிலே உச்சாணிக்கு உயர்ந்துவிடுவார் என்பதைக் கண்டு கொண்ட திறமை. பார்க்கப் போனால் இங்கே தோற்றப் பொலிவு முக்கியமில்லை. அது அடிப்படை நோக்கிலிருந்து நம்மைத் திசை திருப்பி விடுகிற draw back ஆகவும் இருக்கலாம்.

பாலை சத்தியாக்கிரஹம், பகைமைப் புரட்சியெனக் கட்சிக்கொடியின் அமோக விளைச்சல், அபிஷேக நீர் கோயிலுக்கு வெளியே வடிய பயல்கள் குளித்துக் கும்மாளமிடல் போன்ற பலப் பல டைரக்ஷனல் டச்சஸ்.

கருகருப்பான காமிரா. அடிக்கடி வரும் இரவு நேரக் காட்சிகளையும் வண்ணப்படமாக்கிய திறமை. (லோகநாதன்). பசுமையைத்தான் காமிரா எழிலுறக் காட்டும்; வறட்சியையுமா!

புடைப்பதும், இடிப்பதும், பாட்டுக்கேற்ற தாளத்தில் அமைய மலியின் சமையலறைச் சங்கீதத்தை நினைவூட்டினாலும் இசையும் பாடல்களும் சோடையில்லை.

வாத்தியாரின் (ஆர்.கே. ராமன்) அமைதி, அரசியல்வாதியின் (சந்தானம்) ஆவேசம், போலீஸ்காரரின் (ராதா ரவி) கடமையுணர்வு இன்னும் குமரன், ராஜ்மதன், பிரசன்னா சீனிவாசன், வீராசாமி, செல்வி எல்லாரும் கோமலின் ஹாஸ்ய வசனத்தில் தங்களை இழக்கும்போது கிண்டலோ கிண்டல்! குத்தலோ குத்தல்!

நமது அரசியல்வாதிகள் சுரணையற்றவர்களாக இருப்பது நல்லதே! இல்லையெனில் வசனம் பல தற்கொலைகள் நிகழக் காரணமாகும்!

இரண்டு லட்சியங்கள் என்றார் பாலசந்தர். (1) தண்ணீர் தண்ணீர் (2) பாரதியார். ஒரு லட்சியத்தில் அமோக வெற்றி!

கமர்ஷியல் கண்ணோட்டத்தை அறவே ஒதுக்கிய ஒரு புதிய பரிணாமத்தில் பாலசந்தர். மேன்மேலும் இப்படிப்பட்ட பல படங்களுக்காக அடங்காத் தாகம் ஏற்படுத்தும் பாலசந்தர்.

இந்தியாவின் சிறந்த விருதுகளை மட்டுமின்றி சர்வதேச விருதுகளையும் இப் படத்துக்காகப் பெறவேண்டிய பாலசந்தர்.

Balachander at his best!

-நளினி சாஸ்திரி; குட்டிகிருஷ்ணன்

மாபாரதக் கதையிலே வரும் சகுனி மாமன், வில்லன் பாத்திரங்களை யெல்லாம் வெல்லக்கூடிய மிகக் கொடிய வில்லனவான். வியாசர் அவனைச் சிறந்த போர் வீரனாகவும் கூறுகிறார். குருக்ஷேத்திரப் பூமியிலே அவனும் தன் ஆற்றலைக் காட்டிப் போர் புரிகிறான். ஆயினும் மாபாரதக் காப்பியத்திலே அவன் தனக்கென ஓரிடத்தைப் பெறுவது சூதாடும்திறமையினால்தான்!

வடமொழி பாரதத்திலே வியாச பெருமான் சகுனியைச் சாடவில்லை. வேறு பாத்திரங்களைக் கொண்டும் அவனை அவர் பழிக்கவில்லை. சில இடங்களிலே அவனுடைய திறமையைக் கவர்ச்சிகரமாக வருணிக்கவும் செய்கிறார்.

வியாச பாரதத்துக்குத் தமிழில் வழிநூல் செய்த வில்லிபுத்தூரார் கூட, சகுனியை அதிகமாகச் சாடவில்லை. 'வசையை இசையாகக் கொள்வோம்' என்று கூறியதோடு

சகுனியின் சூது



ம.பொ.சி

விட்டு விட்டார். வேறு பாத்திரங்களைக் கொண்டும் அந்தச் சூதாடியைப் பழிக்கவில்லை.

வியாசரிடமிருந்தும் வில்லியிடமிருந்தும் சகுனியைப் பொறுத்தவரை பாரதியார் வேறுபடுகிறார். கொடுமையையும் கொடியோரையும் கண்டால் வெஞ்சினம் கொள்பவர் நம் விடுதலைக் கவி. அதனால் சகுனியை வாய்ப்பு நேர்ந்த இடங்களிலெல்லாம் சாடுகின்றார்.

''தீய சகுனி''
''கள்ளச் சகுனி''
''புலைநடைச் சகுனி''
'' நன்றறியாச் சகுனி''
''பீடிழந்த சகுனி''
''மாயச் சகுனி''
''மோசச் சகுனி''
''அருளற்ற சகுனி''

என்றெல்லாம் வசை பாடுகின்றார். வில்லன்களைச் சாடுவதிலே கம்பன் கைதேர்ந்தவன். பாரதியாரோ கம்பனையும் வென்றுவிடுகின்றார்!

மன்னன் தருமன் சக்கரவர்த்தியின் நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொண்டதைக் கண்டு பொறாமை கொண்ட துரியோதனன் அம்மாமன்னனுடைய ஆட்சியையும் செல்வங்களையும் கைப்பற்றுவதற்குச் சகுனி மாமனிடம் ஆலோசனை கேட்கிறான். அந்தக் கொடியவன் போர் வழியில் பாண்டவரை வெல்ல முடியாது என்று சொல்லி, பகடைக் காயை உருட்டும் சூதாட்டத்தின் மூலம், தருமனைத் தான் வென்று காட்டுவதாகக் கூறுகிறான்.

அஸ்தினபுரத்திலே அழகிய மண்டபம் ஒன்றை அமைத்து, அதைக் காண வரும்படி பாண்டவர்களை அழைக்க வேண்டும் என்று சகுனி துரியோதனனுக்கு ஆலோசனை கூறுகிறான். அழைப்பைத் திருதராஷ்டிரனைக் கொண்டே விடுக்க வேண்டும் என்பதும் அவனுடைய ஆலோசனை.

சகுனியும் துரியோதனனும் தங்கள் சூழ்ச்சித் திட்டத்துக்கு ஆதரவு தேடப் பிறவிக் குருடரான திருதராஷ்டிரனை அணுகுகின்றனர். தருமன் நடத்திய ராஜசூய யாகத்திலே தனக்கு நேர்ந்த அவமான நிகழ்ச்சிகளைத் துரியோதனன் தன் தந்தையான திருதராஷ்டிரனிடம் கூறுகின்றான். யாகத்தின்போது தான் அங்குமிங்குமாக நடமாடிக் கொண்டிருந்த நிலையிலே தடுக்கி விழுந்தபோது அதைக் கண்டு பாஞ்சாலி சிரித்ததையும் சொல்லி, தன் வேதனையைத் துரியோதனன் வெளிப்படுத்தி, சூதாடுவதற்குத் தருமனை அழைக்குமாறு தந்தையை வேண்டுகிறான்.

பாஞ்சாலி சபதத்தின் ''முகவுரை''யில் திருதராஷ்டிரன் பற்றி பாரதியார் கூறியிருப்பது வருமாறு:

'' இந்நூலிடையே திருதராஷ்டிரனை உயர்ந்த குணங்களுடையவனாகவும், சூதில் விருப்பமில்லாதவனாகவும், துரியோதனனிடம் வெறுப்புள்ளவனாகவும் காட்டியிருக்கிறேன். அவனும் மகனைப் போலவே துர்க்குணம் உடையவன் என்று கருதுவோரும் உளர். எனது சித்திரம் வியாசர் பாரதத்தைத் தழுவியது.''

இதிலே, ''அவனும் மகனைப் போலவே துர்க்குணம் உடையவன் என்றுகருதுவோரும் உளர்'' என்று பாரதியார் கூறுவது, வில்லிப்புத்தூராரை நினைவில் கொண்டேயாகும். அந்த மகா கவிக்குக் குறைவு ஏற்படக் கூடாது என்ற எண்ணத்தினால் அவருடைய பெயரைக் கூறாமல், ''கருதுவோரும் உளர்'' என்று பாரதியார் பொதுப்படையாகக் கூறிவிட்டார்.

வியாச பாரதத்திலோ, சூதாட்டத்தில் துரியோதனனுக்குப் பாஞ்சாலி அடிமைப் படுத்தப்பட்டதைத் திருதராஷ்டிரன் மகிழ்ச்சியோடு வரவேற்றான் என்பது புலனாகின்றது.

இந்த இடத்தைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் திருதராஷ்டிரனைப் பாண்டவர்பால் அன்புள்ள நல்லவனாகவே வியாசர் காட்டியுள்ளார். இவர்கள் இருவரிடமிருந்தும் வேறுபட்டு பாரதியார் படைத்த பாஞ்சாலி சபதத்தில் திருதராஷ்டிரன் பல மடங்கு உயர்ந்தவனாகக் காட்சியளிக்கிறான்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone : 431543)
Assistant Editor: P.S. Mani, Lay-Out Artist: Kalpana, Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

மொரார்ஜீ ஃபேப்ரிக்ஸ்

ஏனென்றால் டிசைன்கள் எவ்வளவுதான் கண்ணுக்கு அழகாக இருந்தாலும் நல்ல அடிப்படை அம்சங்கள் அவசியம் இருக்க வேண்டும்



நீங்கள் மொரார்ஜீ மில்ஸ் வழங்கும் துணிகளை வாங்கும் போது பகட்டான டிசைன்கள், எடுப்பான வண்ணங்களுக்கு மேலான ஒன்று உங்களுக்குக் கிடைக்கிறது. அதுதான் அவற்றின் தரம். அந்த உயர்வான தரம்தான் மொரார்ஜீ செய்யும் ஒவ்வொரு இழையுடனும் கவனமாக பின்னப்பட்டு உருவாக்கப் பட்டுள்ளது. இன்று அது நூறு ஆண்டுகளுக்கும் மேலாக பூரணத்வம் பெற்று அற்புதக் கலையாக விளங்குகிறது.

ஏனென்றால் நாங்கள் டிசைன்கள் எவ்வளவுதான் கண்ணுக்கு அழகாக இருந்தாலும் நல்ல அடிப்படை அம்சங்கள் அவசியம் இருக்க வேண்டும் என்று உறுதியாக நம்புகிறோம்.

சூட்டிங்குகள்
- **ஷர்ட்டிங்குகள்**
- **புடவைகள்**
- **ட்ரெஸ் மெட்டீரியல்கள்**

MORARJEE MILLS

தி மொரார்ஜீ கோகுல்தாஸ் ஸ்பின்னிங் & வீவிங் கம். லிட்.
டாக்டர் அம்பேத்கர் ரோடு, பரேல், பம்பாய் 400 012.

Contour Ads-MM-35g/81 Tam

மொரார்ஜீ மில்ஸ்